# மலர்

ஜூன் 1970

விலை சதம் -/50



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒரு கடிதம்!

—★—

'ஷனுபா மான்ஸில்'
ஓட்டமாவடி
28–4–1970.

''மலர்'' ஆசிரியருக்கு,

அன்பின் வணக்கங்கள்.

முற்றிலும் தீயசக்திகள் புடைசூழ - பவித்திர மான, புனிதமான இலக்கியமாக 'மலர்' பூத்துக் குலுங்குவதென்பது எத்துணை சிரமமான காரியமென் பது ஈழத்திலே இலக்கியப்பத்திரிகை என ஆரம் பித்து, அது பெற்றுத்தந்த அனுபவங்களுக்குள்ளாகிய அனைவருக்கும் தெரியவரும். இன்றுவரும் சில பத்தி ரிகைகளும் நாடிதளர்ந்ததாகவே காணப்படுகின்றன.

இதிலிருந்து – நமது இலக்கிய வளர்ச்சிக்கு – நமது எழுத்தாளனுக்கு – ஆக்கபூர்வமான காரியங்க ளில் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் நமது அந் தரங்கத்துக்கு உவப்பான பத்திரிகைக்கு எந்த அளவு நம்மவர்கள் ஆதரவு காட்டுகின்றார்கள் என்பது தெரியும்.

இந்நிலையிலும் - இலக்கிய ஓர்மத்துடனும் இலட் சிய நோக்கத்துடனும் மலர்ந்த உங்களின் பத்திரி கையின் வளர்ச்சி நமது முதலாந்தர வாசகனின் மனத்தைப் பொறுத்தது. அவன் மட்டும் மனம் வைத்தால் - நமது இலக்கிய வளர்ச்சியை சூன்ய மாக்க எண்ணும் எந்தத் தீயசக்தியையும் எதிர்க்கலாம் என்று சொல்லவும் வேண்டுமா?

இப்படிக்கு,

அன்பின்,

**எஸ். எல். எம். ஹனீபா**

நங்கையின் புன்னகையுடன் போட்டியிடும்
பொன்னகை தயாரிப்பவர்கள்

# நஜீமா நகை மாளிகை

## பிரதான வீதி கல்முனை



★ நாளும் பொழுதும் வளர்ந்து கொண்டிருக்கும்
நாகரிகத்தை அனுசரித்து
நவீன மோஸ்தரில் நகைகள் தயாரிக்கிறோம்.



★ ஓடர் நகைகளைக் குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கிறோம்.



★ நம்பிக்கையும் நாணயமும் நிறைந்த
சேவை ஆற்றுகிறோம்.



இன்றே விஜயம் செய்யுங்கள்.

**NAJEEMA JEWELLERS**

Main Street, **KALMUNAI.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிற் சிறந்த தங்க நகைகளுக்குத் தகுந்த இடம்

T. S. N. S. P. அருணசலம் செட்டியார்

# ஸ்ரீ முருகன் அன்ட் கோ

## 212, பிரதான வீதி,

## கல்முனை.

★ ஓடர் நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

★ இன்றே விஜயம் செய்து உண்மையை அறியுங்கள்.

தொலைபேசி இல: **301.**

புகைப்படத் தொழிலில் 30 வருட சேவையாற்றியுள்ள, முன்னோடி ஸ்தாபனம்.

# ராஜா ஸ்ருடியோ

◇ விசேட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

◇ அமெச்சூர் புகைப்படங்கள், சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

◇ பாஸ் போர்ட், ஐடென்டிகார்ட் படங்கள் தாமதமின்றிச் செய்து கொடுக்கப்படும்.

## ராஜா ஸ்ருடியோ

மெயின் வீதி, — மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் பாதங்களைச் சுகமாக அணைத்துக் கொள்கின்ற
காலணிகளை நாங்கள் செய்கிறோம்

ஆசிரியர்கள் மாணவர்கள்
அலுவலர்கள் குழந்தைகள் அனைவருக்கும்

பொருத்தமான, கவர்ச்சியான, சொகுசான, காலணிகளை
ஆடர் கொடுத்துச் செய்யவும்
அழகான மோஸ்தரைத் தெரிவு செய்யவும்.

இன்றே விஜயம் செய்யுங்கள்.

# ரேயல் ஷூ மார்ட்

**55, பிரதான வீதி, - மட்டக்களப்பு.**

உரிமையாளர்:- எம். எம். ஹனிபா.

எங்களிடம் யாழ்ப்பாணம் திறம் சுருட்டு, புகையிலை,
பீடி வகைகள், நல்லெண்ணெய், சாய்ப்புச் சாமான் முதலியன
குறைந்த விலையில் கிடைக்கும்.



# ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்

**கல்முனை.**

எல்லோரும் விரும்பிப் பாவிப்பது ஜெயகுமார் பீடி.
ஜெயகுமார் பீடி எங்களிடம் கிடைக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் இலக்கிய வட்டத்தின் இரண்டு புதிய நூல்கள்

1. கீரிமலையினிலே (கவிதை)
(கவிஞர் வீ. கந்தவனம்.)
விலை ரூ. 2.00

2. நாடகம் (நாடகநூல்)
(எ. ரி. பொன்னுத்துரை)
விலை ரூ. 1.50

கிடைக்குமிடம்:—

**தனலட்சுமி புத்தகசாலை**
சுன்னுகம்.

ஈழத்து நூல்களை வாங்கி
ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு
ஆதரவளியுங்கள்.

வீரத்தமிழன் கயிலை வன்னியனின்
வாழ்க்கை வரலாற்றைப்
பின்னணியாகக் கொண்ட வீரகாவியம்

கரவைக்கிழானின்

## 'தணியாத தாகம்'

(வரலாற்று நாடகம்)

இரண்டாம் பதிப்பாக மீண்டும்
வெளிவந்துள்ளது.
பிரதிக்குமுந்துங்கள்!
விலை ரூபா 2/—

கிடைக்குமிடம்:

**நாக. பத்மநாதன்**
இசங்கன்குளம்,
அடம்பன்.

கொழும்பு வாசகர் பேரவையினரால்
பூத்த புத்தாண்டிலிருந்து வெளியிடப்படுகின்றது.

# "தமிழமுது"

(முத்திங்கள் இலக்கிய இதழ்)

- ஈழத்துப் பிரபல படைப்பாளிகள்
- விமர்சகர்கள்
- அறிஞர்கள்
- மற்றும் பலர்

எழுதிய படைப்புக்களோடு வெளிவந்து விட்டது.
தனிப்பிரதி 60 சதம்.
ஆண்டுச் சந்தா 2 ரூபா 50 சதம்.

விபரங்களுக்கு :—

**"தமிழமுது"**
101, வேக்கந்தை வீதி, கொழும்பு— 2.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலர்

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்—பாரதியார்.


செடி: 1 | ஜூன், 1970 | மலர்: 4


## மகரந்தம்


**கதை** — பக்கம்

இறக்கம் ....................................வை. அஹ்மத் ... 11
எனக்கொரு ..............யோ. பெனடிக்ட் பாலன் ... 22
ஒரு தனி நெஞ்சம்........................''கவிதா'' ... 28
பாசம் நெஞ்சில் ஊறும் ............'அன்புமணி' ... 36
அதிர்ஷ்டம் ..................எஸ். சிதம்பரப்பிள்ளை ... 46

**கவிதை**

கவிதாஞ்சலி............................................ ... 12
கோபத்தை ஊட்டாதே ...'அன்பு முகையதீன்' ... 15
போதும் ..........................................முதல்வனுர் ... 18
அழகின் சோகம் ...மாவை. தி. நித்தியானந்தன் ... 19
வாழ்வரசி .......................திமிலைக்கண்ணன் ... 27
கூடல் ..........................................எருவில் !மூர்த்தி ... 42

**கட்டுரை**

மட்டக்களப்பு வழக்கு...அருள். செல்வநாயகம் ... 16
அல்லாமா இக்பால் ................யூ. எல். தாவூத் ... 20
சிறுகதை......................மு. ஹ. சேகு இஸ்ஸதீன் ... 43

**பிற**


ஸ்ரீங்காரம் ............................................ ... 6
வணக்கம் ............................................ ... 7
ஈழத்து ரத்தினங்கள் ................................ ... 8
படிப்பிலக்கியம் ...................................... ... 9
ஒரு அனுபவம்...................................... ... 14


கதைகள் யாவும் கற்பனை. கட்டுரை கவிதைகளில் உள்ள கருத்துகளுக்கு அவற்றின் படைப்பாளிகளே உரிமையாளர்.

—ஆசிரியர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எழுத்தாளரின்
வாழ்க்கைவிபரம் ஆகிய

அழகான மலரைக்
ஆவலாய் தேனையு
இன்பமாய் மணம்
ஈழத்தின் கிழக்கு ட
உன்னத மாக வந்து
ஊனத்தைக் களைந்து
எழுத்தினை ஏற்றமாக
ஏந்தியே எழில் நிறைந்து
ஐம்புலன் மகிழவைத்து
ஒப்பரும் பணிபுரிந்து
ஓயாது சேவை செய்து
ஔடதமாகி நிற்க,
அஃதே யென் ஆசைமலரே.

—புன்னகை வேந்தன், கல்முனை.

டுவதுபோலவே அவர்களின் முகவரி தொழில்,
வும். —நா. தண்டாயுதபாணி, யாழ்ப்பாணம்.

அரிய இலக்கிய விடயங்களை
ஆக்கி எமக்கு அளிக்கின்றாய்
இனிய சிறுகதை கவிதைகள்
ஈந்து எம்மைக் கவர்ந்திட்டாய்
உனையே என்றும் எதிர்பார்த்து
ஊண் உறக்கம் இழந்துவிட்டேன்
என்றும் எம்மைக் கவர்ந்திடவே
ஏந்திழையாள் நீ வரவேண்டும்
ஐயமகற்றி அறிவூட்டி
ஒற்றுமைதன்னை நிலைநாட்டி
ஓங்கும் புகழைப் பெற்றிடுவாய்
ஔவையாகி அமைந்திடுவாய்

—செல்வி உஷாதேவி, மட்டக்களப்பு.

நான் பலநாட்களாக எதிர்பார்த்த 'மலர்' வெளியானதையிட்டு மகிழ்ந்தேன் 'மலரி'ல் வெளிவந்துள்ள சிறுகதைகளும், கட்டுரைகளும், கவிதைகளும், அருமையாக அமைந்துள்ளன. இலங்கையில் தோன்றிய பத்திரிகைகளில் 'மலர்' முதன்மை ஸ்தானத்தைப் பெறும் என்பதிலும், வாடாமலராக விளங்கும் என்பதிலும் சந்தேகமில்லை.

—எஸ். பி. நந்தகுமார், கண்டி.

''மலர்'' இதழ்கள் கண்டேன், மகிழ்வு கொண்டேன். தமிழ் மணம் கமழும் 'மலர்' இலக்கியத்தேனை அள்ளி வழங்குகின்றது. கிழக்கே பரிதியோடு, ஒளிவெள்ளமேந்தி, பவனி வரும் 'மலர்' இல்லமெலாம் எழுச்சியெனும் தீபமேற்றி, தொண்டினை ஆற்றட்டும். எங்கள் ஒத்துழைப்பும் உதவியும் என்றுமுண்டு. —எஸ். இராஜம்புஷ்பவனம், அடம்பன்.

மாதமொருமுறை மலரும் தங்கள் மலரை நுகர்ந்து, மதுமயக்கம் கொண்டேன். பேதமெதுவுமேயின்றி பெரியதோர் சாதனையைத் தாங்கள் இப் புத்தாண்டிலே துவக்கியதையிட்டு மனம் உவக்கிறேன். வே. பரமராசா, சாவகச்சேரி.

பெப்ரவரி ''மலர்'' கண்டேன் உவகையுற்றேன். அரசியல், சினிமா, போன்றவற்றிற்கு முதலிடம் கொடுக்கும் பத்திரிகைகள் மலிந்துள்ள இக்காலத்தில் 'மலரை'ப் போன்ற ஓர் சஞ்சிகை வெளிவருவது ஆச்சரியம்தான். —விஜயா, கொழும்பு - 2.

தங்கள் 'மலர்' இதழினைக் கண்டேன் களிபெருவகை கொண்டேன். மகிழ்ச்சிக் கடலில் தத்தளித்தேன். கருணை யோகன், வ. அ. இராசரெத்தினம் செ. யோகநாதன், செங்கை ஆழியான், மஹாகவி போன்றோரின் படைப்பு தித்திக்கும் தெள்ளுதமிழாய் இனிக்கிறது.

—நெல்லை. ஐ. நடேஷ், கரவெட்டி.

ஈழத்தின் இலக்கிய வளர்ச்சிக்குக் களங்கும் விளைவிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் தென்னிந்தியச் சாக்கடைப் பத்திரிகைகளுக்குச் சவுக்கடி கொடுக்கும் வகையில் உங்கள் 'மலர்' மலர்ந்து மணம்வீசி பாரினில் பவனி வந்து கொண்டிருப்பதை யார் தான் பாராட்டாமல் இருக்கமுடியும். வாழ்க 'மலர்.' வளர்க உங்கள் இலக்கிய சேவை.

—தேவியின்தாசன், அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணக்கம்

இரண்டு மாதங்களாக ''மலர்'' வெளிவர வில்லை என்பதை அறிந்து பதறித் துடித்த நெஞ்சங்கள் பல.

'ஆகா! பார்த்தீர்களா? ''மலர்'' நின்று விட்டது!' எனத் தமது தீர்க்கதரிசனத்தையிட்டு அகமகிழ்ந்த இதயங்கள் சில.

'ஐயோ! ஒருவருடச்சந்தா போச்சே!' என்று அங்கலாய்த்த மனங்களும் உண்டு!

இவை அனைத்தையும்விட இரண்டு மாதங்களாக, நாம் தவித்த தவிப்பு இருக்கிறதே, அதை வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது.

''மலர்'' வெளிவருவதில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணங்களை இங்கு விபரிப்பது வீண் வேலை. அதனால் எவ்வித பிரயோசனமுமில்லை. ஆனால் இனிமேல் அப்படி நேராதவாறு பார்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம் என்பதை மட்டும் சொல்லிவைக்க விரும்புகிறோம்.

எக்காரணம் கொண்டும் ஈழத்தில் வெளி வந்த ஏனைய சஞ்சிகைகளைப் போல் ''மலர்'' நின்றுவிடக் கூடாது என்பதற்காக நாம் மேற்கொள்ளும் பகீரத முயற்சிகள் பல. வாசகர்களும் ஒத்துழைத்தால் ''மலர்'' நின்றுவிடாது என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறிவைக்க விரும்புகிறோம்.

ஏப்ரல் மாதத்திற்கெனத் தயாரித்த 'மலரே' ஜுன் மாதத்தில் வெளிவருகிறது. இம்மாதத்திற்கு முன் சேர்ந்த சந்தாதாரரின் சந்தாக்காலம் மேலும் இருமாதங்களுக்கு நீடிக்கும். இதுபற்றிய அறிவிப்பைப் பிறிதொரு பக்கத்தில் காணலாம்.

— ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து ரத்தினங்கள்

விளக்கில் எண்ணெய் தீர்ந்துவிட்டாலும், திரியிலூறிய எண்ணெய்க்காகவாவது தீபம் சற்று நின்றெரியும்.

(இ. நாகராஜன்:- "எரிந்ததிரி")

— சு. சதாசிவம், திருக்கேதீச்சுரம்

* * *

இருளைப் பிதுக்கி எடுக்க முனைகின்ற பட்டினத்து மின்சார விளக்குகள் ஒன்றை ஒன்று பார்த்து நகைத்துக் கொண்டாலும், இயற்கையின் சக்தியுடன் போட்டிபோட வலுவிழந்து கம்பங்களின் காலடிகளில் நிழலுருவக் கோடுகளை நான்கு திசைகளிலும் நீட்டுகின்றன.

(இ. நாகராஜன்:- "வர்ணஜாலம்")

* * *

அந்த வெயிலின் அகோரத்தில் அச்சுற்றுப்புறம் யாவுமே, நேர்மையற்ற விமர்சனத்தைச் சகித்துக் கொள்ளமாட்டாத எழுத்தாளனின் இதயத்தைப்போல வெந்து புழுங்கிக் கொண்டிருந்தது.

(வ. அ. இராசரெத்தினம்:- "பிரிவுபசாரம்")

— செ. நாகேந்திரன், மட்டக்களப்பு

* * *

வீட்டைச் சூழ்ந்துவரும் இருளை விழுங்கும் மெழுகுவர்த்தியின் ஒளியிலே சகல வஸ்துக்களும் துலாம்பரமாகத் தெரிகின்றன. ஆனால் ஒளியைத் தந்த மெழுகுவர்த்தியின் கதி? உருகி உருகித் தன் உருவத்தை அழித்துக்கொள்கின்றது. இதுதான் உண்மையான இலட்சியவாதிக்குரிய இலட்சணம்.

(யாழ்வாணன்:- "அமரத்துவம்")

— மு. கணபதிப்பிள்ளை, குருக்கள் மடம்.

## ஈழத்து எழுத்தாளர் வெளியிடும் நூல்களுக்கு இலவச விளம்பரம்

ஈழத்து எழுத்தாளர்கள், தனிப்பட்ட முறையில் ஈழத்தில் வெளியிடும் நூல்களுக்கு "மலர்" சஞ்சிகையில் இலவசமாக விளம்பரம் வெளியிடப்படும். இவ்வாறு விளம்பரம் பெற விரும்பும் எழுத்தாளர்கள், தாங்கள் வெளியிடும் நூலின் ஒரு பிரதியுடன் விண்ணப்பிக்கவேண்டும். 1-1-70 முதல் வெளிவரும் நூல்களுக்கு மட்டுமே இத்திட்டம் அமைவதாகும்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்

"உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்" —பாரதியார்.

செடி : 1 | ஏப்ரல் - மே 1970 | மலர் : 4 - 5


## படிப்பிலக்கியமும் படைப்பிலக்கியமும்

"மலர்" சஞ்சிகைக்குச் சந்தா சேர்க்குமுகமாகச் சமீபத்தில் பலபாடசாலைகளுக்குச்சென்றிருந்தோம். அங்கு நமக்கு கிடைத்த அனுபவங்கள் பலதரப்பட்டவை. அவற்றுள் சில அதிர்ச்சிதரக் கூடியவையாயுமிருந்தன.

நமது பாடசாலைகளில் உள்ள பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பலருக்கு இக்காலப்படைப்பிலக்கியம் பற்றி எதுவுமே தெரிந்திருக்கவில்லை. 'இலக்கிய சஞ்சிகை, சிறுகதை, கவிதை, கட்டுரை, ஈழத்து எழுத்தாளர்கள்' என்று நாம் பேச்சுவாக்கில் குறிப்பிட்டபோது எதுவுமே புரியாதவர்கள்போல் அவர்கள் நம்மை விநோதமாகப் பார்த்தனர். நமது எழுத்தாளர்களைப்பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியவில்லை. 'செங்கை ஆழியான்' செ. யோகநாதன், வ. அ. இராசரெத்தினம், மஹாகவி, 'அண்ணல்' அ. ஸ. அப்துஸ்ஸமது முதலிய எழுத்தாளர்களைப்பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லை. நமது நாட்டில் வெளியாகும் இலக்கிய சஞ்சிகைகளைப்பற்றி அவர்கள் கேள்விப்பட்டதுகூட இல்லையோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது நமது நாட்டில் வெளியாகும் 'சிரித்திரன்' 'மல்லிகை' 'இளம்பிறை' முதலிய சஞ்சிகைகளைப் பற்றியும் அவர்கள் அறிந்திருக்கவில்லை.

விஷயம் இவ்வளவுடன் நின்றுவிடவில்லை. இந்த விஷயங்களைப்பற்றிப் பேசுவது ஏதோ கௌரவக்குறைவான காரியம் என்பதுபோல, முகத்தைச் சுளித்துக் கொண்டு 'இதற்கெல்லாம் எங்களுக்கு ஏது நேரம்?' என்று அவர்கள் அலுத்துக்கொண்டனர்.

படித்தவர்கள்; இந்த நாட்டின் இலக்கியப் படைப்புகளைப்படித்து, விமர்சித்து, அபிப்பிராயம் சொல்ல வேண்டியவர்கள்; காசுகொடுத்து இந்த நாட்டு நூல்களையும், சஞ்சிகைகளையும் வாங்கி ஆதரித்து, இந்த நாட்டின் இலக்கிய வளர்ச்சிக்குத் துணைபுரிய வேண்டியவர்கள்; நமது எழுத்தாளர்களின் படைப்பாற்றல் குறித்துப் பெருமிதப்பட வேண்டியவர்கள்; பாவம் இப்படியொரு அறியாமையில் மூழ்கிக்கிடக்கிறார்களே என்பதை எண்ணும்பொழுது உண்மையிலேயே வேதனை ஏற்படத்தான் செய்கிறது.

ஆனால் இதையிட்டு இன்னும் சிறிது ஆழமாகச் சிந்தித்துப்பார்த்தால் இந்த அறியாமைக் குப்பின் ஒருநீண்ட சரித்திரம் இருப்பதுதெரியவரும்.

படித்தவர்கள் இக்கால இலக்கியப் படைப்பாளிகளை ஏளனக்கண்கொண்டு பார்ப்பதற்கும், அவர்தம் இலக்கிய முயற்சிகளில் அக்கறை கொள்ளாமலிருப்பதற்கும் காரணம், இக்காலக் கல்வி முறையில் ஓரளவு தங்கியிருக்கிறது எனலாம். இவர்களது அறியாமையின் ஆணிவேர் பலவருடத் தூக்கத்தின் ஆழத்தில் பதிந்து போயிருக்கிறது என்று கூறலாம். ஆம்.

இலக்கியம் என்றால் கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள் - மிஞ்சிப்போனால் அகநானூறு, புறநானூறு கலித்தொகை இவ்வளவும் தான் என்ற ஒரு தப்பபிப்பிராயத்தை, அந்தக் காலம் முதல் பாடசாலைகளில் இலக்கியம் போதித்துவரும் பண்டிதர்களும், புலவர்களும், தெரிந்தோ தெரியாமலோ மக்கள் மனதில் பதித்து விட்டிருக்கின்றனர்.

இன்றைய சர்வகலாசாலைகள், ஆசிரியகலாசாலைகள், கல்லூரிகள் பள்ளிக்கூடங்கள் மட்டுமல்ல காலம்காலமாக இங்கு நடைபெற்றுவரும் தமிழ் விழாக்கள், இலக்கிய விழாக்கள் முதலியவற்றிலும் அரைத்த மாவை அரைப்பதுபோல், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் திருக்குறள், முதலியன கிளிப்பிள்ளைப்பாடமாக ஒப்புவிக்கப்பட்டுவந்திருக்கின்றன. கண்ணகி சிறந்தவளா மாதவி சிறந்தவளா? கும்பகர்ணன் சிறந்தவனா விபீடணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தவஞ என்பன போன்ற கற்பனைச்சமர்கள் இன்று நேற்றல்ல, பல வருடங்களாக, பலநூறு இலக்கிய மேடைகளில், பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவில், பல லட்சம் தமிழர்கள் மத்தியில், மாபெரும் இலக்கியப்பண்டிதர் முதல் சாதாரண இலக்கிய மாணவன் வரை பல்லோராலும் நடாத்தப்பட்டு வந்திருக்கின்றன. —

ஆக, தமிழர்களுடைய இலக்கியம், அந்தக் காலத்திலும் சரி, இனி எந்தக்காலத்திலும் சரி இவ்வளவுதான் என்ற ரீதியில் ஆசிரிய — மாணவ பாடம் நடைபெற்றுக்கொண்டு வந்திருக்கிறது; நடை பெற்றும் வருகிறது.

படிப்பிலக்கியத்தில்—அதாவது இலக்கியத்தைப் படிப்பதில் — இவ்வளவு கவனம் செலுத்திய தமிழர்கள், படைப்பிலக்கியத்தில் — அதாவது இலக்கியத்தைப் படைப்பதில் ஒரு சிறிதும் கவனம் செலுத்தாமல் போனது ஏன்? மேல் நாட்டில் பண்டைக் கால ஷேக்ஸ்பியரின் படைப்புகளை எப்படி இலக்கியமாக மதிக்கிருர்களோ அதே போல் இக்கால பேர்ள். எஸ். பக்கின் படைப்புகளையும் இலக்கியமாக மதிக்கிருர்கள் மக்கள். அந்த நிலை தமிழர்கள் மத்தியில் ஏற்படாமல் போனது ஏன்?

ஒரே காரணம் — படித்தவர்கள் அங்கு படைப்பிலக்கியத்துக்கு, மதிப்புக் கொடுக்கிருர்கள். இலக்கியப்படைப்பாளிகளுக்கு மதிப்புக் கொடுக்கிருர்கள். இக்கால இலக்கிய முயற்சிகளுக்குப் பேராதரவு தருகிருர்கள். அதனுல் பெருந்தொகையான இலக்கியப் படைப்புகள் உருவாகின்றன. அவற்றுள் பல இலக்கிய அந்தஸ்தைப் பெறுகின்றன.

ஒரு முணுமுணுப்புக் கேட்கிறது.

''இந்தக்காலத்தில் என்ன இலக்கியம் படைக்கிருர்கள். வெறும் குப்பையைத்தான் எழுதிக் குவிக்கிருர்கள்' — பொறுப்பற்ற ஒரு அபிப்பிராயம் இது.

''இதெல்லாம் படிக்க நேரமில்லை!'' என்று சொல்பவர்கள் மேற்படி அபிப்பிராயம் தெரிவிக்க உரித்துடையவர்களாகமாட்டார்கள். இருப்பினும் மேற்படி கூற்றை ஏற்றுக்கொண்டு பதில் இறுப்போம்.

கம்பரும், ஷேக்ஸ்பியரும், தாகூரும், பாரதியும் எழுதும்போது 'இலக்கியம் படைக்கிறேம்' என்று சொல்லிக்கொண்டு எழுதவில்லை. பண்டைக் காலப் புலவர்கள் பாடும்போது 'இலக்கியம் இது' என்று கூறிக்கொண்டு பாடவில்லை.

காலம் அதை நிர்ணயித்தது.

பயிர்களைப் பேணிப் பாதுகாக்கவேண்டியது நமது பொறுப்பு பயன்தரும் விருட்சங்களாக அவை நிலைபெறுவது காலத்தைப் பொறுத்தது.

இக்காலப் படைப்புகளை இலக்கியம் என்று புரிந்து கொள்ள முடியாமல் சில படித்தவர்கள் மயக்கம் அடைவதற்குக் காரணம் இக்கால இலக்கியத்தின் உருவம்தான் என்று நினைக்கிறேம். இது மிகவும் வேடிக்கையானது. பண்டைக்காலத்தில் இலக்கியத்தின் வடிவம் செய்யுள் உருப்பெற்றிருந்தது. ஆனுல் இக்கால இலக்கியத்தின் வடிவம் சிறுகதை, நாடகம், நாவல் உருவில் அமைந்திருக்கிறது. அவ்வளவுதான் வித்தியாசம். இதைப் புரிந்துகொள்ள முடியாமல் இக்காலப் படைப்பிலக்கியத்தை அலட்சியப் படுத்துவதை அறியாமை என்று கூருமல் வேறு எப்படி அழைப்பது?

மெத்தப்படித்த மேதைகளுக்கு ஒரு விஷயத்தை இந்த இடத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேம்.

ஒரு காலத்தில், தமிழ்ப் பெருங்குடி மக்கள், ஆங்கில நாகரிகத்தில் மூழ்கி, தமிழ் மொழியையும், தமிழ்ப்பண்பையும் அழித்துக்கொண்டிருந்தார்கள். (கணிசமான அளவு இப்போதும் அழித்துக்கொண்டிருக்கிருர்கள்) அப்போதெல்லாம் அவர்கள், தமிழ்பேசுவதை அகௌரவமானதாகவும் தமிழ் உடை அணிவதை அநாகரிகமானதாகவும் கற்பித்துக்கொண்டு பெருமைப்பட்டார்கள். கிட்டத்தட்ட இதேநிலையில்தான் இன்றைய படைப்பிலக்கியத்தைப் பழிக்கும் தமிழர்களும் இருக்கிருர்கள்.

கதைகள் படிக்க நேரமில்லை என்றும், கதை எழுதுபவர்களைத் தெரியாதென்றும் கூறுவதைப் பெருமையாகக் கருதுபவர்கள், நம் இனத்தின் இலக்கியத்தை அழித்துக்கொண்டிருக்கிருர்கள் என்பதை மட்டும் மறந்துவிட வேண்டாம்.


எனவே, படித்தவர்களாகிய உங்களைக் கேட்கிறேம். ஆசிரியர்களே, மாணவர்களே, அரசாங்க உத்தியோகத்தர்களே! இக்காலப் படைப்பிலக்கியத்தை, வளர்ப்பதும், வளப்படுத்துவதும் உங்கள் கைகளிலேயே தங்கியிருக்கிறது. உங்களைத் தவிர வேறு எவரும் இப்பணியை உரிமையுடன் செய்யமுடியாது. மாலைத் தினசரிகளைப் படித்து மகிழும் மைனர்களோ, தேசியத் தினசரிகளின் பின் பக்கத்தைத்தேடும் செக்ஸ்பித்தர்களோ, கலைக் கதம்பம், கலையமுதம் படிக்கும் காளைகளோ, நிச்சயமாக இலக்கியத்தை வளர்க்க முடியாது. நீங்கள்தான் — நீங்கள் மட்டும்தான் அதைச்செய்ய முடியும். எனவே —

ஈழத்து எழுத்தாளர்களுக்கு மதிப்பளியுங்கள்; ஈழத்து எழுத்தாளர் படைப்புகளைத் தேடிப்படியுங்கள், ஈழத்து இலக்கிய சஞ்சிகைகளுக்கு ஆதரவு தாருங்கள்; இக்காலப் படைப்பிலக்கியத்தை ஊக்குங்கள்; பண்டைய இலக்கியப் படைப்புகளையிட்டு நாம் பெருமைப்படுவது போல், நம் காலத்து இலக்கியப் படைப்புகளையிட்டு நம் வருங்கால சந்ததியினர் பெருமைப்படுவதற்கு வாய்ப்பளியுங்கள்; பிறமொழிகளில் புதுப்புது இலக்கியங்கள் தோன்றுவதுபோல் நம் தமிழ்மொழியிலும் புதுப்புது இலக்கியங்கள் தோன்ற வழி வகுங்கள். கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள் இவற்றுக்கு அப்பாலும் நமது இலக்கியத்தின் எல்லை விரிவடைய ஒத்துழையுங்கள்!

— ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருவகக் கதை.




தன்னம்பிக்கையுடன் இயங்கும் மனிதன்; உயிரோட்டத்தின் வெற்றிக்களிப்பில் இராணுவப் பீடுநடைபோடும் எருதுகள்; பொறிமுறைகளின் கணிதக் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் வண்டி. எல்லாமாகச்சேர்ந்து அசையும் உழைப்பு...

எருதுகளை மனிதன் முடுக்கிவிட, வண்டி தானாக உருளுகிறது. மனிதனுள் தானின்றி எதுவும் இயங்காது என்ற மங்கிய மன அசைவு. அவன் கத்துகிறான்; தொண்டையில் நீரில்லை. நா வரண்டுவிட்டது. அவனுக்கு வேகம் போதாது. கை துவரந்தடியை வீசி ஆஞ்ஞாபிக்கின்றது. 'சுள்'ளென்ற வேதனை, எருதுகள் பொருமுகின்றன.

''மனிதன் அறிவு என்ற ஒன்றால் ஏதோ சாதிப்பதாகச் சொல்கிறார்கள்; பகுத்துணர்வதாகச் சொல்கிறார்கள். அப்படி ஒன்றுமில்லை. நாங்களும் பகுத்துணரத்தான் உணர்கிறோம். அவனும் எங்களைப்போன்ற பெரிய ஒரு மிருகம். இரண்டு கால்களால் நடக்கவும், கைகளால் வேலை செய்யவும், வாயால் பேசவும் பழகிக் கொண்ட மிருகம்......''

வண்டிக்காரன் மனிதன். அவனுக்குப் போக வேண்டிய தூரம் வெகு தொலைவில் இருப்பதான மயக்கம். பொழுது மேற்கு வாயிடை விழுமுன் இருப்பிடம் சேரவேண்டுமென்ற அவசரம் வேறு.

''த்தா! இந்தச் சனியன்களோட கத்திக்கத்தி சீவன் போகுது. நேரம்போவது இந்த இழவுகளுக்கு விளங்குதில்லையே!'' அவன் தனக்குள் முணுமுணுத்துக் கொள்ள, உள்ளத்தின் வேகம் கைகளைச் சொடுக்க, இரண்டினதும் 'மூட்டான் முட்களை' அழுத்தி விடுகிறான்.

''நான் மட்டும் இல்லை என்றால் இந்த மாடுகள் நடக்காது.'' மனித சிந்தனை சுய வெளியில் பரவி,மறைகிறது.

பாதையின் ஏற்றத்தைக் காண்கையில், முயற்சிக்கூக்குரல் அவனுடைய கண்டத்திலிருந்து பீறிட, வண்டி துரிதமாகக் கீழ்நோக்கி விரைகின்றது. வண்டியின் உயிரற்ற ஒத்துழைப்போடு, சுமையின் அழுத்தம்; வலிமை கூட்டி எருதுகள் இழுக்கின்றன. ஏற்றம் ஓடிமறைய, சமபாதை வந்து, இறக்கம் என்று பாதை கீழாகச் சரிகின்றது. அவன் நிதானிக்கின்றான், இறக்கம்! வேகத்தைக் கூட்டும் ஆவல் தூண்டப்படுகின்றது. எருதுகளின் களைப்போ, பாரவண்டியின் அழுத்தமோ பற்றிச் சிந்திக்கவியலா அவசரம். மூக்கணாங்கயிறு தன்னிடத்தில் இருக்கும்போது எதுவும் நடக்காது என்ற எண்ணம்.

வண்டி இறக்கத்தில் இறங்குகின்றது. எருதுகளை உற்சாகப்படுத்தும் குரல் அவனிடத்தில் ஓங்குகின்றது. வண்டியின் பாரம் முன்னே ஊன்றுகின்றது. சமநிலை பாதிக்கப்படுகின்றது. 'சடார்'ரென்ற பெருத்த ஓசை. மனிதனின் கட்டுப்பாட்டை மீறி அங்கே ஏதோ நிகழ, வண்டி குடைசாய்கின்றது. எருதுகளும் மனிதனும் தடுமாற... கட்டுக்கடங்காத நிலை...

கீழே விழுந்த மனிதன் மேலே பார்க்கிறான்; வேதனையோடு முனகுகிறான் ..... அங்கே யாரோ தன்னைப்பார்த்து முறுவலிப்பதான பிரமை..... அவன் வேதனையோடு தலை குனிகின்றான்.

*1962ம் ஆண்டுமுதல் எழுதிவருகிறார் வை. அஹ்மத். 1965ம் ஆண்டு 'தினபதி' நடாத்திய அகில இலங்கைரீதியான சிறுகதைப்போட்டியில் ''முக்காடு'' என்ற இவரது சிறுகதை பரிசுபெற்றுப் பரபரப்பூட்டியது. ''வானொலி மஞ்சரி'' சிறுகதைப் போட்டியில் 'ஓ! அதனாலென்ன'' என்ற சிறுகதை தெரிவு செய்யப்பட்டுள்ளது. ''இதுவரை நான் எழுதியது சொற்பமே என்றாலும், அனுபவமும் ஆற்றலும் கூடும்போது என்னாலும் சிறந்த இலக்கியப் படைப்புகளை உருவாக்கமுடியும்'' என்றுகூறும் இந்த இளைஞரின் கூற்று ஏனையஇளம் எழுத்தாளர்களுக்கு ஒரு முன்மாதிரியாகும் — ஆசிரியர்.*

**வை. அஹ்மத்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரே நீ மலர்க !

—★—

மலரும் மலரே நீ வருக — புது
  மணமொடு மகிழ்வையும் நீ தருக
'கலரு'ம் காதலும் சினிமாவும் — எனும்
  கசடுகள் நீங்கினை நீ வருக
உலருந் தமிழ்மண் அதனிடையே ஒரு
  ஒளிமுகை யாயினை நீ வருக
பலரும் களிகொள நீ வருக — நம்
  பைந்தமிழ் மலரே நீ மலர்க.

சோதனைப் புயல்பல வந்திடினும் — உன்
  சுந்தர முகமலர் கோணாதே
நீ தழல் மலரென நின்றிடுவாய் — எம்
  நெஞ்சினில் மணத்தினை ஈந்திடுவாய்
பூதனிப் பூஇது என்றிடவே — இங்கு
  புதுவளங் காட்டிட நீ வருவாய்
போதினிற் கலைமக ரந்தந்தான் — நனி
  பொலிந்திட மலரே நீ மலர்வாய்.

—சொக்கன்.

## தவமகள் மலர்வந்தாள் !

—★—

முத்தமிழ் மணமது ஏந்திய மலரெனும்
மோகனப் பெண்வந்தாள் - நான்
சித்தமும் உருகித் தினந்தொறு மகிழச்
செந்தமிழ்ப் பெண்வந்தாள்.

உதயத் தெழுந்ததும் ஓர்ந்திட நாளும்
உஷையாய் மலர்வந்தாள் — என்
இதயத் தெழுந்தழும் எண்ணத்தைநாளும்
எழுதக் கவியீந்தாள்.

விழலெனும் வாழ்க்கை வாழாவண்ணம்
விழுமிய கருத்தளித்தாள் — நான்
வளமான வாழ்க்கை வாழும்வண்ணம்
வழியினைத் தேர்ந்தளித்தாள்.

தூயவர் போற்றும் தமிழ் மலராகச்
சுந்தரி மலர்வந்தாள் — என்
தாயெனும் படியாய் சரிவழிகாட்டும்
தவமகள் மலர்வந்தாள்,

செல்வி "தெய்வா திவாகரன்"

## — வாழும் மலர் —

தமிழ் வாழும் ஈழத்தில் தரத்தில் மிக்க
  தலையான தமிழேடு இல்லை என்ற
சுமையான துன்ப மெமை வாட்டும் நாளில்
  சுவையான ஒரு செய்தி மலரின் தோற்றம்
இமையாத சிந்தனைகள் முயற்சி வேகம்
  இரண்டினையும் துணைக்கொண்டு இவ் வேள்விக்கே
உமை நீங்கள் தந்திட்டீர் நாங்கள் உள்ளம்
  உவக்கின்றோம் மலருக்கே உள்ளம் தந்தோம்.

ஈழ மலர்த்தோட்டத்தில் வாசம் கூட்டும்
  இனிய மலர் வாசகவண் டுக் கூட்டங்கள்
சூழுமலர் தேன் கவிதை கதைகள் சிந்தும்
  சுகிர்த மலர் இரண்டிதழ்கள் பெற்றோம் ஆகா!
தாளு மலர்ந் தன்றன்றே வாடிப் போகும்
  நாண் மலர்கள் போலன்றி நீங்கள் தந்த
வாழுமலர் மிகப் பொலிவு சுவையும் கூட
  வாழுமது தமிழ் வாழும் காலம் எல்லாம்.

—நா. சுப்பிரமணிய ஐயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்ந்த மலரே!

மலரே மலரே மலர்ந்தாயே — நீ!
மட்டுமா நகரில் மலர்ந்தாயே
உலவும் புதுமை நிறைந்தாயே — இவ்
வுலகப் புகழைப் பெறுவாயே!

செந்தமிழ் சிந்தும் தேன்மலரே — என்
சிந்தை கவர்ந்த மென்மலரே
உந்தன் வரவால் உவக்கின்றேன் — உன்
ஒளியால் ஈழம் பொலிவுறுமே!!

மலர்ந்த மலரில் மதுவிருக்கும் — அம்
மயக்கும் எழிலில் தீதிருக்கும்
அலர்ந்த உனது இதழ்களிலோ — நல்
அறிவுத் தேனே மிகுந்திருக்கும்

வளரும் பேனு தூக்கிகளை — நீ!
வாரி அணைத்து மகிழ்கின்றாய்
களமாய்ச் சூழ்ந்த அறிஞருளே — எமைக்
கட்டிக் காப்பாய்! தேன்மலரே!!

எஸ். ஹபீப்பு முகம்மது,

## மணங்கமழ்க மலரே!

கருவாகிக் உருவாகி கமழ்ந்து நின்றாள்
திருவாகி உருவாகித் திகழ்ந்து நின்றாள்
பெரிதாக இனிதாகப் பிறர் வியக்க
பெருமை தரும் மலரென்ற பெயரைக்
கொண்டாள்;

அங்கமெலாம் தேன்சுரந்து அமுதமாக
நங்கையவள் மலரிடத்து கொண்டேன்
காதல்;
இங்கு சுவை அறிந்திட்ட ஈழத்தோர்கள்
ஈங்கு 'மலர்' நுகர்ந்திடுவர் எப்போதுமே.

தென்றலென மலர்ந்திட்ட மலர் இதழை
தேடிவரும் மக்களவர் பலபேராக
நன்கு மலர் தேனிதழை சுவைக்கவேதான்
நானிலத்தில் புதுவிருந்து அளிப்பார்
உண்மை.

உருண்டுசெல்லும் நாட்களிலே உறுதியோடு
புரண்டுவரும் மாதஇதழ் மலரதுவும்
திரண்டசுமை இலக்கியமாய்திகழ்ந்து நன்கு
தீர்க்காயுசாய் மனம் கமழ்ந்து வாழ்க!

—கேயன்ராஜ், ஆல்கரனேயா.

## 'மலர்'க் கன்னி வாழ்க!

தினையின் மாவொடு தெவிட்டாச் செந்தேன்
கலந்த பைந்தமிழ் கவிதைப் பாகு
புனைந்திடும் வேட்கை பொங்கி எழுந்ததால்
கவிதை யாத்திடக் கருப்பொருள் தேடி
நினைவெனும் துணையொடு நிம்மதிக் குழந்தையும்
கனவெனும் சாலையில் கற்பனை யூர்தியில்
பவனி—செல், வேளையில் பாதையில் ஓர் பெண்
கண்டேன் நின்றேன் கதை கேட்டிட்டேன்.

மங்கை நீ யாரென மலரென மொழிந்தாள்
அங்கவள் ஊரதை அடியேன் கேட்டேன்
ஐயனே அதுவா ''நடுநிலை'' என்றாள்
திங்களில் ஒரு முறை வருவேன், தேன் கமழ்
தீந்தமிழ்க் கவிதை; கதையொடு நாடகம்
இங்கிதமான கட்டுரை இவையெலாம்
பொங்குவேன் என்றாள். புதுமைப் பெண்ணே!

—செ. கந்தசாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு அனுபவம்

## வில்லனுக்கு ஒரு வில்லன்

நானும் எனது மகளும் இரண்டு வயது மகன் ராஜனும் ''அடிமைப்பெண்'' படம் பார்ப்பதற்காகச் சென்றிருந்தோம். ஒரே கூட்டம் ஆரவாரம் பேரிரைச்சல்; எங்களுக்குமுன் ரிப்ரொப்பாக ஆடை அணிந்த இரண்டு வாலிபர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடைய பார்வை எனக்குப் பிடிக்கவில்லை. பல்லைக் கடித்துக்கொண்டிருந்தேன். எனது சின்ன மகன் ராஜன் ரசித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். ஒருகட்டத்தில் எம். ஜி. ஆர். அசோகனது ஆட்களோடு சண்டைபோடும் சண்டைக்காட்சி வந்தது. கேட்கவேண்டுமா? அடியும் உதையும் குத்தும் ஏக அமர்க்களப்பட்டது. இந்த நேரத்தில் என் மடியில் இருந்த என் மகன் ராஜன் எழும்பிநின்று முன்னால் இருந்த ரிப்ரொப் ஆசாமிகளை "சண்டே" "சண்டே" என்று சொல்லி அவர்கள் தலைமயிரையும் சேட்டையும் பிடித்து இழுத்து சண்டைபோடத் தொடங்கிவிட்டான். எனக்கோ என்ன செய்வதென்று தெரியவில்லை. சிரிப்பை அடக்கிக்கொண்டு ''ராஜா போதும்டா சண்டை'' என்றேன். பலன் இல்லை. படத்திலே சண்டை முடியுமட்டும் என்மகன் அவர்களோடு சண்டை போட்டான். அதன்பின் முன்னாலிருந்த ரிப்ரொப் ஆசாமிகள் எங்கள் பக்கம் திரும்பவே இல்லை. குனிந்ததலை நிமிராமல் படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இந்த அனுபவத்தை நான் மறக்கவேமுடியாது.

திருமதி. எஸ். பேரின்பராசா,
வந்தாறுமூலை, செங்கலடி.

—※—

## தமிழ்ச்சுவை

சமீபத்தில் அடம்பன் திறந்த வெளி அரங்கில் அடம்பன் பெரியோரால் எடுக்கப்பட்ட வள்ளுவர் விழாவிற்குச் சென்றிருந்தேன். பேச்சாளர் ஒருவர் திருக்குறள் 'அ' வெனும் எழுத்தில் தொடங்கி 'ன்' என்ற இறுதிக் குறளில் முடிவடைகிறது. அகரம் தமிழெழுத்துக்களின் முதலெழுத்து; 'ன்' இறுதியெழுத்து'' என்று தன் சொற்பொழிவின் போது குறிப்பிட்டார்.

அடுத்ததாக எழுந்த வித்வான் நீ. மே. யோ. வேதநாயகம் B. A. அவர்கள் தமது சொற்பொழிவின் போது:-

"திருவள்ளுவருக்கு விழாவெடுக்கும் இவ்வூரும் ஒரு விதத்தில் குறளோடு தொடர்புடையதுதான். அகரத்தில் தொடங்கி 'ன்' என முடிவடைந்த திருக்குறள் போலவே 'அ'தொடங்கி'ன்' என முடிவடையும் இவ்வூர் அடம்பன் என்று கூறியதும் கரகோஷம் வானைஎட்டியது. ஆங்கு குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான பெருமக்கள் ஆரவாரித்து மகிழ்வைத் தெரிவித்தனர். தமிழறிஞரின் கருத்தாழம் தமிழோடு சேர்ந்து ஒளிவீசுகையில் மகிழாதார் யார்? இன்பமான ஒரு அனுபவம் இதுவல்லவா?

இராஜம், அடம்பன்.

—※—

## உதவி

நான் அந்த பஸ்வண்டியில் பிரவேசித்தபோது பல ஆசனங்கள் காலியாகவிருந்தன. சில ஆசனங்கள் பாதி காலியாகவும் இருந்தன. நான், பாதி காலியாகவிருந்த ஓர் ஆசனத்தில் வேறோர் ஆடவருடன் பகிர்ந்து அமர்ந்துகொண்டேன்.

பாதி காலியாகவுள்ள ஓர் ஆசனத்தில் தனியாக ஓர் பெண் அமர்ந்திருந்தாள். கழுத்தில் மின்னிய மாங்கல்யம் அவள் மணமானவள் எனக் கூறியது; 'பாவம் தனிமையில் பிரயாணஞ் செய்ய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டதாக்கும்' என மனதில் பச்சாதாபப்பட்டுக்கொண்டேன்.

பக்கவாட்டிலிருந்த ஆசனத்தில் அமர்ந்திருந்த ஆசாமி ஒருவன் அடிக்கடி அம்மாதை ஓரக்கண்ணால் நோட்டம் விடுவதை நான் கவனியாதது போல் கவனித்துக்கொண்டேன். பஸ் வண்டி அடுத்த தரிப்பில் நின்றதும் அதில் ஏறிய வாலிபன் ஒருவன் காலியான வேறு பல ஆசனங்கள் இருந்தும், பாதி காலியாயிருந்த அப்பெண்ணிருந்த ஆசனத்தில் பண்பில்லாமல் அமர்ந்து கொண்டான்.

ஏற்கனவே அப்பெண்மீது கண்வைத்துக் கொண்டிருந்தவனின் பார்வை 'ச்சே எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய ஓர் சந்தர்ப்பம் அந்த வாலிபனுக்குக் கிடைத்துவிட்டதே' எனப் பொறுமை கொள்வது போலிருந்தது.

வேறோர் தரிப்பில் பஸ்வண்டி நின்றதும், அப்பெண்ணுடன் அமர்ந்திருந்த வாலிபன் இறங்கிப் போய்விட்டான். அதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவன்போலிருந்த மற்ற ஆசாமி எழுந்து அப்பெண்ணின் பக்கத்தில் அமர்ந்து கொண்டான்.

எனது மனம் குமுறியது! 'இந்தச் சுதந்திர நாட்டிலே ஒரு மணமான பெண் சுதந்திரமாக பஸ்ஸில் பிரயாணஞ் செய்ய முடிவதில்லை' என்று பிரயாணிகளுக்குக் கேட்கக்கூடியவாறு கூறிவிட்டேன். ''நீர் உம்முடைய அலுவலைப் பாரும்'' என்றான் அவன். ஆத்திரமடைந்த நான் கையால் பதிலிறுத்தேன். இருவரும் கைகளால் பேசிக்கொண்டோம். அந்தப் பெண் தனக்கு அருகில் சென்றிருந்த ஆணின் கைகளைப் பிடித்தவாறு ''இது என்னங்கோ மரியாதை'' என்று கெஞ்சினாள்!

அதன் பிறகுதான் யாவருக்கும் விஷயம் புரியவைக்கப்பட்டது. அவர்கள் இருவரும் கணவன் மனைவி. வீட்டிலிருந்து புறப்படும்போது ஏற்பட்ட அற்ப கருத்து வேறுபாடு காரணமாக, பஸ்வண்டியில் வெவ்வேறு ஆசனத்தில் அமர்ந்துவிட்டார்கள். அவ்வளவுதான்!

பி. தேவேந்திரன்,
34, ஈஸ்வரி வீதி, கொழும்பு—6.

(ஈழத்துநூல் அன்பளிப்புப்பெறும் துணுக்கு—ஆசிரியர்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




— அன்பு முகையதீன் —

மழையே! மழையே! பெய்யாதே!
மறந்த உணர்வை மீட்டாதே!
நிலவே! நிலவே! எறியாதே!
நெஞ்சில் அவளைத் தீட்டாதே!

காற்றே! காற்றே! வீசாதே!
காதல் உணர்வைப் பேசாதே!
வெயிலே! வெயிலே! காயாதே!
வெந்த நெஞ்சில் தாவாதே!

கடலே! கடலே! இரையாதே!
கதையை இன்னும் உரையாதே!
அலையே! அலையே! பொங்காதே!
ஆசை அலையை எழுப்பாதே!

குயிலே! குயிலே! கூவாதே!
குரலால் நெஞ்சைக் கீறுதே!
மயிலே! மயிலே! ஆடாதே!
மறந்த நினைவைச் சூடாதே!

மலரே! மலரே! விரியாதே!
மனதில் முகத்தைப் பதியாதே.
முகிலே! முகிலே! கறுக்காதே!
முடியை எனக்குக் காட்டாதே!

தளிரே! தளிரே! ஆடாதே!
தையல் அசைவைக் காட்டாதே!
குளிரே குளிரே வாட்டாதே!
கோபத் தைநீ ஊட்டாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு வழக்குநடை இலக்கணம்

சொல்லின் வடிவம் மாற்றம் பெறப்பெற அதன் இலக்கணமும் மாற்றம் பெறுகிறது. அதற்கு இயைய அதன் பொருளும் மாறுபடுகிறது. ஆகவே காலத்துக்குக்காலம் சொல்லின் வடிவத்தையும், அதன் இலக்கணத்தையும், பொருளையும் தொகுத்துவைக்க வேண்டும். மேல்நாட்டு மொழிகளைப் பொறுத்து இத்தகைய தொகுப்புவேலை காலத்துக்குக்காலம் நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றது. ஆங்கில மொழியைப் பொறுத்து இத்தொகுப்புவேலை ஒழுங்காகவே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் உலகத்தின் மூத்த முதல் மொழியான தமிழைப்பொறுத்தோ இவ்வாறான தொகுப்புவேலை இன்னும் கேள்விக் குறியாகவே இருந்து கொண்டிருக்கிறது.

தமிழில் எழுந்துள்ள கல்வெட்டுகளை நோக்கினால், அவைகளில் காலத்துக்கேற்றவாறு மொழி வளம் மாறுபட்டிருக்கக் காணமுடிகிறது. காரணம், கல்வெட்டுகள் எந்தெந்தக் காலத்தில் பொறிக்கப் பட்டனவோ, அந்தந்தக் காலத்துத் தமிழ்வளம் கல்வெட்டுகளில் ஆட்சி செலுத்தியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

சங்ககாலத்து வழக்கு மொழியினைச் சங்க காலத்து இலக்கியங்களில் அவ்வளவாகக் காணக் கூடியதாக இல்லை. ஆனால் சங்கம் மருவிய காலத்தில் எழுந்த கலித்தொகையில், இடையிடையே வழக்குநடை இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. இன்று நாம் கலித்தொகையைப்படிக்கும் பொழுது, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழர்களின் வழக்குநடையினைக் காணுந்தோறும் உள்ளம் மகிழ்வடைகிறது.

தொல்காப்பியனார் வாழ்ந்த காலத்தில் சேரி மொழியென வழக்குநடை வழங்கப்பெற்றிருக்கிறது. உரையாசிரியர் சேரி மொழியினைப் பாடி மாற்றங்கள் எனக் குறிப்பிட்டிருக்கிறார். நாம் இதனை வசனிக்கும் ரீதி எனக் கொள்ளலாம். சேரி மொழி இடவேறு பாட்டினாலும், குழுவேறுபாட்டினாலும் வேறுபடும். தொல்காப்பியர், சேரி மொழியை,

> ''சேரி மொழியான் செவ்விதிற்கிளந்
> தோதல் வேண்டாது குறித்தது தோன்றிற்
> புலனென மொழிப் புலனுணர்ந்தோரே''

என்று சூத்திரம் செய்துள்ளார். இச்சூத்திரத்திற்கு உரை ஆசிரியர்,

> சேரி மொழியென்பது பாடிமாற்றங்கள். அவற்றானே செவ்விதாகக்கூறி ஆராய்ந்து காணாமைப் பொருட்டொடரானே கொடுத்துச் செய்வது புலனென்று சொல்லுவர் புலன் உணர்ந்தோர் என்றவாறு. அவை விளக்கத்தார் கூத்து முதலாகிய நாடகச் செய்யுளாகிய வேண்டுறைச் செய்யுள் போல்வனவென்பது கண்டுகொள்க''

என்று உரை எழுதியுள்ளார்.

கலியும் பரிபாடலும் போலும் இசைப்பாட்டினைச் செந்துரைவகையென்பார்கள் சேரிமொழிச் செய்யுளினை வெண்டுறை வகையென்பார்கள். இதனைச் செந்தமிழ் கொடுந்தமிழ் என சிறப்பாகவே சொல்லிவிடலாம்.

மட்டக்களப்பு வழக்குநடை இலக்கணம் வகுத்துக் காண்பதற்கு முன்னர், மட்டக்களப்பு வழக்கு நடையிலே 'கா' அசைச் சொல் முக்கியமாக இடம் பெறுகிறது. சங்ககாலத்திலே வழக்கில் இருந்த கா அசை இன்றும் மட்டக்களப்பு வழக்கு நடையில் இருந்து கொண்டிருக்கிறதென்பதை நோக்குங்கால், நம்மவர் அனைவரும் பெருமை கொள்ளலாம். ஆமாம் பெருமைக்கும் புகழுக்கும் உரித்தான காவின் இலக்கண அமைதிகாண்போம்.

> யா, கா
> பிற பிறக்கு அரோபோமாது என வருசம்
> ஆயேழ் சொல்லும் அசை நிலைக்கிழவி

என்பது தொல்காப்பியச் சூத்திரம்

தொல்காப்பியரது காலத்திலே ஏழு சொற்களே அசைநிலைக் கிழவியாக இருந்தன. நன்னூல்



அருள். செல்வநாயகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் பவணந்தியருடைய காலத்திலே அசை நிலைக் கிழவி இருபது சொற்களாக வளர்ந்து விட்டன.

யா கா பிற பிறக்கரோ போமாதிகுஞ்
சின் குரையோரும் போலு மிருந்திட்
டன்ருந் தாந்தான் கின்றுநின் றசைமொழி

என்பது நன்னூல் சூத்திரம்

தொல்காப்பியரது காலத்திலும், பவணந்தியாருடைய காலத்திலும் கா அசைச் சொல்லாக இருந்ததென்பது தெளிவாகிறது. சங்ககாலம் முதல் வழக்கில் இருந்து வந்த கா அசைச்சொல் தமிழ் கூறும் நல்லுலகில் இன்று வழக்கொழிந்து விட்டது. ஆனுல் மட்டக்களப்புத் தமிழகத்தில் மட்டுந்தான் வழக்கில் இருப்பது பழமைக்கு ஓர் எடுத்துக் காட்டாகிறது.

காவழக்கு நடையினைப் பெண்கள்தான் அதிகமாகக் கையாள்வார்கள். இதனுல் ஆண்கள் கையாள்வதில்லை யென்பது பொருளல்ல இதனைக் கவிஞன் ஒருவன் ''ஆடவர் தோளிலுங்கா அரிவையர் நாவிலுங்கா'' என்று அழகாகக் கூறியுள்ளான்.

ஆண்கள் பாற்குடங்கள், தயிர் முட்டிகள் என்பவற்றை உறியில் வைத்து காத்தடியின் இரு முனைகளிலும் வைத்துக்கட்டித் தோளில் எடுத்துக் கொண்டு செல்வார்கள். பெண்கள் வார்த்தையாடும் பொழுது, எலக்கா, ஏங்கா, என்னகா, வாகா, இரிகா, போகா, போயிற்றுவாகா இவ்வாருகக் காவை அசைத்துப் பேசுவார்கள். மட்டக்களப்புக் கிராமியக் கவிதைகளிலும் இத்தகைய கா இடம் பெறுவதைக் காணலாம்.

புள்ளலெக்கா புள்ளலெக்கா
உன்ரபுருசனெங்க போனதுகா
கல்லூட்டுத் திண்ணையில
கதபழகப் போனதுகா.

ஓர் கவிதையிலே எத்தனையோ கா அசை இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

இனி மட்டக்களப்பு வழக்கு நடை இலக்கணத்தை நோக்குவோம். வழக்குமொழி எழுத்துத் தொகையிலும், மாத்திரையிலும் சுருங்கி நடக்கும்.

| | | |
|---|---|---|
| தேவை இல்லை | = | தேவல்ல |
| வாருங்கள் | = | வாங்க |
| கேட்கிருர் | = | கேக்கார் |

செந்தமிழ் டகரம் கொடுந்தமிழிலே றகரமாதலும், செந்தமிழ் நகரம் கொடுந்தமிழிலே தகரம் மகரம் ஆதலும், செந்தமிழ் தகரம் கொடுந்தமிழிலே சகரம் ஆதலும் மட்டக்களப்பு வழக்கு நடைக்கு இலக்கணமாகும். இதற்கு உதாரணமாக

| | | |
|---|---|---|
| போய்விட்டது | = | போயிற்றுது |
| ,, | = | போயித்து |
| ,, | = | போச்சு |

என ஆகும். இன்னும்,

| | | |
|---|---|---|
| வெற்றிலை | = | வெத்திலை |
| விற்று | = | வித்து |
| வைத்த | = | வைச்ச |

எனவும் வழக்கு நடையாகிறது.

உயிர்ப்பின்ருே இடையின வொற்றின்பின்ருே ருகிற உயிரேறிய ககரம் வழக்கு நடையில் கெடும். கெட்டபின் முன்னின்ற உயிர் நீளுதலுமுண்டு

அலைகிருய் = அலேருய்

மெல்லொற்றின் பின்வரும் சகரம் வடமொழி வருக்கத்து மூன்ரும் எழுத்தின் ஓசைபெறும்

| | | |
|---|---|---|
| என்கிருர்கள் | = | என்கிருங்க |
| போய்விடுங்கள் | = | போங்க |

வருமொழி வல்லொற்றுக்கு இனமாக ஈற்றில் நின்ற மெல்லொற்றுத்திரியும்

| | | |
|---|---|---|
| ஆண்பிள்ளை | = | ஆம்பிள |
| பெண்பிள்ளை | = | பொம்பிள |

ழகரம் ளகரமாதலும் வழக்காகும்

வாழைப்பழம் = வாளப்பளம்

குற்றியலுகரம் வல்லொற்றூர்ந்து மொழியீற்றில் வருவது செந்தமிழ்இலக்கணவிதி. கொடுந்தமிழிலே குற்றிய லுகரம் மெல்லொற்று இடையொற்று ஊர்ந்து ஈற்றில் வருதலும், வல்லொற்றூர்ந்து இடையில் வருதலும் உண்டு.


## வியாபாரிகளே !

ஈழத்திலே, மிகச் சிறப்பான முறையில் வெளிவரும் சஞ்சிகை ''மலர்.'' நிறைந்த விளம்பரப் பலனைப் பெற, 'நாடெங்கும் விநியோகமாகும் ''மலர்'' சஞ்சிகையில் விளம்பரம் செய்யுங்கள். ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு உங்கள் பங்கைச் செய்யுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயர் = ஐயரு
யார் = யாரு
நெல் = நெல்லு
கள் = கள்ளு
பெண் = பெண்ணு

என மட்டக்களப்பு வழக்கு நடையாகிறது.

மொழிமுதல் வகரம் உகரமாதலுண்டு.
வீடு = ஊடு

இகரம் எகரமாக திரிதலுண்டு.
நிறைய = நெறைய

ஐ, எய் ஆதலும் வழக்கிலுண்டு
வைகிறார் = வெய்கிறார்

எகரம் ஒகரமாதல் வழக்காகிறது
பெண்பிள்ளை = பொம்பிள

மட்டக்களப்பு வழக்குமொழி இலக்கணமாக ஒரு சில சொற்களை இதுவரை நோக்கினோம். இச் சொற்களின் வழக்கு நடை மட்டக்களப்புத் தமிழகத்தில்தான் இவ்வாறு வழக்காகிறது. ஆனால் யாழ்ப்பாணத்திலோ இவை முற்றிலும் மாறுபட்டதாகிறது.

தொல்காப்பியர் கூறியதுபோல், பின்னர் வந்த பவணந்தியார் கூறியதுபோல், அசைச் சொற்களில் எத்தனையோ இன்று வழக்கொழிந்து விட்டன. அந்த வகையிலே நோக்கினால் இருபதாம் நூற்றாண்டின் வழக்கு நடை இருபத்தைந்தாம் நூற்றாண்டில் நிச்சயமாக வேறுபடும். ஆகவே சொல்லின் வடிவம் மாற்றம் பெறும் கால எல்லையிலே அவைகளைத் தொகுத்தல் தமிழ் அறிஞர்களது கடனாகும்.

சங்ககாலத்திலே புலவர்கள் காலத்துக்குக்காலம் கூடித்தமிழை அழகுபடுத்தினார்கள். தமிழை இனிக்கும் தன்மையுடையதாக்கினார்கள். இனிக்கும் தன்மையற்ற சொற்களை அகற்றி, இனிக்கும் தன்மையுள்ள சொற்களை ஆக்கி அவற்றினுக்கு இலக்கணமும் கண்டார்கள்.

முதல், இடை, கடையென்ற முச்சங்கங்கள் ஒழிந்த பின்னர் தமிழை அழகுபடுத்த வென்று நல்ல சங்கங்கள் தமிழ் கூறும் நல்லுலகில் தோன்றவேயில்லை. இருந்தாலும் இருபதாம் நூற்றாண்டில் உலகத்தமிழ் ஆராய்ச்சிக்கழகம் ஒன்றினை நிறுவ தமிழக அரசு முன்வந்திருக்கிறது. இந்தக்கழகமாதல் தமிழை இனிக்கும் தன்மையுடையதாக்க ஆராயுமென்று நம்புவோமாக.

மட்டக்களப்பு வழக்கு நடை இலக்கணத்தினுக்கு உதாரணங்கள் சிலவற்றைத்தான் இதுவரை கூறினேன். இதனை விரித்துச் சென்றால் ஏராளமான சொற் கூட்டங்களைக் காணலாம். ஆகவே மட்டக்களப்பு வழக்கு நடை இலக்கணத்தை ஆக்க, மட்டக்களப்பு அறிஞர்கள் முன்வரவேண்டும்.

# போதும்!

காதல் கடுகளவும்
கன்னி உனக்குண்டேல்
ஏதடியோ இந்த நிலை
எந்தனுக்கு?—காதுவரை
நீண்ட நினது விழி
நீர்மையினால் யானுறுதல்
'தூண்டிற் படுமீன் துயர்!'

அஞ்சுகமே உந்தன்
அழகுமொழி கேட்கவென
நெஞ்சம் அழியும்
நெடுநாளாய்—கொஞ்சமெனுங்
கூசாமல் என்மேற்
குறிபார்த்து வாள்விழியை
வீசுவது போதும் விடு!

கன்னக் குழிவினை நீ
காட்டாதே, என்மனத்து
எண்ணத்தை வீணாய்
எழுப்பாதே — புன்முறுவல்
செய்யும் இதழ் காட்டிச்
செல்லாதே கண்ணம்பு
எய்யாதே என்மேல் இனி!

— முதல்வனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அழகியாம்; அகிலங் காணு
அற்புதக் கன்னி நானும்
விழிகளின் வீச்சாற் கோடி
வித்தைகள் காட்டு வேனும்;
ஒளிமுகம் மதியாம்; என்றன்
ஒடியிடை கொடியாம்; போதை
விளையுதாம் என்னல்; நானேர்
விண்ணுல கத்துப் பெண்ணும்!


என்ருெரு கோடி வார்த்தை
இயம்பிடு மிந்தக் கூட்டம்
என்னிடத் தினிலோர் உள்ளம்
இருப்பதை உணர வில்லை!
மென்னுடல் அழகிற் சொக்கி
மெச்சிடும் மாந்தர்க் கென்றன்
எண்ணமீ தினிலே யுள்ள
எழுச்சிகள் புரிய வில்லை!

காண்பவ ரெல்லாம் என்னைக்
கண்களால் விழுங்கு கின்ருர்
மூண்டிடும் வெறியோ டென்னை
மோதிடும் விழிகள் கோடி
ஆண்டவன் படைப்பிற் காட்சிப்
பொருளெனப் பிறந்தேனே நான்?
காண்பவர் மயங்கும் மேனிக்
கவர்ச்சியே என்றன் துன்பம்

காதலாம் என்மே லென்றே
கடிதமும் பலபேர் போட்டார்
பாதையில் நின்று, பார்த்துப்
பல்லிளித் தார்கள்; உள்ளப்
போதை தாங் காது முன்னும்
பின்னுமாய்த் திரிவுற் ருர்கள்
வேதனை யன்றி நெஞ்சில்
வேறெதை இவர்கள் தந்தார்:

திருமணம் பேசி வந்து
தினந்தினம் 'தரகர்' தொல்லை!
பருவமும் அழகும் நல்கும்
துயரினுக் கெல்லை இல்லை!
ஒருவரும் உணரார் என்றன்
உளத்திலே இலட்சியத் தீ
எரிவதை உலகே, நானேர்
'அழகிய பிணமாய்' வாழேன்!!

**— மாவை. தி. நித்தியானந்தன்.**



இளங்கவிஞர் மாவை நித்தியானந்தனின் கவிதைகள் ஈழத்துப் பத்திரிகைகளிலும், வானெலியிலும் கவியரங்குகள் பலவற்றிலும் இடம் பெற்றுள்ளன. யாழ். இலக்கிய நண்பர் கழகத்தை உருவாக்க உதவியதோடு அதன் முதலாவது பொதுச் செயலாளராகவும் பின்னர் அதன் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். தற்போது கட்டுப்பெத்தை தொழில் நுட்பக் கல்லூரியில் பொறியியல் மாணவனுகப் பயிற்சி பெறுகிருர். —ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு தினக் கட்டுரை:

# கவிஞர் அல்லாமா இக்பால்

யூ. எல். தாவூத் பி.ஏ.

பாரத நாடு ஈன்றெடுத்த தலைசிறந்த மகா கவிகளுள் ஒருவராகிய அல்லாமா முஹம்மது இக்பால் உலகம் கண்ட கவிஞரேறுகளுள் ஒருவராக மதிக்கப்படுகிறார். மற்றவர்கள் செல்லும் பாதையிற் செல்லாது புதுப்பாதையிற் செல்பவனே-ஆற்றின் போக்கோடு தானும் ஒரு நீர்த்துளியாகச் சேர்ந்து ஓடாது ஆற்றின் போக்கையே வேறு திசையில் திருப்பி விடுபவனே-மகா கவியாக மதிக்கப்படுகிறான். இயற்கை எழிலையும், செயற்கை இன்பத்தையும் வர்ணித்து மன நிறைவு காண்பவன் சிறந்த கவிஞன் அல்லன். அதுபோல மக்களின் தீய உணர்வுகளுக்குத் தீனி போடும் கவிதைகளைப் பாடுபவனும் கவிஞன் அல்லன் ''உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்'' என்பதற்கியைய வாழ்ந்து தனக்கு விருப்பமான ஒன்றைக் கவிதையாக்கி இன்பம் காண்பவன்-கவிதையை மனித சமுகத்தை உயர்த்தும் ஏணியாகப் பயன்படுத்துபவன்-உண்மைக் கவிஞனாவான். இந்த இலக்கணத்திற்கு விளக்கமாக வாழ்ந்து மகா கவியாக ஒளிர்ந்தவரே அல்லாமா இக்பால்.

உர்து இலக்கியத்தின் ஒப்பற்ற மணிச்சுடராக மிளிரும் இக்பால் கற்பனைச் செறிவும் கருத்து நிறைவும் மிக்க கவிதைக் களஞ்சியமாக மதிக்கப்படுகிறார்.

இக்பால், இதய பீடத்தில் குமிழியிடும் இனிய உணர்ச்சிகளையும், புதுப்புதுக் கருத்துக்களையும் மனித வாழ்வின் வளப்பத்திற்கு ஏற்ற மாண்புறு இலட்சியங்களையும் கவிதையாக வடித்தெடுத்தவர். இக்பாலின் இலட்சியச் சிருஷ்டிகள் இலக்கண வரம்பிற்குட்பட்ட வெறும் எலும்புக் கூடுகளாக அல்லாமல் உயிருள்ளனவாக அவரது உள்ளத் துடிப்புகளைத் தாங்கியுள்ள வாகனங்களாக ஒளிர்கின்றன.

இக்பாலின் சிருஷ்டிகள் கால வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படாது என்றும் வாழும் சிரஞ்சீவித்தன்மை வாய்ந்தனவாக மிளிர்கின்றன. இதனாலேதான் இக்பாலின் நினைவு 'பொய்யாய், பழங்கதையாய், கனவாய் மெல்ல மறையாது' கலையுலகில் நீக்கமற நிலைத்து நிற்கின்றது.

அல்லாமா இக்பால் ஆயிரக்கணக்கான கவிதைகளை இயற்றினார். அன்பு, காதல், கோபம், சோகம், பயம், வீரம் முதலிய மனித உணர்வுகளைப் பாடினார். இன்றைய முஸ்லிம்கள், தற்காலப் பெண்கள், கல்விமுறை, அரசியல், மதம், ஆத்மா முதலியன பற்றியும் கவிதைகள் எழுதினார். ஒரு காலத்தில் வாகை பெற்று விளங்கிய முஸ்லிம் சமுதாயம் இன்று வீழ்ச்சிக் குழியில் வீழ்ந்து கிடக்கும் அவல நிலையைச் சித்தரித்தார். இக்பால் சிறிய கவிதைகளை எழுதினார். நீண்ட பாடல்களை ஆக்கினார். அழியாத்தன்மை பெற்ற அமர காவியமும் படைத்தார். உலோகாயதத்தைப் பாடினார். ஆத்மீக வாழ்க்கையை ஆராய்ந்தார். சமுதாய நீதி அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்று கர்ஜித்தார். பொருளாதாரம், அந்தஸ்து என்பன சிருஷ்டித்துள்ள எல்லைக் கோடுகளால் மக்களின் ஒரு சாரார் வாழ்க்கையிற் பின்தள்ளப்பட்டு கவலையுறும் துயரக்காட்சியைச் சித்திரித்தார். இக்பால் வெறும் நீதி போதகராக விளங்காது ஓர் இலட்சிய வாழ்க்கைப் போக்கை உருவாக்குவதற்கு முயன்றார். சமுகத்தின் புரையோடிப் புண்செய்யும் குறைகளை எடுத்துக்காட்டி வாழும் முறைமைகளை எடுத்தோதினார்.

ஆரம்பகாலத்தில் பல்வேறு பொருள்களைக் கருவாகக் கொண்டு கவிதை புனைந்த இக்பால் தனது வாழ்க்கையின் கடைசிப் பகுதியில் முஸ்லிம்களை மையமாக வைத்தே கவிதைகளை யாத்தார்.

யூ. எல். தாவூத்

இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராக நீண்டகாலம் பணியாற்றியுள்ள ஜனாப். யூ. எல். தாவூத், கவிதை இலக்கியம் இஸ்லாம் ஆகிய துறைகளில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். இஸ்லாமிய இலக்கியம் பற்றிய இவரது பேச்சுகள் பல வானொலியில் ஒலிபரப்பாகியுள்ளன. ''முஸ்லிம் கதைமலர்'' என்னும் தொகுப்புநூலையும் ''மாநபி'' என்னும் மொழி பெயர்ப்பு நூலையும் இவர் வெளியிட்டுள்ளார். — ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய காலத்தில் அவனி எங்கும் பீடுநடை போட்ட முஸ்லிம் சமுதாயம் தாழ்மையுற்றுக் கிடப்பதற்கும், இஸ்லாமிய சாம்ராச்சியங்கள் சரிந்து வீழ்ந்தமைக்கும் உரிய காரணங்களை இஸ்லாமிய வரலாற்றிலிருந்தே எடுத்துக் காட்டினார். கிரேக்க தத்துவங்கள் இஸ்லாத்துடன் பிணைந்த போது முஸ்லிம்களைப் பலவீனர்களாக்கிய கிரேக்க அறிஞர்களின் கருத்துக்களை முஸ்லிம் கவிஞர்கள் தங்கள் கவிதைகளிற் குழைத்து மக்களிடையே பரப்பியதே இஸ்லாமிய தத்துவமும் கருத்துக்களும் மாறுபடக் காரணம் என்பதைத் தெளிவுற விளக்கினார். அத்துடன் இற்றைநாள் இஸ்லாமிய சமுதாயம் தனது மார்க்க நெறிகளிளிலிருந்து பிறழ்ந்து லோகாயத வாழ்க்கையில் அளவு கடந்து நம்பிக்கை வைத்ததும் முஸ்லிம்களுடைய சீரழிவுக்கு ஒருகாரணம் என்ற கருத்தும் அவரது கவிதைகளில் இழையோடுகிறது.

இக்பால் இஸ்லாமிய நாகரிகச் சிறப்பை உலகிற்கு எடுத்துரைத்தார். முஸ்லிம்களது வரலாற்றுச் சிறப்பியல்புகளையும், உலக சரித்திரத்தில் முஸ்லிம்கள் ஈட்டிய வெற்றிகளையும், சாதனைகளையும் பற்றி எழுதினார். ஒரு காலக்கட்டத்தில் வாழ்க்கையின் சிகரத்தில் — புகழேணியின் உச்சத்தில் — வாழ்ந்து வாக்கைபெற்று விளங்கிய முஸ்லிம்களின் பெருமையினைப் பறைசாற்றினார். அந்தலுஸ் என்று அழைக்கப்பட்ட ஸ்பெயின் நாடு முதல் பல்வேறு தேசங்களை முஸ்லிம்கள் கட்டியாண்ட கதையை எடுத்துக் காட்டினார். இறைநெறியைப் பரப்புவதற்காக உயிரைத் திரணமென நினைத்து மலைகளையும், மாநதிகளையும், கடலையும், காடுகளையும் கடந்து தொண்டு புரிந்த முஸ்லிம்கள் கட்டியாண்ட இஸ்லாமிய சாம்ராச்சியங்கள் காலவரையில் வீழ்ச்சியடைந்து முஸ்லிம் சமுதாயம் சீரழிந்த சோகக் கதையைப் படம்பிடித்துக் காட்டினார்.

இவ்வாறு இக்பால் முஸ்லிம்களை மையமாக வைத்துக் கவிதை எழுதியதையிட்டு முஸ்லிமல்லாதார் அவரைக் குறைகூற முடியாது.

ஒரு கலைஞன் தனது சமுதாய நிலையினால் பாதிக்கப்படுகிறார். அவன் தனது சூழலையும் தான் பிணைந்துள்ள சமுதாயத்தையும் மறந்து அல்லது புறக்கணித்து விட்டு இலக்கியச் சிருஷ்டிகள் ஆக்க முயல மாட்டான்.

இவ்விடத்தில் சர்தேஜ் பஹதூர்ஸப்ரு என்பார் இக்பாலைப்பற்றிக் கூறும் கருத்தை நோக்குதல் சாலப்பொருத்தமாகும். அவர் கருத்து இது.

''அல்லாமா இக்பால் இஸ்லாமியதத்துவ ஞானத்தையும் இஸ்லாமிய கலைப்பண்பையும் முஸ்லிம்களது தீரவீரச் செயல்களையும் பற்றி எழுதியிருக்கிறார் என்பது உண்மையே. ஆனால் மில்டனை கிறிஸ்தவ கவிஞன் என்று உரிமை கொண்டாடி அவர் கவிதைகளைக் கட்டுப்படுத்த முடியாது. அது போல் காளிதாசனை இந்து சமயக் கவிஞன் என்று கூறி அவர் சிறப்புக்கு எல்லைபோட யாரும் முன்வரவில்லை. ஏனைய மதத்தினரும் இதே காரணத்திற்காக இக்கவிஞர்களின் பெருமைகளைக் குறைத்துக் கூறியதுமில்லை. அல்லாமா இக்பால் முஸ்லிம் வரலாற்று வெற்றிகளையும் முஸ்லிம்களது கலா சாரச் சாதனைகளையும் பற்றிப் பாடினார். அதற்காக முஸ்லிம் அல்லாதார் அவரைக் குறைவாக மதிப்பிடமுடியாது.''

இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் மையமாக வைத்துக் கவிதைபாடிய இக்பால் மாற்று மதங்களிடத்தில் வெறிகொண்டு மக்களை மயக்கி மாச்சரியங்களை வளர்க்கவில்லை. மதங்களிடையே சமாதானம் நிலவ வேண்டுமென்பதே அவரின் எழுத்தாகவும், எண்ணமாகவும் இருந்தது. பல்வேறு இனத்தவர்களும் ஒன்றுபட்டு வாழ்வதே உயர்வுக்கு வழிஎன்று கருதினார்.

''மதங்கள் ஒருவரோடொருவர் குரோதங் கொள்ளச் சொல்லவில்லை'' என்பது அவர் கருத்து.

இக்பால் இந்திய மக்களின் ஒற்றுமையைக் குறித்தும் பாரத நாட்டின் ஒருமைப்பாடு பற்றியும் பாடல்களை எழுதினார்.

''இந்துஸ்தான் நமது தாயகம். உலகம் யாவினும் எமது இந்துஸ்தான் சிறந்தது. இந்துஸ்தான் மலர்வனம். நாம் அதன் புல்புல்கள்.'' என்றும் தாயகத்தின் சிறப்பையும், தேசிய ஒற்றுமையையும் பாடினார்.

இக்பால் ஆத்ம திருப்திக்காக கவிதை பாடியவரல்லர். அவர் மக்கள் மேல் அக்கறை கொண்டவர். மனித சமுதாயத்தைப் பாடியவர்.

வறுமையுடைய சமுதாயத்தைக் கண்டு ஆத்திரங் கொண்ட வள்ளுவர் இறைவனையே சபித்தார்.

''இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.''

புரட்சிக் கவி பாரதியோ:

''தனி யொருவனுக் குணவில்லை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.'' என்று போர் முரசம் எழுப்பினார்.

அல்லாமா இக்பால், ''உழவனது உணவுக்கு உதவாத கழனி எங்கிருந்தாலும் அதில் ஒரு தானிய மணிகூட எஞ்சியிருக்கா வண்ணம் நெருப்பிட்டுக் கொளுத்துங்கள்.'' என்று முழங்குகினார்.

இத்தகைய கருத்துச் செறிவுமிக்க இக்பாலின் கவிதைகள் உழுத்துப்போன சமுதாயத்திற்கு ஒரு விழிப் போசையாக ஒளிர்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனக்கொரு கணவனைத் தேடுகிறேன்

யோ. பெனடிக்ற் பாலன்

உயர்ந்து வளர்ந்த பனை மரங்கள் நிறைந்திருக்கும் அந்தப் பெரிய காணியில், தென்னைஓலையால் கட்டிய சிறு குடிசைக்கு முன்னுல் பிரேமா யோசித்துக்கொண்டு நிற்கிருள்.

சரிந்து விழும் மாலைச் சூரிய கதிர்கள் பனை மரங்களில் பட்டு நிலத்தில் கீறுகளாக விழுந்து கொண்டிருந்தன.

அவள் 'டவுணு'க்குப் போவதற்கு தாயிடம் பணம் கேட்டாள். தாய் முத்தம்மா தன்னிடம் பணம் இல்லாததால், அடுத்த வீட்டில் கடன் கேட்கச் சென்றுவிட்டாள்.

பிரேமா கைலேஞ்சியுடன் கைக்குள் மடித்து வைத்திருந்த கடிதத்துண்டை பின்னரும் படித்துப் பார்த்தாள்.

'அன்பே! நான் நாளை சுப்பிரமணியம் பார்க்கில் உன்னை எதிர்பார்த்துக்கொண்டு நிற்பேன். என்னைக் கட்டாயமாக வந்து சந்திக்கவும். என்னை ஏமாற்றி விடாதே. — அன்பன் கந்தசாமி' என்று அவளுடைய காதலன் அவளுக்கு அவசரக் கடிதமொன்று எழுதியிருந்தான். கடிதத்தை மார்புச் சட்டைக்குள் புதைத்துக்கொண்டு, குடிசைக்குள் புகுந்து கண்ணுடியில் தன் முகத்தை மீண்டும் பார்த்துக்கொண்டாள்.

அவள் அழகாகத்தான் இருக்கிருள். நடு வகிடு இட்டு முடியை வாரி, ஒற்றைப் பின்னல் பின்னி முதுகில் தூங்க விட்டு நெற்றியில் குங்குமப் பொட்டும் வைத்திருந்தாள். அவளின் வயதுக்கு மீறிய இளமையும், வாளிப்பும் அவள் மேனியில் இருந்தன. தான் அணிந்திருந்த சாரியை குனிந்து பார்த்து சரி செய்துகொண்டு வெளியில் வந்தாள்.

அப்போது முத்தம்மா அங்கு வந்தாள்.

''இந்தா பிள்ளை, இருபது சதந்தான் இருக்கு!''
''இருபது சதந்தானே கேட்டேன்!''

இந்த மாலை வேளையில், தனியாகப் புறப்பட்டுச் செல்வதை விரும்பாத முத்தம்மா, பயமும் ஏக்கமும் கலந்த கண்களால் மகளை ஏறிட்டுப் பார்த்து தாய்மைக்குரிய பொறுப்புணர்வுடன்,

''பிள்ளை நீ இந்த நேரத்தில் தனியாக அடிக்கடி வெளியில் போவதை நான் விரும்பவில்லை. உனக்கு எத்தனை முறைதான் சொல்றது?'' என்று கடிந்துகொண்டாள். தாய் என்ன காரணத்திற்காக அப்படிச் சொல்கிருள் என்பதையுணர்ந்த பிரேமா தாயின் முகத்தை நிமிர்ந்து பார்த்து, ''நான் என்னம்மா தவறு செய்து விட்டேன்'' என்று கேட்டாள்.

''தவறு செய்யாமல் இருப்பது முக்கியமில்லை மகளே! நாலுபேர் சொல்றதைத்தான் பார்க்க வேணும். நாங்கள் ஏழைகள், இந்த உலகத்தில் எங்களுக்கு எண்டு சொல்லிக்கொள்ள என்ன இருக்கு. ஒழுக்கந்தான் பெரிசு. நாங்கள் சிறு

யோ. பெனடிக்ற் பாலன்

1960ம் ஆண்டு முதல் எழுதிவரும் யோ. பெனடிக்ற் பாலன் இதுவரை ஐம்பதுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். மூன்று அகில இலங்கைச் சிறுகதைப் போட்டிகளில், முதலாம் இரண்டாம் பரிசுகளைப் பெற்றுள்ளார். ''குட்டி'' ''சொந்தக்காரன்'' ஆகிய நாவல்கள் நூலுருவில் வெளிவந்துள்ளன. 'குட்டிக்கதைகள்' தொகுதி ஒன்று விரைவில் வெளிவரவிருக்கிறது. — ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றஞ் செய்தால் போதும். உலகம் அதைப் பெரிசாகத்தான் காட்டும். நீமுன்பு நடந்து கொண்டதைப் பற்றி ஊர் என்ன சொல்லுது எண்டு உனக்குத் தெரியாதா?''

பிரேமா தாயின் முகத்தை நோக்கினுள்.

''நான் முன்பு என்னம்மா தவறு செய்து விட்டேன்? இரண்டுபேரை விரும்பினேன் அவர்களோடு கதைத்துப் பேசினேன். ஆனால் அவர்களுக்கு என்னை மனைவியாக்கும் எண்ண மேயிருக்கவில்லை. ஆனல் என்னைக் கெடுத்திட்டுப் போகப் பார்த்தாங்க. நான் அதற்கு இரையாகல்லே. அதனலே விட்டுட்டு போயிட்டாங்க. அதற்கு நானு குற்றவாளி? ஒரு பெண் ஒரு ஆணை விரும்புவது குற்றமா?'' என்று சிறிது கோபத்தோடு சொன்னவள் தூரத்தில் நிற்கும் ஒரு தனிப் பனையை வெறித்துப் பார்த்தவாறு ''நான் நானுகத்தான் இருக்கிறன். ஊரைப்பற்றி எனக்கு கவலையில்லே?'' என்று நிதானமாகச் சொன்னுள்.

"ஊர் சொல்லுவதெல்லாம் உன் காதில் விழுவதில்லே. என்ரை காதில்தான் விழுகுது. என்ரை நெஞ்சைத்தான் அரிச்சிக்கிட்டிருக்கு!''

தாயின் வார்த்தைகளும், அவற்றுள்ளே உள்ள அவளின் கவலைகளும் பிரேமாவின் நெஞ்சை மெதுவாகச் சுட்டுக்கொண்டது. என்னைப் பெத்தவளே என்னைப் புரிஞ்சுகொள்ள முடியாமல் இருக்கிறளே என்று யோசித்து சிறிது பொழுது மௌனமாக நின்றவள் பின்பு சொன்னுள்.

''பிழை செய்தால்தான் ஊர் உலகத்திற்கும் பயப்படவேணும். நாம் ஏன் பயப்படவேணும்? நான் என்னைப்பற்றித்தான் கவலைப்படுகிறேன். சரியாக நடந்துகொண்டு ஊர் உலகத்திற்குப் பயந்தா இந்தக் குடிசையில்தானம்மா குறுகிச் சாகணும், நீங்க கவலைப்படாதீங்க!"

பிரேமா சிரித்தாள். முத்தம்மா மகளின் தைரியத்தை உள்ளூரப்புகழ்ந்து, அவள் சொன்னதை ஏற்றுக்கொண்டாலும், அவள் நிஜவாழ்க்கையையும் நிஜமனிதர்களையும் நன்கு உணர்வாள்.

''நீ படிச்சனி. உனக்கு நான் பதில் சொல்ல முடியாது. என்ருலும் நீ சின்னப்பிள்ளை உனக்கு உலகத்தைப்பற்றித் தெரியாது.

''நான் சின்னப்பிள்ளையா? இருபத்தியொன்பது வயசு முடிகிறது?''

அப்படிக் கூறியதும் பிரேமாவுக்கு தாயிடம் "நீ இவ்வளவு காலமும் எனக்கொரு கலியாணம் செய்து வைக்க வில்லையே!" என்று குத்திக்காட்டுவது போல உணர்வு தட்டிற்று. உடனே அனுதாபத்தோடு தாயின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

"எனக்கு நாலு வயசு நடக்கும்போது தகப்பன் இறந்துவிட அனுதரவாக்கப்பட்ட நீ என்னை வளர்த்து, படிக்கவைத்து, இவ்வளவு காலமும், சாப்பாடும்போடுகிருயே உன்னிடம் வேறு என்னத்தை நான் எதிர்பார்க்கமுடியும்.?" தாயின் நினைவில் நெஞ்சு கனக்க, கண்கள் கலங்கத் தொடங்கின. உடனே அவள் அந்நிலையில் இருந்து தன்னைச் சுதாரித்துக் கொண்டாள்.

பேசாமல் நின்ற மகளையே பார்த்துக் கொண்டு நின்ற முத்தம்மா,

''நீ ஒரு குமர்ப்பிள்ளை. தனியாக இந்தநேரத்தில் வெளியில் போவதை விரும்பவில்லே. இந்தப் போக்கை நிறுத்திவிடு? இதற்கு மேல் உனக்குச் சொல்ல முடியாது'' என்று கடுகடுப்பாகச் சொன்னுள். பிரேமா தாயை நன்ருகப் பார்த்தாள். தாயும் அவளைப் பார்த்துக்கொண்டு நின்ருள்.

"என்னடி அப்படிப்பார்க்கிருய்?"

"எனக்குத் திருமணம் செய்து வைக்க உன்னல் முடியாது. உன்னல் முடிந்தளவு முயற்சித்துப் பார்த்துவிட்டாய். இனியும் செய்து வைப்பாய் என்று நம்பிக்கையோடு இருக்க, மாப்பிள்ளை வீட்டார்கேட்கும் நிலமோ, வீடோ, பணமோ, நகையோ, எதுவும் உன்னிடமில்லே. உலகத்திற்குப் பயந்து வீட்டுக்குள் பதுங்கிக்கிடந்தால் யாரும் வலியவந்து திருமணம் செய்யக் கூடிய மனிதர்களை இச் சமுதாயம் படைத்து விடும் என்ற நம்பிக்கையுமில்லே. நான் வாழ வேணும்: அது எனது ஆசை. நான் என்ன செய்வேன். எனக்கொரு கணவனைத் தேடுகிறேனம்மா! அது தவரு?'' என்று தாயிடம் கேட்க நினைத்த அவள், அது தாயின் மனத்தை மேலும் புண்படுத்தும் என்று உணர்ந்து,

''அம்மா! நீங்கள் நினைத்தது போல் எதுவும் நடக்காது'' என்று கூறிவிட்டு கையில் ஒரு லேஞ்சுடன் பழம் புத்தகத்தையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

குடிசையின் முன் வாசலில் உட்கார்ந்த முத்தம்மா,

''ஏழு மணிக்கு முதல் வரவேணும்'' என்று கண்டிப்பான குரலில் சொன்னதை காதில் வாங்கிய பிரேமா திரும்பி நின்று ''நீ பயப்படாதே'' என்று சொல்லிவிட்டு விரைவாக நடந்தாள்.

அவள் வீட்டிலிருந்து ஒரு ஒடுங்கிய லேனைக் கடந்து, மெயின் வீதியில் ஐம்பது யார் நடந்து சென்று தான் யாழ்ப்பாண 'ரவுண்' பஸ் பிடிக்க வேணும், கச்சேரியைச் சுற்றியுள்ள அந்தப் பகுதியில் உள்ள எல்லோருக்கும் அவளைத் தெரியும். அவள் யாருக்கும் எந்த இடத்திலும், எந்தநேரத்திலும் பயப்படமாட்டாள் என்று அவர்கள் அறிந்து வைத்திருந்தாலும் "அவள் ஒரு நடத்தை கெட்டவள், ஒரு ஆட்டக்காரி, என்ற அபிப்பிராயத்தையும் கொண்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் போக ஆயத்தமாக நின்ற பஸ்ஸில் ஏறிக் கொண்டாள். அவள் பஸ்ஸில் உள்ளவர்களைக் கவனியாது தன் காதலனைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள்.

கந்தசாமியை அவள் நான்கு மாதங்களுக்கு முன்பு, கால்விரலில் ஏற்பட்ட காயத்துக்கு, மருந்துகட்ட அடிக்கடி பெரியாஸ்பத்திரிக்கு போகும்போது சந்தித்தாள். ''ரவுண்'' பஸ்ஸ்டாண்டில் அவள் பஸ்ஸிலிருந்து இறங்கும்போது அவன் மானிப்பாய் பஸ்ஸிலிருந்து இறங்கி ரவுண்கவுண்சிலை நோக்கிப் போவான். கந்தசாமி அவளைக் கடந்து செல்லும்போது அடிக்கடி பார்த்த பார்வையும் அவனுடைய கம்பீரமான தோற்றமும் எங்கோ உத்தியோகம் பார்க்கிறான் என்ற எண்ணமும்தான் அவன்மேல் பிரேமாவுக்கு ஒரு ஆசையைத் தூண்டிற்று. அதன்பின்பு, அவன் அவளுடன் தானாக வந்து பேசியபோது பேசி, முகவரி அறிந்து கடிதத்தொடர்பு கொண்டு பார்க்கிலும், பஸ்ஸ்டாண்டிலும், கடற்கரையிலும் சந்தித்துப் பேசி தொடர்பு நீடித்துக்கொண்டது. இப்பொழுது அவனுக்கு வேலை மானிப்பாய் பட்டினசபையில் - அதனால் அடிக்கடி சந்திப்பதில்லை. தன்னைப்புரிந்து கொள்ளும் மனப்பக்குவம் அவளுக்கு ஏற்பட்டிருக்கும் என்ற நினைப்பில் தன் முந்திய இரு காதல் விஷயங்களைப்பற்றி விரிவாக ஒரு கிழமைக்குமுன் அவனுக்குஎழுதியிருந்தாள். அதற்குப் பதில்கடிதம் தான் உடனே தவறாமல் பார்க்கில் சந்திக்கும்படி வந்திருக்கிறது. அந்தப் பழைய விஷயங்களைப்பற்றி தன்னுடன் பேசுவதற்குத்தான் அழைக்கிறானா? என்று எண்ணியதும் அவளுக்குள்ளே பயமும் ஏக்கமும் கூடிக்கொண்டது. தன்னையும் தன் நிலைமையையும் சரியாகப்புரிந்து கொண்டிருப்பானா? என்று யோசித்தபோது, தனக்குச் சாதகமாக முடிவு கொள்ள அவளுக்குத் தைரியம் வரவில்லை. தன்னைத் தவறாகப் புரிந்துகொண்டு இவனும் என்னை விட்டுப் போய் விடுவானா? என்ற உணர்வு தட்டியதும், மனம்ஏங்கி கண்கள் உள்ளாகக் கலங்கத் தொடங்கின. ஆனால் அவள் கண்ணீரை வெளிவர விடவில்லை.

''இந்தச் சமுதாயத்தில் மனித ஆசைகளுக்கு மாறானவைதான் அதிகம் நடக்கிறது'' என்று தன்னைத்தைரியப்படுத்திகொண்டவள். பஸ் ரவுன் ஹோலுக்கு முன்னால் நின்றதும் இறங்கி முன்னால் உள்ள சுப்பிரமணியம் பார்க்கை நோக்கி நடந்தாள்.

கந்தசாமி 'பார்க்'கின் முன்னால் மிக வசீகரமாக, அவளை எதிர்பார்த்துக்கொண்டு நின்றான்.

அவன் பிரேமாவை ஆரம்பத்தில் விரும்பிய போது அவளை மனைவியாக்கிக்கொள்ளும் எண்ணம் இருந்ததுதான். ஆனால் அவளது குடும்ப நிலையை அவளிடமிருந்து அறிந்துகொண்ட பிறகு, தன்னுடைய குடும்ப கௌரவம், சொத்து, சீதனத்துடன் தன் சாதியில் பெண் இவற்றை எண்ணித் தன் ஆரம்ப எண்ணத்தைப் படிப்படியாக மாற்றிக் கொண்டு வீட்டார் திருமணம் செய்து வைக்கும் வரைதன் மானசீக ஆசைகளை இவளோடு தீர்த்துக்கொள்ளலாம் என்று முடிவு கட்டிவிட்டான். அவனுக்காக நல்ல இடத்தில் பெண் தேடுவதற்கும் வீட்டாருக்கும் சம்மதம் கொடுத்துவிட்டான். அவளுடைய கடைசிக் கடிதத்தில் அவள் தன்னுடைய முன்பிருந்த இரு காதலர்களைப்பற்றி எழுதிய பின், அவளிடம் அவன் வைத்திருந்த நல்ல எண்ணம்போய், 'ஓ! இவள் என்மனைவியாவதற்குத் தகுதியற்றவள் நல்ல காலம் தப்பிக்கொண்டேன்' என்று திருப்தியடைந்த அதே நேரத்தில் விரைவில் தன் பசியைத் தீர்த்துக்கொண்டு, அவளின் தொடர்பை அறுத்துவிட வேண்டுமென்று விரும்பினான். இன்று எப்படியாவது ஹோட்டலுக்கு பிரேமாவைக் கூட்டிச்சென்று, அறை எடுத்து இரவு பன்னிரண்டு மணி வரை தங்குவதாகத்தான் அவன் 'ஐடியா' இருக்கிறது.

பிரேமாவைக் கண்டதும் அவள் மேல் தான் உயிராக இருப்பதாக உணர்வுகளைக் காட்டிக் கொண்டான். வாசலில் நின்ற அவன் அவளைப் 'பார்க்கின்' உள்ளே அழைத்துச்சென்று ஒதுக்குப் புறமான ஒரு 'சீட்டில்' அவளை உட்காரவைத்துத் தானும் நெருக்கமாக உட்கார்ந்தான்.

இருட்டிக்கொண்டு வரும் நேரம். இன்னும் பார்க்கில் மின்சாரம் போடப்படவில்லை.

''பிரேமா உன்னை ஒரு கிழமையாகப் பார்க்காதது ஏதோ வெறிபிடித்த மாதிரியாகஇருக்கு''

பிரேமாவின் கை விரல்களை, தன் கைகளுக்குள் எடுத்து வைத்து மெதுவாகத் தடவிக்கொண்டிருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். அவள் அந்த உணர்வுகள் இன்றி, தன் பழைய விஷயங்களைப்பற்றித்தான் கேட்கப்போகிறான் என்ற பயத்தில் நிமிர்ந்து அவனுடைய முகத்தைப்பார்த்துப் புன்னகைத்தாள்.

"இன்றைக்கு நான் உன்னை ஏன் அழைத்தேன் தெரியுமா"

"தெரியாது"

"உன்னோடு தனியாக நீண்டநேரம் பேசவேண்டுமென்று ஆசையாயிருக்கு"

"இப்போ தனியாகத்தானே இருக்கிறோம்?"

"இந்தப் 'பப்ளிக்'கான இடத்தில் எத்தனை பேருக்குப் பயப்படவேண்டியிருக்கு"

"அதற்காக?"

"நாங்கள் இன்றைக்கு ஹோட்டலில் 'றூம்' எடுத்து தனியாக இருந்து பேசுவோம்"

அவள் நெஞ்சுக்குள் 'திக்' என்றது. அவள் பேசவில்லை. அவன் அப்படிக் கூறும்போது ஹோட்டலில் 'றூம்' எடுப்பதின் உணர்வுகளை அவள் உணரும் படியாகவே கூறினான். அவள் மௌனமாக நிலத்தை நோக்கியிருந்தபோது, அவளின் உயர்ந்த மார்பகங்களையும், ஈரம்கசியும் உதடுகளையும், நளினமான கண்களையும் வாளிப்பான மேனியையும் பார்த்துப்பார்த்து, அவனுக்குள்ளே சதைவெறி கிளர்ந்து கொண்டிருந்தது. அவள் விரல்களை இறுக்கிக்கொண்டான்.

"ஏன் மௌனம்? நீ என்னை விரும்பவில்லையா?"

"விரும்பாமல்-?"

"என்னை நேசிக்கவில்லையா?"

"நேசிக்கிறேன்!"

"நானும் உன்னை நேசிக்கிறேன். என் உயிருக்குயிராக நேசிக்கிறேன். பிறகு ஏன்பயம்"

"பயம் பெண்ணாக இருப்பதால்?"

அவள் அர்த்தத்தோடு கூறினாள்.

"என் ஆசை தீர்ந்ததும் உன்னை ஏமாற்றி விடுவேன் என்று எண்ணுகிறாயா?"

"ஏமாற்றி விட்டால்? என்றுதான் யோசிக்கிறேன். அதுதான் உலகத்தில் அதிகம் நடக்கிறது!"

"நீ என்னை நம்பவில்லை இல்லையா?"

"நம்புவதில்தான் என்வாழ்க்கையே இருக்கு. அதனால்தான் யோசிக்கிறேன்;"

"என்ன சொல்கிறாய்?"

"ஏமாற்றுபவர்களும், நல்லவர்களும் ஒருமாதிரியே பேசுகிறார்கள்!"

"இதில் நீ என்னை யாரென்று நினைக்கிறாய்?"

"அதுதான் தீர்மானிக்கமுடியாமல் இருக்கு"

"நீ ஏன் என்னை நல்லவன் என்று நினைக்கிறாய் இல்லை?"

"நல்லவன் என்று நான் நினைத்தால் மட்டும் போதுமா? நம்பிக்கை உண்மையாகி விடுமா? யார் அதற்கு உத்தரவாதம்"

"நானே, என்னை நம்பு!"

"அப்ப ஒன்று செய்வோம்! நாளை இருவரும் றெஜிஸ்டர் பண்ணிக்கொண்டு நீங்கள் நினைப்பது போல் செய்வோம். அதன்பிறகு உங்கள் எண்ணப் படி நடக்க நான் தயார்!',

அவளின் நீதியான கேள்வி அவனுக்கு உள்ளூரப் பயத்தைக் கொடுத்தது.

"நீ அவசரப்படுகிறாய் பிரேமா! எனக்குக்குடும்பம், பெற்றார் உறவினர் ஒருவரும்இல்லையா? அவர்களை இணங்க வைக்க காலம் வேண்டும்!"

"அதுவரை நீங்களும் அவசரப்படாதீர்கள்."

"நீ என்னை நம்பவில்லை. என்னை உணர்ச்சியற்ற மரம் என்று எண்ணுகிறாய்?"

"என்னை ஒரு விளையாட்டுப்பொருளாக நீங்கள் கருதுகிறீர்களா? நீங்கள் சற்று முன்பு கூறிய வார்த்தைகளை என்னோடு உடலுறவு வைத்துக் கொண்ட பின்னும் கூறினால்?"

அவன் மௌனமாக இருந்தான்.

"இப்படித்தான் முன்பும் என்னை நேசிப்பதாகக்கூறிய இருவரும் அழைத்தார்கள். திருமணம் செய்து கொள்வோம் என்று கூறிய போது உங்களைப்போலத்தான் குடும்பத்தைக் காட்டினார்கள்! நான் எதற்கும் ஏமாறாததினால் என்னை விட்டுப்போய் குடும்பத்தார் சொன்னதுபோல் திருமணம் செய்து நல்லவர்களாக வாழ்கிறார்கள். அவர்களை நம்பியிருந்தால்-?"

அவளுக்கு அவனால் என்ன பதில் கூறுவதென்று தெரியவில்லை. அவன் தன் விஷயத்தில் நோக்கமாயிருந்தான்.

"என்னை நம்பு பிரேமா நான் உன்னை உயிருக்குயிராக நேசிக்கிறேன்!"

"நான் ஏமாற்றப்பட்டால், எனக்காகச்சாட்சி சொல்லும் சக்திகூட உங்கள் வார்த்தைகளுக்கு இல்லை. அவை காற்றோடு கலந்து விடும்!" அவன் அவளை ஆசுவாசப்படுத்த அவளின் தோள்களில் கைகளைப்போட்டு ஆசையாகத் தடவிக் கொண்டான். பிரேமாவோ, அவன் நடவடிக்கைகள், வார்த்தைகளுக்குப் பின்னால் அவனை இயக்கவைக்கும் கருத்தைப் புரிந்து கொண்டிருந்தாள். அவள் எதிர் உணர்வுகள் எதுவுமின்றியிருந்தாள்.

"இவ்வளவு காலத்தில் என்னை உனக்குப்புரியவில்லையா பிரேமா"

அவள் மௌனம்.

"நீ இன்றைக்கு என்னோடு வரத்தான் வேணும்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதுதான்முடியாது!''

''இல்லை நீ வரத்தான்வேணும். இல்லா விட்டால் என்னை உயிரோடு காணமாட்டாய்!''

''முடியவேமுடியாது. கோழைகளை நான் நம்புவதில்லை!''

அவள் நிதானத்துடன் இருந்தாள். அவனுக்கு ஏமாற்றமும், கோபமும் ஒன்ருகவே எழுந்தன.

''என்னைஎன்னடி கோழைஎன்று சொல்கிருய்?
''இப்பொழுது உங்களைப் புரிகிறது''
''என்ன உனக்குப் புரிகிறது?''

''எனது ஒரு நாள் உறவு இல்லா விட்டால் சாகத்தயார். ஆனுல் என்னைத்திருமணம் செய்யத் தயாரில்லை!''

அவனுக்கு கோபம் கோபமாகவந்தது. அவளைப்பார்க்க அவனுக்கு ஆத்திரமாக வந்தது.

''உன்னை எனக்குத் தெரியுமடி!''

''என்ன தெரியும்?''

''உன்னுடையமுந்திய காதலர்களோடு சோரம் போயிட்டு எனக்குப் பத்தினியாக நடிக்கிருய் இல்லையா?''

இவனுக்கு என்ன சொல்வதென்று மௌனமாகஇருந்தாள்.

''எனக்குச் சொன்னது இரண்டுபேர். இன்னும் எத்தனை பேரோ? எனக்குப் பத்தினி வேஷம் போட்டு என்னைமணக்கலாம் என்றுபார்த்தாயா?"

''எனது தூய்மைக்காக வாதாட முடியாது தான்!''

''ஓ!பெரிய கண்ணகி! நான் அவளைத் திருமணம் செய்யவேணுமாம். உனக்கென்னடி தகுதியிருக்கு என் மனைவியாக வரநாயே! நீ ஒரு சொல்லப்பட்டவேசை!''

அவனுக்கு ஏமாற்றமும் விரக்தியும் ஆவேசத்தைக் கிளப்பிவிட்டன.

'பிரேமா அமைதியாகப்பார்த்துக் கொண்டிருந்தாள்.

"வார்த்தைகளுக்கு அர்த்தமுண்டு"

"நீ வேசைதான். என்னுடன் நடிக்கிருய். உன்னைப்போன்ற பெண்களால்தான் தமிழ்ச் சமுதாயமே கெட்டுப்போகுது!"

"நீ சொன்னுல் இச் சமுதாயம் ஏற்கத்தான் செய்யும். இந்தச்சமுதாயம் உன்பக்கந்தான்!"

"அதிகம் பேசாதே நாயே"
கந்தசாமி அவளைத் தின்னப்போவதுபோல் பார்த்தான். அவள் சொன்னுள்.

"ஆட்டிக்குட்டி தப்பிவிட்டால் ஓநாய்க்கு கோபம் வரத்தான் செய்யும்! ஆட்டுக்குட்டியைத் திட்டத்தான் செய்யும்!"

''என்னடி சொல்கிருய் வேசை!'' என்று அவள் கன்னத்தில் ஓங்கி அடித்தான். பேசாது கன்னத்தைத் தடவிக் கொண்டிருந்த அவள் கண்கள் கலங்கிப் போயின.

''உனக்கு நான் திருப்பி அடிக்க முடியாதென்று நினைக்கிருய்? நான் உனக்கு அடிக்க மாட்டேன் நீ ஒரு கோழை!''

''நீ ஒரு வேசை தானே! அப்படிச் செய்வாய்!''

''நான் உன்னேடு வேசையாட வராததினுல் நான் ஒரு வேசையில்லையா?''

அவன் எழுந்து நின்ருன். பார்க்கில் மின்சார வெளிச்சம் போட்டு விட்டார்கள். பலர் உள்ளே வந்து கொண்டிருந்தார்கள். வானெலி பாடிக் கொண்டிருந்தது.

கந்தசாமி சுற்றிவரப் பார்த்தான்.

''சீ! உன்னேடு நின்று பேசுவதே அவமானம்! நீ ஒரு சோத்துக்கு வழியில்லாத நாய்! நீவேசையாடத்தான் தகுதியானவள். உன்னை எந்த நாயும் வந்து கல்யாணம் செய்யாது!''

அவன் திரும்பிப் பார்க்காது விரைவாக நடந்து கொண்டிருந்தான். பிரேமா எழுந்து நின்று அவனை விட்டுப் போகும் அவனையே பார்த்துக் கொண்டு நின்ருள்.

அவன் அவளை வேசை என்று சொல்லிவிட்டுப் போகிருன்.

அவன் என்ன? இந்த சமுதாயமே அவளை அந்த அளவுக்குத்தான் கணிக்கிறது.

ஆனுல் பிரேமா இந்தச் சமுதாயத்துக்குப் பயப்படவில்லை.

ஆழ்ந்துபோன சிந்தனையால் அவளுடைய கண்களில் அவளுடைய அறிவை மீறிக் கண்ணீர் நிறைந்து கொண்டிருந்தது. அப்போது தன்னை எதிர்பார்த்திருக்கும் தாயின் நினைவும் வந்தது.

"அம்மா! நீ என்னை எப்படி நினைத்தாலும் சரி. நான் வாழ ஆசைப்படுகிறேன். அதற்காக எனக்கொரு கணவனைத் தேடுகிறேன்."

தனக்குள்ளாக முனகிய பிரேமா, கண்ணீரைத் துடைத்து எறிந்து விட்டு, தலைநிமிர்த்தி நடந்து கொண்டிருந்தாள்.


## "மலர்" சந்தா விபரம்

ஒருவருடம் ரூ. 6-00.
தனிப்பிரதி சதம் -/50.

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| பின்புற அட்டை | — | ரூ. 200/- |
| உட்புற அட்டை | — | ரூ. 150/- |
| முழுப் பக்கம் | — | ரூ. 125/- |

விபரங்களுக்கு
'மலர்'
21, மத்திய வீதி, மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வரசி

திமிலைக்கண்ணன்

முருகு தவழ்ந்து இளநகை பொங்க
முன்னிற்கும்
பருவமி தின்பக் கனிதரு மன்புப்
பழ மாகும்;
திருமக ளைத்தான் மருவுவ தென்று;
திடங்கொண்டு
அருகி லணைந்து கரமினி தென்று
அதைத் தொட்டேன்;

திருதிரு வென்று அவள்விழி வண்டு
திசை மாறிக்
கருவ மிகுந்து கனல்விழி ரெண்டும்
கய லாகிப்
பொருபொருவென்று விழிமழை கொண்டு
பொறை மீறி,
அருகி லிருந்து அகலவே சென்று;
அழ லானள்.


ஆர்வ மிழந்து ஆசை மறந்தாய்;
அடி ஏடி?
பார்வை யெனும்தீக் கணைதொடுக் கின்ருய்
பயம் மேவிக்
கார்குழ லென்னக் கருகியென் னுள்ளக்
கடல் பொங்க;
நேரெதிர் நின்றுநெடுந்தொலை சென்றேன்
நெருப் பானுய்?

உருகுதென் உள்ளம் உருகுதென் ஆவி
உடல் எல்லாம்
கருகுதென் இளமைக் காதல் இதென்ன;
கன வாமோ?
பெருகுதென் ஆசை பேய் வெறியாகிப்
பிண மாகிச்
சருகெனலாமோ தருமமீதாமோ?
தவ மீதோ?

அன்பே! அறிவே! அழகுத் திருவே
அடி வாடி
இன்பங் காண்போம் இருவரு மொன்றி
இனிமேல் நீ;
துன்பம் தராதே; சுகம் தர வா! வா!
இத்துய ரோங்கில்;
என்மெய் யினிலே உயிர் நிலையாதே!
என் செய்வேன்?

என்னக் கனிந்தாள்; இதயங் கவர்ந்தாள்
எதிர் வந்தாள்;
சின்னக் குறும்புச் சிறுவிழி காட்டிச்
சிரித் தாளே!
என்னே! அழகின் சிரிப்பிது? என்று;
எனை யந்தப்
பொன்னுக் களித்தேன்; உயிரென நெஞ்சிற்
புதைந் தாளே!

என்னிற் கலந்தாள்; இன்பமி தென்ருள்;
இனி யென்ன!
முன்னே தோன்றும் காட்சி களாகி;
முன் னின்று;
இன்னும் இன்னும் சிரிக்கின் ருள் என்
இதயத்தின்,
வன்னக் கவிதைச் செல்வம் அவளென்
வாழ் வரசி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தனி நெஞ்சம்

—கவிதா—

திருவாசகத்தை யாரோ ''போண் மெல்டிங் ஸோங்ஸ்'' என்று கூறியிருக்கிறார்கள் என்று நான் கேள்விப்பட்டிருந்தேன். 'வேனில்வேள் மலர்க் கணைக்கும்''. என்று அந்த மதுரமான குரல் பாடத் தொடங்குகையில் அது என் அனுபவமாகிக் கொண்டிருந்தது. 'ஊனெலாம் நின்றுருகப் புகுந்தாண்டான் இன்றுபோய் வானுளான்' என்று அந்தக் குரல் குழைகையில் என் ஊனும் உருக நான் உணர்ச்சிவசப் பட்டுக் கவிழ்ந்துபடுத்துத் தலையணையை இறுகப்பிடித்துக் கொண்டேன்.

எங்கிருந்து வருகிறது அந்தக்குரல்? அந்தச் சன்னமான பெண்குரலில் ஏன் இத்தனை சோகம்? இந்தச் சோகமயமான இசையின் ஊடாக அவள் இறைவனிடம் எதைக் கோரித்தான் இப்படி உருகுகிறாளோ! எனக்குள் நானே இந்தக் கேள்விகளைக் கேட்டுக்கொண்டேன். பதில் தரப்பக்கத்தில் யாரும் இல்லை!



அந்தக் குரலைக் கேட்கும் அனுபவம் எனக்கு என்னுடையசிறுவயதை நினைவூட்டுகிறது. என்னையும் தம்பிகளையும் சுற்றி உட்காரவைத்துத் தேவாரத் திருவாசகப் பாடல்களைச் சொல்லித் தருவார் அப்பா. என்னுடைய பத்தாவதுவயதில் அப்பா செத்துப் போக, அந்த வாழ்க்கையும் மாறிப்போயிற்று.

மங்கலாக என்னுள் எழுந்த இந்த நினைவுகள் அந்த அதிகாலைப்போது, உருக்கமானகீதம் எல்லாமாகச் சேர, நான் மயங்கிப்போய் உறைந்து கிடந்தேன்.

முதல் நாள் மாலை இந்த வீட்டின் ஒரு அறைக்கு நான் குடிவந்தபோது இப்படி ஒரு தெய்வீக அனுபவத்தை நான் எதிர்பார்த்திருக்கவில்லை. ஏனெனில் வீட்டுத் தலைவி என்று எனக்கு அறிமுகமான ஒரு பருமனான அம்மையாரின் குரல் டிரங்குப் பெட்டியைத் தரையில் வைத்து இழுப்பது போல இருந்தது. அவர்களுக்குப் பிள்ளைகள் இரண்டுபேர் — சிறுவர்கள். வேறு குடித்தனங்கள் வைத்திருப்பார்களோ என்று எண்ணவும் இடமில்லை. எனக்குக்கூட 'இல்லை' என்று சொல்லமுடியாமல் தான் இடம் தந்திருக்கிறார்கள். அப்பாவின் தூரத்து உறவுக்காரர் திரு சாம்பசிவம். இத்தனை சுதந்திரமாக இங்கே பாடுவது நிச்சயம் அவருக்கு உறவுக்காரியாகத்தான் இருக்கவேண்டும். யார்? என்ன உறவு?

அரை மணித்தியாலம்வரை பொங்கிப் பிரவகித்த இசைவெள்ளம் வடிந்துவிட்டது. வேறெங்குமல்ல; என் இதயத்துக்குள்ளேதான். அதனால், இந்தக் காலை வேளையில் என் மனம் தெளிவாக அமைதியாக இருக்கிறது. என்னால் ஒழுங்காகச் சிந்திக்கவும் செயல்படவும் முடிகிறது. இங்கே நலமாக வந்து சேர்ந்திருப்பதைப்பற்றியும் உத்தியோகம் மனதுக்குப் பிடித்திருக்கிறதா என்பதைப் பற்றியும் அம்மாவுக்கு எழுத வேண்டும் என்பது நினைவுக்கு வந்தது. என்னைச் சுற்றி என் அறை ஒரே அலங்கோலமாய் இருப்பது கருத்தில் உறைக்கிறது. பரபரவென்று எல்லாப் பொருட்களையும் ஒழுங்காக அடுக்கி வைத்தேன். ஒரு நாளுமில்லாதபடி அம்மாவுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதிக் கவரில்வைத்து ஒட்டினேன். புதிய வேலையில் தெரிந்த சிக்கல்கள் எல்லாம் இன்று தூசாகத் தெரிகின்றன. அந்தக் கானத்துக்கு இத்தனை வலுவா? என்னால் நம்ப முடிகிறது. ஏனென்றால் இசைக்கு என்னை மயக்கி ஆளும் சக்தி எப்போதுமே இருந்து வந்திருக்கிறது. எல்விஸ் பிரெஸ்லியும் ஜிம் றீவ்ஸும் தோற்க, இன்று இவள் வென்றிருக்கிறாள்.

கைகளைத் தலைக்கடியில் கொடுத்து மல்லாந்து படுத்தவாறே யோசித்துக்கொண்டிருந்தேன் நான். தினமும் அதிகாலையில் என்னைத் துயில் எழுப்பும் கானம் தேவகானமா? மானிடருடையதானால் கண்ணிலே தென்படாமல் அந்த வீட்டில் அப்படி அடைந்துகொண்டு வாழும்படியான துர்ப்பாக்கியம் என்ன நேர்ந்துவிட்டது அந்தக்குரலுக்குரியவளுக்கு? திரு சாம்பசிவத்தின் திரண்ட செல்வத்தால் ஈடுகொடுத்துச் சரிக்கட்டமுடியாத என்ன துன்பம் அந்தத் தனிமனத்தின் மூலையில்உறைந்துகிடக்கும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இவை ஒன்றையும் அவரிடம் வாய் விட்டுக் கேட்கவில்லை. இவை எனக்கு அநாவசியம் என்று அவர் நினைக்கலாம். ஆனால், என்னை அறியாமலே என்னுள் புகுந்து நல்லனவும் தீயனவும் காட்டுகின்ற அந்தக் குரலுக்குரியவரைப் பற்றி அறிந்துகொள்ளத் துடிப்பது அநாவசியமானதாக எனக்குப்படவில்லை. எல்லாவற்றிலும் மேலாக அந்தக் குரலில் தெரியும் இனம்தெரியாத வேகம் என் இதயத்தைப் பிழிவதை என்னால் அலட்சியம் செய்துவிட முடியவில்லை. யாரிடம் போய்க் கேட்பது?

கதவு மெதுவாகத் தள்ளப்பட்டது. தயங்கித் தயங்கி ஒரு பிஞ்சுப்பாதம் என் அறைக்குள் அடியெடுத்து வைத்தது. ''வாம்மா மஞ்சு, என்ன வேண்டும்?'' ஒன்று நான் உற்சாகப் படுத்தியதும் அவள் அறைக்குள்ளே வந்தாள் — சாம்பசிவத்தின் சின்ன மகள்!

''மாமா இது ஒடஞ்சு போச்சு. ஒட்டிக் குடுக்கிறீங்களா?'' என்று, ஒரு சின்ன ஒட்டச் சிவிங்கியின் தலையை வேறாகவும் உடம்பை வேறாகவும் என்னிடம் ஒப்படைத்தாள் அவள். ஒரு சிறிய பென்சில் சீவும் கட்டர். என்னிடம் வந்தால் காரியம் சாத்தியமாகும் என்று நம்பி வந்திருக்கின்ற அந்தக் குழந்தை உள்ளத்தை ஏமாற்றி வெளியே அனுப்பிவிட எனக்கு மனம் வரவில்லை. டிராயரைத் திறந்து 'யூஹூ' டியூப்பை எடுத்தபோது பளிச்சென ஒரு எண்ணம். இவளிடம் கேட்கலாமே.

ஒட்டிக்கொடுக்கையில் 'தாங்ஸ் மாமா' என்று ஓட இருந்தவளைப் பிடித்துவைத்து அந்தக் கேள்வியைக் கேட்டேன். அவசரத்தில் அவள் கூறிவிட்டு ஓடியதிலிருந்து நான் தெரிந்து கொண்டது, அவள் சாம்பசிவத்தின் விதவைச் சகோதரி என்பதுதான்.

தினமும் அதிகாலையில் என்னைத் துயிலெழுப்பி, அந்த நாளைய போராட்டத்துக்கு வேண்டிய தைரியத்தையும் சாந்தியையும் என்னுள் நிறைத்து அன்னையாய் வழிகாட்டியாய் என்னை இயக்கிக் கொண்டிருந்த அந்தத் வெய்வீகக் குரலுக்குரியவள் ஒரு விதவை. ஊன் எலாம் நின்று ருகப் புகுந்தாண்டான் இன்றுபோய் வானுளான் என்று உருகுவதன் அர்த்தம் எனக்கு இப்போது தான் முழுமையாகத் தெரிகிறது. எங்கேயோ பாய்ந்திருக்கவேண்டிய இத்தனை உணர்ச்சிமயமான ப்ரேமை, அது பறிக்கப்பட்ட துயரத்தில், இத்தனை வேகமாக ஆண்டவனிடம் பிரவகிக்கிறதோ?

எப்படி இருந்தாலும் எனக்கு அந்த அம்மையாரிடம் மிகுந்த பக்தி ஏற்பட்டுவிட்டது. ஏதாவது ஒரு நல்ல நாளில் அந்த அம்மையாரின் கால்களில் வீழ்ந்து வணங்கி ஆசீர்வாதம் பெற வேண்டும் என்று நினைத்துக்கொண்டேன்.

ஒவ்வொரு நாளும் அவள் பாடுகின்ற திருப்பள்ளி எழுச்சியுடன் எனக்குக் காலை விடிகிறது; அந்த ஒவ்வொரு காலையிலும் அவள் பால் என் இரக்கம் மலையாகத்தான் குவிகிறது — அத்தனை உருக்கமாக அவள் பிரார்த்திக்கிறாள். இந்த நகரின் வேகத்துக்கும் நாகரித்துக்கும் அடிமைப் பட்டுப் போய்விடாது என்னை மனிதனாக வாழ வைத்துக்கொண்டிருந்த அவளிடம் நன்றியும் கூட நாளுக்கு நாள் வளரத்தான் செய்தது. அம்மாவுக்கு எழுதும் கடிதங்களில் எல்லாம் அந்தச் செயலைப்பற்றி நான் குறிப்பிடாமல் இருந்ததில்லை. அம்மா எழுதியிருந்ததுபோல அப்பாவின் ஆசீர்வாதம்தான் இப்படிக் கண்ணுக்குப் புலனாகாத கீதமாக என்னைச் சூழ்ந்து காப்பாற்றுகிறதோ! இளம் வயதும் கைநிறையச் சம்பளம் தரும் உத்தியோகமுமாக நான் இங்கே வந்தபோது போகாத பொழுதைக்கழிக்க எத்தனையோ வழிகள் என் மனதில் இருந்தன. ஆனால் தாய்மையான அந்தக் குரலின் சக்திக்குக் கட்டுப்பட்டு, சிகரெட் குடிக்கிற ஒரே ஒரு கெட்ட பழக்கமும் என்னை விட்டுத் தயங்கித் தயங்கிப் பிரிந்து போயிற்று. இங்கிருந்து புறப்படுகின்ற காலை வேளைகளில் மனம் நிறைய அமைதியை எடுத்துச்சென்று நாளாந்தப் போராட்டங்களுக்கு விலையாகக் கொடுத்துவிட்டு வருகிறேன். ஆனாலும்கூட எதையும் இழந்த உணர்வு தெரிவதில்லை. நான் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன். மன நிறைவு என்பது இலேசில் கிடைக்கக்கூடியதா என்ன?

* * *

குழந்தை மஞ்சுளா எனக்குத் தோழி — நான் அவளுக்குத் தோழன். இரண்டுபேருக்குமிடையில் அபூர்வமான ஒரு பிணைப்பு இருந்தது. கசியக் கசிய உள்ளங்கையில் தின்பண்டம் எதையாவது பொத்தி எடுத்துவந்து அவள் நீட்டும்பொழுது மறுப்பதற்கு எனக்கு மனம் வருவதில்லை. இதுவும்கூட என்னிடம் ஒரு மாறுதல்தான். நான் ஒவ்வொரு சின்ன இதயத்தையும் கூட மதிப்பதற்குக் கற்றுவைத்திருக்கிறேன் — ஜாடோ பழக வேண்டாம் என்று அன்னை வேண்டி வேண்டிக் கெஞ்சியபோது விட்டுக்கொடுக்காத நான், என்னுடைய கிரிக்கெட் 'பட்'டைத் தொடவேண்டாம் என்று தம்பியைக் குட்டி அழவிடுகிறநான் இப்படி மாறிப்போய் இருக்கிறேன் — இது அல்லது இந்த வீட்டில் ஒவ்வொருவருடையதுமான செயல்களும் மனமும் எனக்குப் புரிகிற விதத்தில் நானும் மாறிக் கொண்டிருக்கிறேன் என்ற பிரமையா?

பிரமையாக எப்படி இருக்கமுடியும்? அன்று நான் விவேகானந்தரின் வாழ்க்கையைப் பற்றிய நூலொன்று வாங்கி வந்தேன். அதை ஷெல்பில் வைக்கப் போனபோது என்னுடைய பழைய மனம் என்னைப்பார்த்துச் சிரித்தது. அகாதா கிறிஸ்டியையும் ஏர்ல் ஸ்டான்லி கார்டனரையும், படிந்திருந்த தூசியைத் தட்டிவிட்டு ஜன்னலில் எடுத்து வைத்தேன். கூடவே பொப்புல மம்பேவரிட்ஸ் பாட்டுப் புத்தகங்களில் சிலவற்றையும் தூக்கிவைத்தேன். பழைய புத்தகங்கள் வாங்குபவர்களிடம் கொடுத்துவிடலாம். சதா சீட்டியும் பாட்டுமாக அமர்க்களப்படுகிற எனது உதடுகள் எப்படித்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை மறந்துவிட்டனவோ. மனிதன் சூழ்நிலைக்கேற்ப மாறுகிறான், அல்லது மாற்றப்படுகிறான் என்பது உண்மையா? உண்மையானால் இன்று இருக்கிற நான், இனி வரப்போகிற ஏதோ ஒரு சூழ்நிலையில் மாறிவிடுவேனா? இப்படியே மாறி மாறிக் கொண்டிருந்தால் உண்மையான நான் என்பது யார்? சிலவேளை, மனதில் அதிகபாதிப்பையும் பிடிப்பையும் ஏற்படுத்துகின்ற ஒருவிதச் சூழலுக்கு ஒரு மனதை உருவாக்குகின்ற சந்தர்ப்பம் அதிகம் கிடைக்கிறதோ?

எனக்குச் சிரிக்கவேண்டும் என்று தோன்றியது. நான் ஏன் இப்படித் தத்துவ விசாரணையில் இறங்க வேண்டும்? அத்வைதம் துவைதம் என்றெல்லாம் திரு சாம்பசிவம் அடிக்கடி என்னிடம் கதைக்கிறார்; ஆத்மீகத்தைப்பற்றி அவரிடம் நிறைய விசாரம் இருக்கிறது. அவரிடம் இருந்து என்னிடம் தொற்றிக்கொண்ட விசாரமோ இது? இந்த இடத்தில், அவர் ஒருநாள் என்னிடம் பேசிக் கொண்டிருந்தபோது சொன்னதை நினைத்துப் பார்க்கிறேன்.

''தம்பீ, இன்றைக்கு உலகம் போகிற வேகத்திலும் பரபரப்பிலும் உள்ளம் என்ற ஒன்றோ ஆத்மா என்ற ஒன்றோ இருக்கிறது என்பதைப் பற்றி அதிகமானோருக்குப் பிரக்ஞையே இல்லை. கல்வி அதுகூட போகிற போக்கில் டாக்டர்கள் என்ஜினியர்கள் என்று புதிய காட்டுமிராண்டிகளைத் தான் உருவாக்குகிறது என்று ஏதோ ஒரு அறநெறிக் கல்வி பற்றிய நூலில் வாசித்திருக்கிறேன். இதில் உண்மை இல்லாமல் போய்விடவில்லை. முன்பெல்லாம் கல்விதான் ஆத்மீகத்தை வளர்த்தது. அந்தக்காலத்தில் கல்வியாளர்களை எல்லாம் 'சான்றோர்கள்' என்றும் குறிப்பிடுவார்கள். இன்றைக்கு 'எஜுகேடட்' என்று குறிப்பிடப்படுபவர்களில் எத்தனைபேர் சான்றோர்களாக இருக்கிறார்கள்? பொதுவாகப் பார்த்தால், அடுத்தவனும் வாழ வேண்டும் என்ற நல்ல எண்ணம் பரவலாக அழிந்துபோய், தான் மட்டும்; தனக்காக எல்லாம் என்று நினைக்கிறதைச் செயல் படுத்தத்தான் இன்றைய கல்வி அதிகமாக உதவுகிறது.''

இப்படி அவர் சொன்னபோது அவருடைய சிவந்த உப்பலான முகம் மேலும் சிவந்து உப்பலாகக் காணப்பட்டது. உணர்ச்சிவசப்பட்டிருந்தார்.

'இன்றையக் கல்வியைப் பற்றி உங்களுக்குத் திருப்தி இல்லை என்று தெரிகிறதே. சந்திர மண்டலத்துக்கே போய் வந்துவிட்டானே மனிதன். கல்வி வளர்ச்சி இல்லையா இது?'' என்று நான் கேட்டுவைத்தேன்.

''ஓ! நீங்கள் சொல்லுவது அறிவு வளர்ச்சி. நான் சொல்வது ஆத்ம வளர்ச்சி. இரண்டும் கல்வியால்ஏற்படவேண்டியதுதான்—அறிவுவளர்ச்சியில் சந்திர மண்டலத்தைத் தொட்டு உயர்ந்து நிற்கிற நூற்றாண்டில் ஆத்மவளர்ச்சியைப் பொறுத்த மட்டில் அநேகமாக ஒவ்வொரு மனிதனும் அனாதையாக நிற்கிறான். அறிவின் வளர்ச்சியால் பூமியைத் தோண்டிப் புதையல் எடுத்துச் செல்வந்தனாகிற மனிதன் ஆத்மவளர்ச்சியில்லாததால் பரஸ்பர அன்பும் நம்பிக்கையும் குறைந்துபோய் ஏழையாகி நிற்கிறான். மனைவியைத்தவிக்கவிடுகிற கணவன், கணவனைத் தவிக்கவிடுகிற மனைவி, இளம் பிள்ளைகளைத் தவிக்கவிடுகிற பெற்றோர், முதிய பெற்றோரைத் தவிக்கவிடுகிற பிள்ளைகள் இப்படிக் குடும்பம் தோறும் காணுகிற காட்சிகள் எல்லாம் மனித மனத்தின் பரிணும வளர்ச்சிக்குச் சாட்சியங்களாகவா இருக்கின்றன? இந்த நிலை நீடித்தால் 'கனிபால்ஸ்' மாதிரி மனிதனை மனிதனே இரக்கமற்றுக் கொன்று சாப்பிடும் நாள் விரைவிலேயே வந்துவிடுமே. அறிவின் வளர்ச்சியிலும் உடம்பின் வளர்ச்சியிலும் முன்னேறிக் கொண்டே போகின்ற மனிதவர்க்கம், ஆத்ம வளர்ச்சியில் பின் வாங்கிக் கொண்டே போகிறதே- இதுதான் என்னுடைய வருத்தம்'' என்றார்.

அவர் இப்படி எல்லாம் பேசுவது எனக்குப் புதிதல்ல. ராமகிருஷ்ணமிஷனுடன் இவர் அதிகம் தொடர்புகொண்டவர். ராமகிருஷ்ணர், ஆதி சங்கரர் என்று நான் கேள்விப்பட்டுப் பரிச்சயமில்லாத பலரைப்பற்றியே இவர் எப்பொழுதும் பேசுபவர். அதனால் அவர் நோக்குகிற கோணம் எனக்கு விளங்குகிறது. நானும் சிறிது சிறிதாக அந்தக் கோணத்திற்குத் திரும்பிக் கொண்டிருக்கிறேன் என்ற உணர்வு ஏற்படுகிறதே - இதுதான் எனக்குப் புதிது.

''படார்......''

என் சிந்தனை திடும்மென்று கலைந்தது. திரும்பிப் பார்த்தால் எனக்கு இதயமே உறைந்துவிட்டது. மஞ்சு எப்போது இங்கு வந்தாள்? எப்போது அந்த உயரமான ஸ்டூலில் ஏறினாள்? ஸ்டூல் கவிழ்ந்து குழந்தை விழுந்துவிட்டாள் — பிரக்ஞை தப்பிப் போயிற்று — பேச்சுமூச்சில்லை.

என் மனதில் ஏற்பட்ட பதைப்பில் சட்டென அவளை வாரித் தூக்கிக்கொண்டு ஓடினேன். மிஸ்டர் சாம்பசிவம் என்று இரைந்தேன், பதில் இல்லை - குழந்தையைத் தனியாக விட்டுவிட்டு எல்லோரும் வெளியே போயிருக்கமாட்டார்களே!

எனக்கு இப்போது, இதுவரை என் கண்ணிலேயே பட்டிராத அந்தப் பெண்ணின் ஞாபகம் வந்தது. எந்த மூலையில் தன்னை மறந்து உட்கார்ந்திருக்கிறாளோ, நிச்சயம் இங்கேதான் இப்பாள்.

ஏதோ ஒரு தீர்மானத்தில் தினம் தினம் அந்தக் குரலைக் கேட்டுப் பழகிய திக்கில் நடந்தேன். தோளில் குழந்தை — மனதில் பதட்டம். கதவு திறந்துதான் இருந்தது. ''அம்மா ....'' என்று தொடங்கியவன் ஆச்சரியப்பட்டுப் போனேன். குழந்தையை நழுவவிடாதது ஆச்சரியம்தான்.

சுமார் இருபது அல்லது இருபத்திரண்டு வயது மதிக்கக்கூடிய, வெள்ளைச் சேலை அணிந்திருந்த அந்தத் தபஸ்வினி, ஏற்கனவே கண்ணில் வாழ்ந்த சோகத்துடனும், புதிதாகக் குடியேறிய அதிர்ச்சியுடனும் எழுந்து நின்று என்னைப் பார்த்தாள். அந்தக் காட்சி, குளத்தின் நடுவே அல்லி மலர் ஒன்று பூத்துத் தலையை நீட்டுவதுபோல இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ, மஞ்சுவுக்கு என்ன?" என்று அவள் அலறிய பிறகு நான் சுய உணர்வு பெற்றேன். பிறகு மஞ்சுளாவுக்கு சிகிச்சை அளித்ததும், இன்று இவள் ஓடோடித் திரிகிறாள் என்பதும் இங்கே விரிவாக விபரிக்கத் தேவையில்லாதவை. என் மனதில் அன்றைக்கு ஏற்பட்ட அதிர்ச்சி இருக்கிறதே — அதுதான் இங்கே பிரதானம்.

"அம்மையாராவது மண்ணாங்கட்டியாவது. சாம்பசிவத்தின் மூத்தசகோதரியாக இருப்பாள் என்று எண்ணியிருந்தேன் — இவள் இளைய சகோதரி. இந்தப் பச்சைப் பாலகியிடம் இருந்து அவள் கணவனைக் கவர்ந்துகொண்ட காலனைப் பார்த்தால் ஒரு உதைவிடலாம் என்று தோன்றிற்று. நளினமான உணர்ச்சிகளுடைய செளந்தர்யவதியான அவள், வாழ்வதற்குத் துடிக்கிற வயதில், வாழமுடியாமல், உருகி உருகிச் செத்துக்கொண்டிருக்கிறாள்.

திரு சாம்பசிவத்தின் மேல் இருந்தாற் போலிருந்து எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. மணிக்கணக்கில் உட்கார்ந்து தத்துவம் பேசத் தெரிந்திருக்கிற அவருக்கு, மலைபோலச் செல்வம் சேர்த்துக் குவித்து வைக்கத் தெரிந்த அவருக்கு, இந்தச் சகோதரி படுகிற துன்பம் தெரியவில்லையா? தெரிந்தும் வேண்டுமென்றே அந்த வீட்டின் ஒரு மூலைக்குள் அவளை அடைத்துவைத்து ஆத்மீகத் துக்குப்பலம் சேர்க்கிறாரா? நான் அவரிடம் கண்ட பக்தி, நியமம், தொண்டுமனம் இவை எல்லாம் பொய்யாக உணர்ந்தேன்.



இவ்வளவு சிறிய வயதில் அவள் தனக்குத் தானாகப்பட்டு அனுபவிக்கிற துன்பம் அவர் இதயத்தில் கொஞ்சமாவது வைத்திருந்தால் இதற்குப் பரிகாரம் தேட முயற்சிக்கமாட்டாரா? முயற்சிப்பதாகத் தெரியவில்லையே—எனக்கு அவருடைய மனிதத் தன்மையைப்பற்றியே சந்தேகமாய் இருந்தது. குழந்தை மஞ்சு விழுந்த அன்று, அவரும் மனைவியுமாக சினிமாவுக்கல்லவா போயிருந்தார்கள். எப்படி முடிந்தது அவளுடைய அண்ணனுக்கு? அவளுக்கு யாரோவான நான் இந்தச் சில நாட்களில் அவளைத் தவிர, அவள் படுகின்ற துன்பத்தைத்தவிர வேறு நினைப்பின்றி தவிக்கிறேன். தன்னுடைய சோகம் கலந்த அமிருத கானத்தால் ஏற்கெனவே அவள் என்னுள் நிரப்பி விட்டிருந்த இரக்கம் இப்போது பன்மடங்காகி எனக்கு அவளைத் தவிர வேறு நினைப்புகளே இல்லாமல் செய்துவிட்டிருந்தது. மல்லிகைப் பூவும் சாம்பிராணியும், சந்தனமுமாக மணந்துகொண்டிருந்த அந்த அறையின் நடுவே, உடலில் வெள்ளைப் புடவையும் கண்ணில் சோகமுமாக "வாழ்க்கையின் மணத்தை எல்லாம் நான் இழந்துவிட்டேன்" என்பதுபோல அவள் எழுந்து நின்ற அந்தக் கணம் என்னுள் நிரந்தர ஞாபகமாகிவிட்டது. ஆளைத் தெரியாமல் அடிமையாக்கிக்கொண்ட கீதம், ஆளைத் தெரிந்தபின் அம்பாகித்தைக்கிறது. 'புக்கு நிற்பதென்று கொல்லோ என் பொல்லாமணியைப் புணர்ந்தே' என்று அவள் பாடும்போது - அந்தத் தவிக்கவிடப்பட்ட தனிமனதின் துயரம் என் மனதை முழுவேகத்துடனும் தாக்குவதால் ஒரு நாளும் அழுதறியாத நான், அழுவதே ஆண்பிள்ளைக்கு அவமானம் என்று நினைக்கின்ற நான், மெளனமாக தலையணையில் முகம் புதைத்து அழுகிறேன்.

நான் கஷ்டம் தெரியாமல், கவலைகள் அறியாமல் வளர்ந்து விட்டவன். பாடசாலை நாட்களிலும், கலாசாலை நாட்களிலும் பெண்களைக் கேலி செய்து அழவைப்பதில் பேர் பெற்றவன். இன்று இளைஞனாகி, உத்தியோகமும் பெற்றுப் பலகாலம் சென்று விட்டது. இதுவரை என் மனதில் மென்மையான எந்த உணர்வுகளையும், எந்தப் பெண்ணுமே எழுப்பியதில்லை. இவளோ, தானே மெளனமாகத் துடிக்கிற துடிப்பால் என் இதயத்தின் இரக்கத்தை எல்லாம் குவித்துக்கொண்டாள். இரக்கத்தைவிடவும் மென்மையான உணர்வு எதுவும் இருக்க முடியுமா? அன்பென்ற அடிப்படை அல்லாமல் இத்தகைய பேரிரக்கம் என் மனதில் தோன்றுவதற்குக் காரணம்தான் என்ன? கேள்விகளுக்குப் பதில் எனக்குத் தெரியவில்லை!

கடற்கரையில், பூங்காக்களில், தெருவீதிகளில், தியேட்டர்களில் கணவன்மாரோடு உல்லாசமாக உலாவுகின்ற பெண்களைப் பார்க்கும்போதெல்லாம், அவள்தான் என் ஞாபகத்துக்கு வருகிறாள் — கோவில்களுக்கு முன்னால் பூக்கடைகளில் சரம் சரமாய்த் தொங்குகிற மலர்களைப் பார்க்கும்போதும், போத்தல்களில் அடைத்து வைத்திருக்கிற குங்குமத்தின் வகைகளைப் பார்க்கும்போதும் என் ஞாபகத்துக்கு அவள் வந்து கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்னை அறியாமலே என் நினைவுகளில் அவளுக்கு இந்த முக்கியத்துவம் கிடைத்திருக்கிறது. புற உலகில் இதுநாள்வரை எனக்கு இருந்துவந்த கவர்ச்சிகள் எல்லாம் அற்றுப்போய் — என் நினைவுகளில் ஒரேஒரு கவர்ச்சியாய் அவள் மட்டுமே தெரிகிறாள்.

இது — இதற்குப் பெயர் – இதற்குப் பெயர் தான்...... வேண்டாம் என்னுள்ளே அவளுக்காக எழுகின்ற இந்த உணர்வுகளுக்கு எனக்குத் தெரிகின்ற அந்தப் பெயரைச் சூட்டிவிட்டு வெளியுலகத்தின் முன்னால் வாயைத் திறந்து கூற எனக்குத் தைரியம் வேண்டாமா? சாம்பசிவம் கழுத்தை நெரித்துப் போட்டுவிடமாட்டாரா? அம்மாதான் சும்மா இருப்பாளா? அவள் ஓ! அவள். அவளுள்ளும் ஒரு இதயம் இருப்பதை மறந்துவிடலாமா நான்? பாரதியார் பாடியதுபோல ''கைக்கும் வேம்பு கசந்திடு செய்யாபல்—காட்சியற்ற கவினுறு நீர் விழி'' என்ற வகையாகப் போய்விட்டால் — அது எத்தகைய பெருந்துயர்!

“தம்பீ,-இந்தப் படத்தில் இருக்கிற பெண்ணை உனக்குப் பிடித்திருக்கிறதா என்று எழுது'' என்று அம்மாவிடம் இருந்து கடிதம் வந்திருக்கிறது. இந்தப் படத்தில் இருக்கிற பெண் அழகாய் இருக்கிறாளா என்று நான் எழுதவேண்டியது; மிகுதியை அம்மா பார்த்துக்கொள்ளுவாள்.

என் மனதில் நிழலாக ஒரு உருவம் எழுகிறது அவள் பதுமையாய் மெல்ல அசைந்து நடக்கும் அழகுபார்த்து அவள் கால்விரலுக்கு மெட்டியணிவித்து அழகுபார்க்க விரும்பியவன்நான். மௌனமாய்த் தன் இழப்புகளைத் தாங்கி நிற்கும் அவள் இதயத்தின் அழகுபார்த்து அதற்கு முழு மகிழ்ச்சியையும் மீட்டுக்கொடுத்து அழகுபார்க்க விரும்பியவன் நான். படத்திலிருக்கிற இந்தப் பெண்ணின் அழகுபார்த்து எழுதவேண்டுமாம். ''இல்லையம்மா என்னால் முடியாது. என் வாழ்வில் மங்களகரமான நிகழ்ச்சி ஒன்று நடைபெறத்தான் வேண்டுமென்றால் என் மனம் நிறைந்த மங்களகரமான பெண்ணாக எழுபவள் தன் வாழ்வின் மங்கலங்களை எல்லாம் இழந்த இவள்தான். இவளைத் தவிர வேறு எந்தப் பெண்ணினுடைய அழகும் என்னைக் கவர முடியாது.''

என் நினைவுகள் சாம்ப சிவத்தைப் பற்றிப் படர்ந்தன. அவளைச் சிறை வைத்திருக்கிறமாதிரி அல்லவா அவர் வைத்திருக்கிறார்? ஆத்மீகம் ஆத்மீகம் என்று கூறிக்கொண்டு இப்படி ஒரு தனி மனத்தின் ஏக்கங்களுக்கும் அபிலாஷைகளுக்கும் சாகும்வரை தீர்ப்புக் கொடுக்காமல் தர்மத்தைப் பற்றியும் அறத்தைப்பற்றியும் பேசுகிறாரே, இது ஏற்றுக்கொள்ளத் தக்கதாகப்படவில்லை எனக்கு. செத்துப்போனவனை உயிருள்ள ஒருவனாக நினைத்து பிரமையில் உணர்ச்சிகளைக் கொன்று கொண்டு வாழ் என்பது எந்தவித தர்மமாகவும் எனக்குத் தெரியவில்லை. ஒருநாள் சாம்பசிவத்திடமே இது பற்றிக் கேட்டுவிட்டேன். அவர் சொன்ன பதில் எனக்குத் திகைப்பைக் கொடுத்தது.

''நீங்கள் ஒரு தனி மனத்தின் பலவீனத்தைக் காட்டி வாதிடுகிறீர்கள் ஆனால் அவளும் கூட ஒரு தனிமனத்தின் உறுதியைக் காரணம் காட்டித் தான் தன்னை மற்றொரு விவாகத்திலிருந்து விலக்கிக் கொள்கிறாள். அவள் திருமணம் செய்து கொள்ளச் சம்மதித்தால் அதைவிட மகிழ்ச்சி எனக்கு வேறு கிடையாது.''

அவர் உண்மைதான் பேசுகிறாரா என்று நான் சந்தேகப்பட்டேன். ஏனெனில் தானாகவே தெரிந்து எடுத்துக்கொண்ட வாழ்க்கை அவளுக்கு அத்தனை துன்பத்தைக் கொடுக்குமா என்ன? எப்படியிருந்தாலும் அவர் அதை என்னிடம் சொன்னார் என் பதில் ஒரு முக்கியத்துவம் இருக்கத்தான் செய்தது. சீக்கிரமே !அவர் சொற்களை அவரிடம் திரும்பிச் செல்லவேண்டிய சந்தர்ப்பம் வரலாம் அல்லவா...?

கொஞ்ச நாட்களாகவே என் மனதில் அமைதி இல்லை. அம்மாவிடமிருந்து நான்கு கடிதங்கள் வந்துவிட்டன. ஒன்றுக்கும் பதில் போடவில்லை இனி நான் செய்யவேண்டியது என்ன என்பது பற்றி ஒரு முடிவுக்கும் என்னால் வரமுடியவில்லை. ஆனால் விரைவிலேயே நான் ஒரு முடிவுக்கு வந்துவிடவேண்டும் என்பது தெரிகிறது. மனதில் குழப்பங்கள் ஆழ, குழம்பியவனாகவே குமாரவேலுக்கு முன்னால் போய் நின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரவேல் என்னுடைய நல்ல நண்பன். வேடிக்கையாகப் பேசுவான். ஆனாலும் தெளிவான சிந்தனையுடையவன். என் குழப்பத்தில் ஒரு சிறு அளவையாவது தீர்த்துவைப்பான் என்ற நம்பிக்கை என்னிடம் இருந்தது அவன் ''என்னடா'' என்று கேட்டபோது நான் சுற்றி வளைக்கவில்லை. நேரடியாகவே கேட்டேன்.

''விதவா விவாகத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?''

''பாரதிதாசனை எனக்கு நிறையப் பிடிக்கும்' என்று கையில்வைத்திருந்த சிகரெட்டின் சாம்பலைத் தட்டினான் அவன்.

எனக்கு ஆத்திரம் வந்தது.

''எப்போதுமே தங்களைத் தீண்டாத துன்பம் மனிதருக்கு வேடிக்கையாகத்தான் இருக்கும் போலிருக்கிறது.''

''டேய் இலக்கிய ஞான சூனியம், பாரதிதாசன் கவிதைகளைக்கையாலே தொட்டதுகூட இல்லையா நீ? பாரதிதாசன் விதவா விவாகத்தைப் பற்றிக் கூறியிருப்பதைப் படித்தால் நீ அப்படியே நெகிழ்ந்து விடுவாய். நீ மட்டுமென்ன. நானும் தான். ஆனால் அதற்காக அவர் கருத்தை முற்றாக ஆதரிக்கிறேன் என்றும் சொல்ல முடியாது. நான் விதவா விவாகத்தை ஆதரிக்கிறேன் ஆதரிக்கவில்லை; இரண்டும்தான். இந்த விஷயம் தனிமனங்கள் சம்பந்தப்பட்டது. மாடு ஆடுகளைப்போல ஒரேவிதமாக எண்ணிக்கொண்டு சட்டங்கள் வகுப்பது மனித மனங்களுக்குப் பொருந்திவராத விஷயம் என்பது என்னுடைய கருத்து. ஒரு பெண் செத்துப்போனவனையே நினைத்துக்கொண்டு தன் வாழ்க்கையைக் கருக்கி முடிக்கவேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. மறுபடியும் விவாகம் செய்ய விரும்புகிறவர்கள் தாராளமாக செய்து கொள்ளலாம். ஆனால் எங்கேயாவது சிலமனங்கள் மறுபடி திருமணத்தை நினைக்காமல் வாழ்ந்தால் அவற்றைத் தேடிப்பித்து வணங்க நான் தயாராய் இருக்கிறேன். அவர்களுக்கு வைதவ்யம் என்பது தண்டனை அல்ல; தவம் உடம்பைப்பற்றி மட்டுமல்ல; உள்ளத்தைப்பற்றிய வாழ்க்கையும் ஒன்று உண்டு என்று நிரூபிக்கிற அறம், அது இரக்கத்துக்குரியதல்ல ஆராதனைக்குரியது.''

'உள்ளத்தைப்பற்றிய வாழ்க்கை' என்று அவன் சொன்னபோது சாம்பசிவத்தின் நினைவு வந்தது. அவரும்கூட இதைத்தானே சொல்லிக் கொண்டு, தன் தங்கையிடம் அதை எதிர்பார்க்கிறார்?

''ஆனால் குமாரவேல், உன்னுடைய கொள்கைகளுக்காக இன்னொரு பெண்ணை அடைத்து வைத்து வருத்தமாட்டாயே நீ'' என்று நான் கேட்டேன்.

''நிச்சயமாய் இல்லை'' என்ற அவன் என்னைக் கூர்ந்து பார்த்து ''உனக்கேன் திடீரென்று இந்த ஆராய்ச்சி?'' என்று கேட்டான்.

சமயம் வரும்போது சொல்கிறேன் என்று எழுந்து வந்துவிட்டேன் நான்.

* * *

சாம்பசிவத்தின் மனைவி மகப்பேற்றுக்காக மருத்துவ மனைசென்றிருந்தாள். இரண்டு நாட்களாக வீட்டு வேலைகள் எல்லாம் சாம்பசிவத்தின் தங்கைதான் செய்கிறாள். தனக்காக இரக்கப்படுகிற எனக்காகவும் சேர்த்து அவள் சில வேலைகளைச் செய்ய நேர்ந்தது — ஏனென்றால் நான் அங்குதான் சாப்பாட்டையும் வைத்துக் கொண்டிருந்தேன். அவள் எனக்காகவும் சேர்த்துச் சிரமப் படுகிறாள் என்பது எனக்கு என்னவோ போல் இருந்தது. ஆனால் அதற்கு மாற்று எதுவும் புலப்படவில்லை. மாற்று இருந்தும் அதில் நான் அக்கறை செலுத்தவில்லையோ என்றும் தெரியவில்லை. இத்தனைநாள் தயங்கித் தயங்கி நடமாடிய அவள், இப்போது தாராளமாக நடமாடுகிறாள். அவளுடைய தரிசனம் என் குழப்பங்கள் எல்லாவற்றையும் நீக்கி— என்னுள் தைரியத்தை வளர்க்கிறது. அதை நான் இழந்துவிட விரும்பவில்லை இப்படியே நாட்கள் சில சென்றன.

ஒருநாள் நானும் சாம்பசிவமும் சாப்பிட்டுக் கொண்டிருந்தவேளை, அவளை நான் தற்செயலாகக் காணநேர்ந்தது — திடுக்கிட்டு விட்டேன் நான். சோகப் பதுமையாய்த்தான் அவளைக்கண்டு பழக்கம் என்றாலும் கண்ணில் நீருடன் அல்ல. எதற்காகவோ கண்ணும் முகமும் சிவக்க அவள் அழுதிருக்கிறாள். எனக்கு ஒன்றுமே ஓடவில்லை — சாம்பசிவத்தின் முகத்தைப் பார்த்தேன்.

''மூன்று வருடங்களுக்கு முன்னால், இதே நாளில்தான் அவள் கணவர் விபத்தில் சிக்கினார் - மறுநாளே இறந்துபோய்விட்டார்'' என்று அவர் கையை உதறிக்கொண்டு எழுந்துவிட்டார். நானும் எழுந்து கொண்டேன்.

சாம்பசிவத்தின் உணர்ச்சியை வெறும் பாசாங்கு என்று சொல்லவரவில்லைநான் — ''அவர் நினைத்து முயன்றிருந்தால் — இன்னொரு புது வாழ்வில் — இந்த நாளின் முக்கியத்துவத்தையே மறந்து சிரித்திருக்கச் செய்திருக்கலாமே அவளை'' என்று மட்டும் எண்ணிக்கொண்டேன்,

அன்று இரவெல்லாம் அவள் படுக்கையில் படுத்திருந்து அழுது கொண்டிருப்பாளோ என்பது போன்ற நினைவுகளால் நான் நிம்மதியில்லாமல் தவித்தேன். விடிகாலையிலும் நான் தூக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்தபோது அவளுடைய மதுரமான குரல் என்னை உருக்கி அலைக்கழிக்க எழுந்தது. கொஞ்சநேரம்தான் அது இசையாக இருந்தது. அப்புறம் அது விம்மல்களாகக் குலைந்து கொண்டிருந்தது. அந்த விம்மல்கள் என் இதயத்தைப் பிளந்தன. என்னையறியாமலே எழுந்து அந்தப் பூஜையறை வாசலுக்குச் சென்றுவிட்டேன் நான்.

அவள் கிறிஸ்தவர்கள் வணங்குவதுபோல முழந்தாளிட்டு அமர்ந்து கைகளைக் கூப்பியிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வாயில் நிலையிலேயே சாந்து நின்றவாறு அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் உணர்ச்சிப் பிழம்பாய் இருந்ததாலும் வாயில் பக்கம் முதுகைக் காட்டியவாறு இருந்ததாலும் என்னைக் கவனிக்க நேரவில்லை.

''தேன் பழச் சோலை பயிலும் சிறு குயிலே'' என்று விம்மல்களுக்கிடையே அவள் பாடத் தொடங்கியபோது நான் சும்மாதான் நின்று கொண்டிருந்தேன். ''ஊன் பழித்தென் உளம் புகுந்து உணர்வதுஆய ஒருத்தன்'' என்ற அடி வருகையில் நான் உணர்ச்சி வசப்பட்டு கதவு நிலையில் கையால் அடித்து விட்டேன். அவள் திடுக்குற்றுத் திரும்பிப் பார்த்தாள்.

அவள் பேசத் தொடங்குமுன்னரே அவசரமாய் நானே பேசத் தொடங்கினேன். ''நீங்கள்......... தயவு செய்து, அழுவதை நிறுத்துங்கள். உங்கள் துன்பம் எழுவானாலும் தீர்த்துவைக்க நான் தயாராய் இருக்கிறேன்''

என் மனதின் பலத்தையோ பலவீனத்தையோ இந்தச் சில வார்த்தைகளில் கொட்டிவிட்டபிறகு நான் அற்பனாகிப் போய்விட்டேனோ என்ற நினைவு என்னைத் துன்புறுத்தலாயிற்று. ஏனெனில் அவள் எதுவும் பேசவில்லை. ஏதோ ஒரு மோகனமான ஸ்வர்க்கத்திலிருந்து பலவந்தமாக இழுத்து வரப்பட்டவளைப்போல நின்றுகொண்டு என்னைப் பார்த்தாள்.

இரண்டு அல்லது மூன்று நீண்ட விநாடிகளுக்குப் பிறகு "அழுகை என்பது இரண்டு மாறுபட்ட உணர்ச்சிகளின் வெளிப்பாடாய் இருக்கையில்......" என்று வாய்திறந்தாள் அவள்.

நான் அவளை முடிக்க விடவில்லை. "பேரின்பம் பெருந் துன்பம் இரண்டுக்கும் உரிய உணர்ச்சி வெளிப்பாடு அழுகையாக இருக்கலாம். ஆனால் ஒருவர் இருக்கிற நிலையில் இருந்து அவரை உலுக்குவது என்ன உணர்ச்சி என்று புரிந்து கொள்ள முடியாதா?'' என்று நான் கேட்டேன்.

அவள் திரும்பி அறைக்குள்ளிருந்த நடராஜர் சிலையைப் பார்த்தாள். இதற்கு நீண்ட பதில் சொல்ல வேண்டும் என்பதுபோல "நான் பிரார்த்தனையை முடித்துக் கொண்டு வந்து உங்களுக்குப் பதில் சொல்கிறேனே'' என்று சொன்னாள்.

நான் அறைக்குத் திரும்பினேன். விரைவில் உடுப்பு மாற்றி வெளியே எங்காவது ஓடிவிடலாம் என்று நினைத்தேன். நான் துடித்துத் தவிக்கிறேன் அவளுக்காக. அவள் சாவதானமாக வந்து என்னுடன் கதைக்கிறாளாம். இதன் கருத்து நான் எவ்வளவு தலைபோகிற பிரச்சினையாக இதைக் கருதுகிறேனோ அந்த அளவுக்கு அவள் நினைக்கவில்லை என்பது அல்லவா?

அவமானப்பட்டுவிட்டதுன்பம் என்னைச் சித்திரவதை செய்தது!

நான் ஏன் பிறர் விஷயத்தில் தலையிட்டு அவமானப்பட வேண்டும் என்று ஒரு கணம் நினைத்தேன். இந்த நினைவு வந்ததும் எனக்கு ஒரு பெரிய உண்மை புரிந்தது. நான் அவளுக்காக இரக்கப்படப் போய் அவள் எனக்காக இரக்கப்படுகிற நிலைக்கு வந்திருக்கிறேன்! "பிறர்'' என்று ஒரு கணத்திலும் குறைந்த நேரத்தில் என்னால் நினைத்துவிட முடிந்ததுபோல பிறரில் ஒருத்தியாக நினைத்து அவளை ஒதுக்கிவிட, யுகமானாலும் என்னால் முடியுமா?

"பெண்ணே — உனக்கு என் மனதில் கிடைத்திருக்கிற உன்னத ஸ்தானத்தைப்பற்றி நீ அறியமாட்டாய். உன்பாட்டால் நீ என்னுள் எழுதிய ஓவியத்தை உன் சொற்களால் அழிப்பதற்காக இன்று எழுந்து நிற்கிறாய். நீ வரைந்திருக்கிற அந்த அழகான ஓவியத்தை என் இதயச் சதையைப் பிறாண்டாமல் உன்னால் அழித்துவிட முடியாது. ஆனாலும் எனக்கு நிச்சயமாய்த் தெரிகிறது. நீ அழிக்கத்தான் புறப்பட்டிருக்கிறாய். நான் உன்னைச் சந்திப்பதா? என்னால் எப்படி முடியும்?''

நான் அவளைச் சந்திக்க விரும்பவில்லை.

கால்போனபடியெல்லாம் சுற்றினேன். தெரிந்தவர்கள் யாரையாவது காணாமலா போயிருப்பேன். யாரையும் பார்த்துச் சிரித்த ஞாபகம் இல்லை — என்ன எண்ணிக் கொண்டார்களோ: குமாரவேலைச் சந்தித்த ஞாபகம் மட்டும் இருக்கிறது. கண்ணும் மனமும் கலங்கிப்போய் அத்தனை மோசமான நிலையில் என்னை அவன் அதற்கு முன் ஒரு நாளும் சந்தித்திருக்கமாட்டான். 'என்ன?' என்று கேட்கக்கூடத் தோன்றாமல் என்னை அவன் அணைத்துக் கொண்டதிலிருந்து அது தெரிந்தது.

''சாம்பசிவத்தின் சகோதரி...'' என்று நான் பேசத்தொடங்கியபோது என் மனதின் துயரம் அத்தனையையும் கொட்டிவிடவேண்டும் என்று தான் நினைத்தேன். ஆனால் என் வாழ்வில் முதன் முதலாக நான் சந்தித்து வந்திருக்கிற தோல்வி என்னை அந்த இரண்டு வார்த்தைகளுக்கு மேல் பேசவிடவில்லை. என் பேசாத பேச்சு நண்பனுக்கு நன்றாக விளங்கியிருக்கவேண்டும். ''தியாகு'' என்று என்னைத் திடுக்கிட்டாற்போல உலுப்பினான். ''உன்னை அவள் பார்த்தாளா? உன்னுடன் அவள் பேசினாளா?" என்று அவசரப்பட்டுக் கேட்டான்.

அந்தக் கேள்வியில் அவள் என்னைப் பார்த்திருக்கமாட்டாள் பேசியிருக்கமாட்டாள் என்ற நம்பிக்கை தொனித்ததை உணர்ந்தேன் ''இது என்னுள் நானாக எழுதிக்கொண்ட உணர்ச்சிக் கோலம்'' என்று நினைத்தேன். இப்படி இத்தனை தீர்க்கமாய் நிச்சயம் செய்ய இங்கு முடிந்தது.

அன்று நான் இல்லத்தில் அவளைப் பார்த்ததில் இருந்து நான் நிலை குலையத் தொடங்கி இன்று காலை அவளுடன் பேசியதிலிருந்து ஒரேயடியாகக் குலைந்துபோய் அவனுக்கு முன்னால் வந்து நிற்கிறேன் என்று அவனிடம் கூறவா......நான் பேசவில்லை.

சாம்பசிவத்தையும் அவர் சகோதரியையும் பற்றி நான் நன்கு அறிவேன். தங்கைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ந்த துன்பத்தில் கலங்கிப்போன பிறகுதான் அவர் அத்தனை ஆத்திகரானார். முன்பெல்லாம் அவர்கூடத்தான் ஒன்றும் இதுபற்றி கவலைப்படுவதில்லை. மறுபடியும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அவளைக் கெஞ்சு கெஞ்சென்று கெஞ்சினார். இப்பவேணடாம்; உன் மனம் நன்றாகத் தேறியபிறகு என்று வேண்டினார். அவள் எப்பவுமே இல்லை என்று கூறிவிட்டாளாம் "அண்ணா நான் துணையிழந்து தவிக்கிறேன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். என்னுள்ளே வாழ்கின்ற துணையைப் பற்றி நீங்கள் அறியமாட்டீர்கள். என்னுடைய சோகத்தில் அவர் நிரந்தரமாக வாழுகிறார் என்றோ அவரைச் சந்திப்பதற்காகத்தான் நான் தினமும் அழ விரும்புகிறேன் என்றோ நீங்கள் புரிந்து கொள்ள மாட்டீர்கள். பரவாயில்லை — ஒருநாள் என்றாலும் உண்மையான அன்பைத் தந்ததற்காக பெற்றுக்கொண்டவள் நன்றி செலுத்துகிறாள் என்றாவது புரிந்து கொள்ளுங்கள் அண்ணா — அது போதும்." என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டாள்—அதற்காக சாம்பசிவம் வருந்திய வருத்தம் எனக்குத் தெரியும். பிறகுதான் அவர் மிஷனுடன் தொடர்பு வைத்தார் — கொஞ்சம் கொஞ்சமாய் ஆறியும் விட்டார்."

அவர் சொன்னதெல்லாம் எனக்குப் புதிதாய் இருந்தது. மனிதர்கள்தான் எத்தனை புதிராய் இருக்கிறார்கள். நீண்ட நாட்களாக என் மனதில் இடைவிடாமல் நிறைந்து கொண்டிருந்த இந்த இரண்டு பேரைப் பற்றியுமே என் கணிப்புப் பிழையாகப் போய்விட்டது திரு. சாம்பசிவம் ஆத்மீகத்துக்குப் பலம் சேர்ப்பதற்காகத் தங்கையை வருத்தவில்லை. தங்கை வருந்துவதால் ஆத்மீகராய் மாறிப் போனார்! அவளும் கூட, துன்பத்தைத் தாங்க முடியாமல் அழவில்லை அழவேண்டும் என்பதற்காக துன்பத்தை விரும்பி ஏற்கிறாள். திருவாசகத்தில் தோய்ந்தவள் அல்லவா. 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்ற வழி போலும்!

குமாரவேல் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறான். எனக்குத் தெரிவிக்க வேண்டியதைத் தெரிவித்தாயிற்று மிச்சம் எல்லாம் எனக்கு ஆறுதல் என்ற பெயரில் உபதேசம்தான்!

''கும்பலுக்குப் பிரதிநிதித்துவம் வகிப்பது பெரிதில்லையடா. கும்பலுக்கிடையே தனித்துவம் வகிப்பதுதான் பெரிது. தனி மனங்களில் நிலைக்கிற உயர்ந்த நோக்கங்களும் உறுதிப்பாடுகளும் தான் மனிதனை மற்றச் சராசரி மனிதர்களிடமிருந்து உயர்த்தித் தெய்வமாக்குகிறது. விவேகானந்தரையோ,காந்தியடிகளையோ எண்ணிப்பார். அவர்கள் செத்துப்போன பிறகும் வாழ்ந்து கொண்டிருப்பது அவர்களுடைய தனித்துவம் அல்லவா? அவர்கள் எல்லாம் பெரிய பெரிய மின் விளக்குகளைப் போலப் பிரகாசிக்கிறார்கள் என்றால் ஆங்காங்கே இருண்ட மூலைகளில் மண் அகல்களாக சாம்பசிவத்தின் சகோதரியைப் போன்றவர்களும் தேவைதானே. தனி மனங்களில் இப்படி அபூர்வமாக நிலைக்கிற உறுதிகளும் கொள்கைகளும் இல்லை என்றால் இந்த நூற்றாண்டில் மனிதனுக்குள்ளே மனம் இருக்கிறதா என்று இருட்டில் துழாவ வேண்டி நேரிட்டுவிடும். நீ அவளுக்காக இரக்கப் பட்டால், நான் உனக்காக இரக்கப்படுகிறேன்.

* * *

நீண்ட நாட்களுக்குப் பிறகு அம்மாவின் நான்கு கடிதங்களுக்கும் சேர்த்துப் பதில் எழுதினேன்.

''...... எந்தப் பெண்ணாலுமே என் மனதைக் கவர முடியவில்லையம்மா, என் மனதைக் கவர்ந்து நிற்கிற ஒரே ஒரு விஷயம் மிஷன்தான். உங்கள் மகனும் விவேகானந்தரைப்போல வெளிநாடுகளில் எல்லாம் இந்து தர்மத்தையும் ஆத்மீகத்தையும் பரப்ப வேண்டுமென ஆசைப்படுகிறான். அவர்கள் எல்லாம் பெரிய பெரிய மின் விளக்குகளாகப் பிரகாசிக்கிறார்கள் என்றால் உங்கள் மகன் ஒரு மண் அகலாகவாவது பிரகாசிக்க விரும்புகிறான். உங்கள் ஆசிகளை எனக்கு வழங்கவேண்டும் அம்மா ... ...'

நாளைக்காலை என்னுடைய முடிவை, அவளிடமும் தெரிவித்து இந்த வீட்டைவிட்டுப் போய் விடப் போகிறேன். இந்தவீட்டில் இன்னும் ஒரே ஒரு காலை. நாளைக் காலையிலும் அந்தக் கானம் என்னைத் துயிலெழுப்புமா? எழுப்பினாலும் என்னை உருக்கி அலைக்கழிக்காது. நான் சலனங்களைக் கடந்துவிட்டேன்.

என் இதயத்தின் சுவர்கள் ஓவியத்துடன் கிழிக்கப்பட்டு இரத்தம் கசிகிறதுதான். இரத்தம் எனக்குப் போர்க்களங்களை நினைவூட்டவில்லை. இயேசுநாதரை நினைவூட்டுகிறது. யேசுநாதர் இரத்தம் சிந்தினார் — பாவிகளுக்காக — அது தியாகம், நான் செய்யப்போவது தியாகம் அல்ல; என்னுள் ஏற்பட்ட மனமுறிவைச் சீராக்குகின்ற ஒரு வகை "அட்ஜஸ்ட்மென்ட் மெக்கானிசம்" தான் என்பது தெரிகிறது. என்றாலும் என்ன, என்னுடைய முடிவு, ஒரு தனி மனத்தின் உயர்வு நோக்கத்திலும் உறுதிப் பாட்டிலும்தானே நிலைக்கப் போகிறது.

★

## இப்படியும் ஒரு இலக்கிய நெஞ்சம்!

இந்த இதழ் தலையங்கத்தில் ஈழத்து இலக்கிய முயற்சிகளையிட்டு அக்கறை கொள்ளாத படித்த மனிதர்களைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளோம். வெதும்பிய எமது உள்ளத்துக்கு ஆறுதல் தரும் வகையில் மலையகத்திலிருந்து (மட்டக்களப்பிலிருந்தோ, யாழ்ப்பாணத்திலிருந்தோ அல்ல) ஒரு ஆசிரியை தன் மாதச்சம்பளத்தில் ஒரு சிறு பகுதியை மாதா மாதம் "மலர்" இலக்கிய ஏட்டின் வளர்ச்சிக்கென அனுப்பிவருகிறார். நெஞ்சம் நெகிழ, கண்கள் பனிக்க, பெயர் குறிப்பிட விரும்பாத அந்தச் சோதரியின் இலக்கிய நெஞ்சத்தை மானசீகமாக வாழ்த்துகிறோம்.

— ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புகைவண்டி, நிலையத்தை அடைவதற்கு முன்பே கதவோரங்களில் கூட்டமாகவந்து நின்றுகொண்டனர் பிரயாணிகள். பெட்டிகள், பிரயாணப் பைகள், மற்றும் மூட்டை முடிச்சுகளை தூக்குவதற்கு வாகாக ஆயத்தப்படுத்தி வைத்துக்கொண்டு வெளியே பாயத் தயாராக இருந்தார்கள்.

புகைவண்டி வந்து நின்றதுதான் தாமதம், அத்தனை பிரயாணிகளும் திமுதிமுவென்று வெளியே பாய்ந்து, ஓட்டமும் நடையுமாக மேடையைக் கடந்தனர். பிரயாணிகள் வெளியேறும் வாசலில் ஒரே தலைமயம். நெருக்கியடித்துக்கொண்டு வந்த பிரயாணிகளை ஒவ்வொருவராக வெளியேற்றுவதில் டிக்கட் கலெக்டர் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருந்தார்.

இத்தனை அமளிதுமளிகளையும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான் சோமலிங்கம். அவன் இன்னும் புகைவண்டியைவிட்டு இறங்கவே இல்லை.

'இப்படியும் ஒரு பிரகிருதியா?' என்ற பாவத்தில் அவனை வியப்புடன் பார்த்துக்கொண்டு சென்றனர், ஸ்டேஷனைச் சேர்ந்த தொழிலாளர்கள் இருவர் மட்டக்களப்பு ஸ்டேசனில், காலை வண்டியில் இப்படி ஒரு புதுமையை இதற்கு முதல் அவர்கள் கண்டதேயில்லை காரணம் அந்த லைனில் மட்டக்களப்புத்தான் கடைசி ஸ்டேஷன். ஸ்டேஷனுக்கு வெளியே நிற்கும் பஸ்களில் இடம்பிடிக்க வேண்டுமானால், முண்டியடித்துக்கொண்டு முன்னே ஓடினால்தான் முடியும். பிந்தினால், வாடகைக் கார் பிடிக்கவேண்டும். அல்லது நடையில்தான் செல்லவேண்டும்.

சோமலிங்கத்துக்கு இந்த விபரங்கள் தெரியாமலில்லை. இருந்தும் அவன் வண்டியில் இவ்வளவு அமைதியாக உட்காந்திருப்பதற்குக் காரணம் என்ன?

பத்து நிமிடங்களுக்குப்பின், ஸ்டேஷனில் அமளிதுமளி ஓய்ந்து, பிரயாணிகள் வெளியேறும் வாசல் காலியாகியது. இப்போதுதான் சோமலிங்கம் வண்டியை விட்டு இறங்கினான். எவ்வித பரபரப்புமில்லாமல், மிகவும் நிதானமாகவே இறங்கி வண்டியின் கதவைச் சாத்திவிட்டு, இன்னும், நிதானமாகவே வாசலை நோக்கி நடந்தான். அவன் கையில், ஏனைய பிரயாணிகளைப் போல் நாலைந்து மூட்டை முடிச்சுகள் இருக்கவில்லை. ஒரே ஒரு பை — அழகான, நாகரீகமான தோல் பை — மட்டுமே இருந்தது. பிரயாணிகளுக்கே அழகைத் தரும் பை அது.

ஏதோ கனவுலகத்தில் சஞ்சரிப்பவன் போல் ஸ்டேஷன் வாசலை நோக்கி நடந்த சோமலிங்கம் டிக்கட் கலெக்டரைத் தாண்டி, ஸ்டேஷனுக்கு வெளியே வந்ததும் மேலே செல்ல இஷ்டமில்லாதவன் போல் தயங்கி நின்றான்.

வீட்டிலிருந்து புறப்பட்டபோது ஏற்பட்ட அதே தயக்கம் — புறப்படலாம் என்ற யோசனை வந்தபோதும், பிரயாணத்தினத்தன்றும், பிரயாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் வந்தபோதும், ஸ்டேஷனுக்கு வருவதற்காக டாக்சியில் ஏறியபோதும், ரெயிலில் ஏறி இருந்த போதும் ஏற்பட்ட அதே தயக்கம் — இப்போது அவனைப் பின் தொடர்ந்தது.

''அங்கே போகலாமா கூடாதா? கூடப்பிறந்த தங்கைதான். இருந்தாலும், அவள் செய்துவிட்டுப் போன காரியத்துக்கு அவள் முகத்திலே கூட விழிக்க முடியாதே. அப்படியிருக்க அவள் வீடு தேடிச் சென்று அவளைச் சந்திப்பது......சேச்சே... இந்த மனம் ஏன் இப்படி அலைக்கழிக்கிறது.? இவ்வளவு தூரம் வந்துவிட்டு இனிமேல் திரும்பிப் போவதென்றால்.. ...? போய்த்தான் பார்க்கலாமே ஒரு தடவை. ஒரே ஒரு தடவை முதலும் கடைசியுமாக இந்தத் தடவை மட்டும்......''

வாடகைக்கார்கள் நின்ற பக்கம் செல்வதும் பின் திரும்புவதுமாக சில விநாடிகளைப் போக்கிய பின், இறுதியாக ஒரு வாடகைக்காரில் ஏறி உட்கார்ந்தான், சோமலிங்கம். "முதலியார் தெரு" என்று யந்திரம் போல் கூறியது அவன் வாய்.

தங்கையின் வீட்டை நெருங்க நெருங்க, நிலை கொள்ளாமல் தவித்தது அவன் மனம், 'இந்தக்கார் ஓடாமல் நின்றுவிடாதா? அல்லது இப்படியே பின் பக்கமாக ஓடக்கூடாதா?' என்றெல்லாம் அவன் மனம் எண்ணியது.

என்னவெல்லாமோ அவன் மனம் எண்ணிக் கொண்டிருந்தாலும், கார்மட்டும் ஐந்து நிமிட நேரத்தில் அவன் தங்கையின் வீட்டை அடைந்தே விட்டது.

காரை விட்டிறங்கி, காரை அனுப்பிவிட்ட பின்னும் அங்கேயே நின்றான் சோமலிங்கம். நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. போவோர் வருவோரெல்லாம் அவனை உற்று உற்றுப் பார்க்கத் தொடங்கினர். இனியும் அப்படி அங்கே நின்று கொண்டிருந்தால், திருடன் பட்டம் கிடைத்தாலும் கிடைக்கும்போலிருந்தது. எனவே உள்ளே செல்ல ஆரம்பித்தான்.

இரும்புபோல் கனத்த கால்களை ஒவ்வொன்றாகத் தூக்கி வைத்து அவன் நடந்த போது......

''என்னடி, என்னடி மாய்மாலம் பண்ணுகிறு? உன் அண்ணன் பெரிய தர்மப் பிரபு. அவனிடம் போய் நான் யாசகம் கேட்க வேண்டுமென்கிறாயா? அவ்வளவுக்கு ரோசம் கெட்டவனில்லடி இந்த அருளம்பலம். பட்டினியாகக்கிடந்து செத்தாலும் அந்தப் பக்கமே காலடி எடுத்து வைக்கமாட்டேன் நான்''

''இந்த வாய்மட்டும்தான் உங்களுக்கிருக்கிறது சும்மா வாய் வீரம் பேசுவதில் என்ன பிரயோசனம். காரியம் ஆகவேண்டுமென்றால் கழுதையின் காலைக்கூடப் பிடிக்க வேண்டியதுதான்!''

'' ஓகோ பெரிய ஔவைப்பாட்டி. எனக்குப் புத்தி சொல்லித் தருகிறாயா?''

"நான் ஒன்றும் உங்களுக்குப் புத்தி சொல்லித் தரவில்லை. சும்மா கொதி கொதியென்று கொதிக்காமல் கொஞ்சம் நிதானமாக நிலைமையை யோசித்துப் பாருங்கள் என்றுதான் சொல்கிறேன். பிரசவம் இன்றைக்கோ, நாளைக்கோ என்றிருக்கிறது. இந்த நிலையில் கையில் ஒரு தம்பிடிகூட இல்லாமல் இருக்கலாமா? நாளைக்கு ஏதாவது அவசரத்துக்குப் பணம் தேவைப்பட்டால் யாரிடம் போய் கையை நீட்டுவது? யார் நமக்குத் திடீரென்று நூறு, இருநூறு என்று கடன் தருவார்கள்? ''தலைப் பிரசவம்'' இது. எதற்கும் நாம் ஆயத்தமாக இருக்கவேண்டுமல்லவா?''

''அதுதான் நிலைமையை விளக்கி நீ வீட்டுக்குக் கடிதம் அனுப்பி விட்டாயே. ஏதாவது பலன் கிடைத்ததா?"

''நூறு கடிதம் எழுதினாலும் நேரில் போய் சந்திப்பதுபோலாகுமா? அண்ணாவும் அம்மாவும் நம்மேல் கோபமாக இருக்கிறார்கள் என்பது தெரியும்தானே. அதனால் கடிதத்துக்கே பதில் போடாமல் மௌனம் சாதிக்கிறார்கள். ஆனால் நேரில் போனால் அப்படி இருக்கமுடியுமா?"

''அவ்வளவு நம்பிக்கை உனக்கிருந்தால் நீயே அவர்களிடம் நேரில் போகலாமே?"

''வேறு பெண்களாயிருந்தால் அப்படித்தான் செய்திருப்பார்கள். ஆனால் என் மனம் உங்களுக்குத் தெரியாதா? சாவதானாலும் உங்கள் காலடியில் கிடப்பேனே தவிர, உங்களை உதாசீனம் செய்த அந்த வீட்டில் காலடி எடுத்துவைக்கவே மாட்டேன்.''

''ஓகோ, நீ காலடி எடுத்துவைக்க மாட்டாய். நான்தான் காலடி எடுத்துவைக்க வேண்டுமாக்கும். என்ன? எப்படியும் என்னை அவமானப்படுத்தித் தீர வேண்டுமென்பதே உன் எண்ணம். அதுதானே?''

''ஐயோ இப்படி எல்லாவற்றுக்குமே தப்பர்த்தம் கொண்டால் எப்படி......?''

''பின்னே என்னடி? வேறு என்ன அர்த்தம்?''

''உஹூம்! உங்களோடு பேச என்னால் முடியாது. சொத்து, சுகம், உற்றார், உறவினர் எல்லாம் உதறிவிட்டு உங்கள் அன்பு ஒன்றையே பெரிதாக மதித்து உங்கள் பின்னால் ஓடிவந்த எனக்கு இந்த நெருக்கடியான வேளையில் நீங்கள் காட்டும் அன்பு இதுதானா? இந்தக் கொடூரமான வார்த்தைகள்தானா? இப்படி ஆகுமென்று தெரிந்திருந்தால்!"

''தெரிந்திருந்தால்?''

''இப்படிப் பட்டினி கிடந்து சாவதை விட ஒரு துளி விஷத்தைக் குடித்து இறந்திருப்பேன்.''

''ஏன் இப்போதுகூட அப்படிச் செய்யலாமே. நான் அன்னக்காவடி என்பது தெரிந்திருந்தும் என்னோடு வரத் துணிந்த போது இதை நீ யோசித்திருக்க வேண்டும். ஏன்? 'ஒரு சாதாரண கிளார்க்கால் உன்னை கண்கலங்காமல் வைத்துக் காப்பாற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது' என்று என் முகத்துக்கு நேரேயே உன் அண்ணன் சொன்னனே. அப்போது நீ என்ன சொன்னய் என்பது ஞாபகம் இல்லையா? அவருடன் குடிசையிலே கஞ்சியோ கூழோ குடித்து வாழ்க்கை நடத்த வேண்டி நேர்ந்தாலும் அதுவே எனக்குச் சொர்க்கம், என்று அப்போது கூறினயே இப்போது அதெல்லாம் மறந்துபோய் விட்டதா?''

''மறக்கவில்லை. ஆனல் பணத்தை நாம் எவ்வளவு அற்பமாக மதித்தாலும், நடைமுறை வாழ்க்கையில் அதற்கு அவசியம் ஏற்படத்தானே செய்கிறது?''

''அந்த அவசியத்தை உன் பெற்றேர் உணரவில்லையே. ஒரே தங்கைக்கு, கூடப் பிறந்த ஒரே தங்கைக்கு, ஒரு தம்பிடியாவது கொடுத்தனுப்புவோம் என்று உன் அண்ணனவது எண்ணினனு? அவ்வளவு இரக்கமற்ற கல் நெஞ்சர்களிடம் என்னைத் தூது போகச் சொல்கிருயே?''

''அவர்கள் ஒன்றும் அப்படிப்பட்டவர்களல்ல. ஆயிரக்கணக்கில் சீதனம் கொடுத்துத்தான் எனக்குத் திருமணம் செய்யத் தீர்மானித்திருந்தார்கள். நான்தான் உங்கள் பேச்சைக்கேட்டு அதையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு வந்து விட்டேனே?"

''திரும்பவும் அதே பல்லவியா? உன் வீட்டவர்களுடைய பணப் பெருமையை அடிக்கடி இப்படி நீ சொல்லிக்காட்டுவதென்ருல், இந்த வீட்டில் உனக்கு இடமில்லை. இந்த நிமிஷமே நீ உன் பிறந்த வீட்டுக்குப் போய் விடலாம்:''

''சீ!: நீங்களும் ஒரு மனுஷனு? இந்த நிலையில் என்னை வீட்டை விட்டுப் போகச் சொல்கிறீர்களே இப்படி ஒரு கையாலாகாதவரைக் கல்யாணம் செய்ததற்கு எனக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும்:''

''யாரடி கையாலாகாதவன், யார் கையாலாகாதவன்? இப்படி இன்னுமொருதடவை சொல்வாயா? சொல்லு! சொல்லு!! சொல்லு!!!

''ஐயோ வேண்டாமே! வேண்டாமே இனிமேல்! நான் அப்படி சொல்லவே மாட்டேன். ஐயோ நிறுத்துங்கள் என்னல் தாங்கமுடியவில்லை. நிறுத்துங்கள்! ஐயோ நிறுத்துங்கள்!''

அதற்கு மேல் சோமலிங்கத்தால் பொறுக்க முடியவில்லை.

நிறைமாத கர்ப்பிணியை இப்படி மிருகத்தனமாகத் தாக்குபவனை அப்படியே கீறிக் கிழித்துவிடத் துடித்தது அவன் உள்ளம். ஒரே பாய்ச்சலில் வீட்டின் ஜன்னலைத் தாவிப் பிடித்து உள்ளே எட்டிப்பார்த்தான். அங்கே அவன் கண்ட காட்சி......?

அருளம்பலம் தன் தலையையே சுவரில் மோதிக் கொண்டிருந்தான். அவனைத் தடுத்துக் கொண்டிருந்தாள் அவன் தங்கை தனலெட்சுமி!

உள்ளே போகலாமா வேண்டாமா என்று சோமலிங்கம் யோசித்து முடிவு செய்வதற்குள், தனலட்சுமி அருளம்பலத்தின் கால்களில் விழுந்தாள். அவனும் தலையை மோதிக் கொள்வதை நிறுத்தினன்.

சோமலிங்கத்தின் நிலை மிகவும் தர்மசங்கடமாகிவிட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் உள்ளே செல்வது மிகவும் அநாகரிகமான செயல்.

சற்றுமுன் நடந்த சண்டையை அறியாதவன் போல் நடிப்பதும் அவனல் முடியாத காரியம். சிலவேளை வார்த்தைகள் தடித்து அருளம்பலத்துடன் அவன் மோதவேண்டி வந்தாலும் வரும்.

வந்த சுவடு தெரியாமல் திரும்பினன் சோமலிங்கம்: அவன்உள்ளம் எரிமலையாய்க் கொதித்தது.

மட்டுநகரில் சோமலிங்கத்துக்குத் தெரிந்த எத்தனையோ நண்பர்கள் இருந்தார்கள். ஆனலும் அன்று அவன் நண்பர்கள் யாருடைய வீட்டுக்கும் போக விரும்பவில்லை. வாடி வீட்டை நோக்கி அவன் கால்கள் நடந்தன.

தனலெட்சுமி சிறுகுழந்தையாக இருந்தபோது அவர்கள் எல்லோரும் குடும்பத்துடன் மட்டு நகருக்கு வந்திருந்தார்கள். ஒருநாள் மாலை நேரம் இதே பாதையால்தான் அவர்கள் உலாத்தலுக்குச் சென்ருர்கள். அப்போது மழைக்காலம். தொடர்ந்து மூன்று நான்கு நாட்கள் மழை பெய்து அன்று ஓய்ந்திருந்தது. அதனல் சுற்றுப்புறமெங்கும் பளிச்சென்ற ஒரு புதுமை. குளுகுளுவென்ற ஒரு சூழ் நிலையில் புசுபுசுவென்ற மெல்லியகாற்று. பெரிய நிழல் வாகை மரமும் சவுக்குமரங்களும் வரிசையாக வளர்ந்து நின்ற அப்பாதையில் இருமருங்கிலும் திறந்த வெளியில் நீர் நிறைந்து. கடலின் நடுவே செல்லும் பாதைபோல் காட்சியளித்தது'

வயது வந்தவர்களையே மெய்மறக்கச் செய்யும் இக்காட்சி, சிறு குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்ததில் ஆச்சரியம் என்ன?

இயற்கையிலேயே துருதுருப்பான தனலெட்சுமி ஆங்காங்கே நின்று நீரில் கல்லை எடுத்து எறிவதும், இலையைக் பொறுக்கிப் போடுவதுமாக விளையாடிக் கொண்டிருந்தாள். தந்தை எவ்வளவு சொல்லியும் கேட்காமல் அவள் அப்படிச் செய்யவே கோபத்தில் அவளை அதட்டிக் கையைப் பிடித்து இழுத்துவந்தார் தந்தை. அதைப் பொறுக்கமாட்டாமல் ஓவென்று அழத் தொடங்கிவிட்டாள் குழந்தை. தாயார், தந்தை, கூட வந்தஉறவினர் யார் தேற்றியும் அவள் அழுகை நிற்கவில்லை. சோமலிங்கம் அவளை அணைத்துக் கொண்டபின்பே அவள் அழுகை நின்றது.

அன்று மட்டுமல்ல என்றும் அவள் அழுகையை நிறுத்துபவன் சோமலிங்கம்தான்.

தனலட்சுமி வளர்ந்து பெரியவளாகி, கல்லூரி சென்று, கடைசியில் அருளம்பலத்தைக் கைப்பிடிக்கும்வரை வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலும் சோமலிங்கமே அவனுக்கு உற்றதுணையாக உயிருக்குயிரான அன்பு ஊற்ருக இருந்து வந்திருக்கிருன்.

ஒரே தங்கை என்ற காரணத்தாலோ என்னவோ சோமலிங்கம் அவள்மேல் உயிரையே வைத்திருந்தான். பதினெட்டு வயதுக்குமரியான பின்னும் அவள் ஒரு சிணுக்கம் போட்டுவிட்டால் அவன் நிலை குலைந்து விடுவான். அவள் முகம் வாடினல் அவன் துடித்துப் போய் விடுவான். அவள் கண் கலங்கினுல் அவன் அழுதே விடுவான்.

ஆனல் இன்று......?

தனலட்சுமி இரத்தக் கண்ணீர் வடிக்கிருள். ஆனலும் சோமலிங்கம் அவளைத் தேற்ற முடியவில்லை.

சோமலிங்கத்தின் கண்கள் குளமாகிக் கட்டை உடைக்கத் தயாராக நின்றன. கைக்குட்டையினல் முகத்தைத் துடைத்துக் கொண்டு நடந்தான் அவன்.

பெண்களுக்கு ஏன் இப்படி ஒரு விசித்திர மனத்தை இறைவன் படைத்தான்.

சிறு வயதுமுதல் அன்பைக் கொட்டி உயிருக்குயிராகப் பேணி வளர்த்தாலும், பருவமடைந்ததும் தாய், தந்தை, அண்ணன், தம்பி, அத்தனை பேருடைய பாசத்தையும் வெறுத்து வாழ்க்கை வசதிகளை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு முன்பின் தெரியாத ஒரு அந்நியனின் அன்பே பெரிதென்று அவன் பின்னல் போய்விடுகிருர்களே! இது என்ன நீதி? இப்படி ஒரு இயற்கை நியதியா? இதை இயற்கை நியதி என்பதைவிட இயற்கை அநீதி என்றுதான் கூறவேண்டும்.

வாடிவீட்டை அடைந்த சோமலிங்கம் லெதர் கேசை மேசையில் போட்டுவிட்டு, தொப்பென்று ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான்.

தனலட்சுமிக்கு வாழ்க்கையிலே எவ்வித குறையும் இருக்கவில்லை. திருகோணமலையிலேயே ஓரளவு வளமான வாழ்க்கையுடையது அவர்கள் குடும்பம். செல்வச் செழிப்பிலே வளர்ந்த தனலட்சுமி பருவமடைந்ததும், அவள் திருமணத்தைச் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று தந்தை ஒருபுறம், அண்ணன் ஒருபுறம் முனைந்து நின்ருர்கள். குறைந்த பட்சம் ஒரு டாக்டரையாவது அவளுக்குக் கணவனுக்க வேண்டும் என்பது அவர்கள் எண்ணம். அந்த முயற்சியில் அவர்கள் தீவிரமாக இறங்கியிருந்த போது, ஒரு கிளாக்கரைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்தாள் தனலட்சுமி.

திருகோணமலையில் புயல் அடித்தபோது, புயல் நிவாரணவேலையில் கல்லூரி மாணவிகளும், சில நாட்கள் ஈடுபட்டிருந்தனர். அப்போதுதான் அவளுக்கு அருளம்பலத்துடன் பழக்கம் ஏற்பட்டதாம். மற்றவர்களைப் போல் தன்னை விளம்பரப் படுத்திக் கொள்வதற்காக, குறுக்கும் நெடுக்கும் டைத் திரியாமல் உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்குத் தொண்டு செய்தது அவன்தானும். மற்றவர்களெல்லாம் மாணவிகளைப் பார்த்துப் பார்த்துப் பல்லை இளித்துக் கொண்டு நிற்க இவன் மட்டும் மாணவிகளை நிமிர்ந்துகூடப் பார்க்காமல் தன் வேலையில் ஈடுபட்டிருந்தானும். தன்னுடைய ஏழைத் தாயாரும், சகோதரர்களும் வீட்டிலே வறுமையில் வாட தன்னுடைய ஒரு மாதச் சம்பளத்தையும் புயல் நிவாரண நிதிக்கு அப்படியே கொடுத்து விட்டானும்.

மக்குப் பெண். அப்படிப்பட்டவன் நமது குடும்பத்துடன் ஒட்டுவான என்பதை எண்ணிப் பார்க்கவில்லை. அவனிடம் மனதைப் பறிகொடுத்து விட்டு வந்து நிற்கிருள். கதைகளையும் நாவல்களையும் படிப்பதனல்வரும் வினை இது. ஏழைகள் தியாகிகள் என்றும், சேவை செய்பவர்கள் லட்சியவாதிகள் என்றும் கதைகளில் எழுதிவிடுகின்றனர். இப்படியான கதைகளைப் படிக்கிறவர்களுக்கும் ஒரு போலிலட்சிய வெறி வந்துவிடுகிறது. விவரம் தெரியாத தனலட்சுமிக்கு இது தெரியவில்லை அவளுக்கு இதைத் தெரியவைக்கவும் முடியவில்லை.

"அவனைத் திருமணம் செய்து கொண்டால் வாழ்வில் எவ்வித சுகத்தையும் காணமுடியாது. உன்னைக் கண்கலங்காமல் பார்த்துக் கொள்ளக் கூடிய தகுதி அவனுக்கு இல்லை" என்று கரடியாகக் கத்தினேன் அன்று. என் வார்த்தைகள் இம்மியும் அவள் கருத்தில் தைக்கவில்லை. இன்று நான் சொன்னது அப்படியே நடந்துவிட்டது. என் வார்த்தைகளை அலட்சியப்படுத்தியதற்கு இப்போது அனுபவிக்கிருள் அனுபவிக்கட்டும் நன்ருக அனுபவிக்கட்டும்.''

''மணந்தால் அவரைத்தான் மணப்பேன். இல்லாவிட்டால் உயிரை விடுவேன்'' என்று அப்பாவிடமே அவள் கூறியபோது எல்லோரும் அதிர்ச்சியடைந்து விட்டார்கள். ஆத்திரம் தலைக்கேறிவிட்ட அப்பா, ''அப்படியானல் இந்த வீட்டில் உனக்கு இடமில்லை. அவனுடனேயே போய் இரு.'' என்று கூறியதை அப்படியே செயலில் காட்டிவிட்டாளே.!!

கோணேஸ்வரர் ஆலயத்தில் அனுதைகள் போல் தாலி கட்டிக்கொண்டதும், பின்பு தனிக் குடித்தனம் வைத்து மட்டக்களப்புக்கு மாறுதல் எடுத்துக்கொண்டு வந்ததும், திருகோணமலையில் தலைக்காட்டமுடியாமல் குடும்பத்தார் அனைவரும் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்ததும் இலகுவில் மறக்கக்கூடியவைகளா?

கலியாணம் முடிந்த ஒரு வருடத்துக்குள் காதல் கசந்துவிட்டது. கண்ணீரைச் சிந்துகிருள். கௌரவம், வைராக்கியம் எல்லாம் போய் இப்போ பணம் கேட்டு கடிதம் அனுப்புகிருள்.

இவ்வளவு நாளும் தாய்தந்தையரைப்பற்றிய கரிசனை ஏற்படவில்லை. கஷ்டம் வந்தவுடன்தான் கண் திறக்கிறது. கடிதமும் வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா ஒரு பைத்தியம். கடிதத்தைக் கண்டதும் கண் கலங்கிவிட்டாள். கத்தை கத்தையாகப் பணத்தையும் கொடுத்து அப்பாவுக்குத் தெரியாமல் என்னைப்போய்ப் பார்த்துவரும்படி அனுப்பி விட்டாள். அம்மாவுக்காக இல்லாவிட்டால் இந்தப்பக்கம் திரும்பியும் பார்ப்பேனா. அம்மாவுக்காகத்தான். ஆமாம் எனக்காக இல்லை. இல்லவே இல்லை.

சோமலிங்கம் முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு குலுங்கினான். 'ரெஸ்ட் ஹவுஸ் போய்' வந்து அறை தயாராகிவிட்டதாகக் கூறியபோது தான் அவன் குலுங்கல் நின்றது.

குளித்துவிட்டுச் சாப்பிட்டு முடித்ததும், பிரயாண அலுப்பிலும், மனஉளைச்சலிலும், தூக்கம் கண்ணைச் சுற்றிக் கொண்டு வந்தது. அப்படியே தூங்கிவிட்டான் சோமலிங்கம்.

தூக்கம் கலைந்து எழுந்து பார்த்தபோது மணி ஒன்று ஆகியிருந்தது. மத்தியானச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு 'அப்பாடா' என்று வாடி வீட்டின் பின்புற ஹாலில் வந்து அமர்ந்தான் சோமலிங்கம். அப்போது அவன் உடலும், மனமும் இலேசாயிருந்தது. அருகில் உள்ள ஏரியில் தவழ்ந்து எந்நேரமும் சிலுசிலுவென்று வீசிக் கொண்டிருக்கும் இளங்காற்று உடலுக்கும் மனதுக்கும் மிகவும் இதமாக இருந்தது. அந்தச் சூழ்நிலையில் அவன் மனக்கொதிப்பு அடங்கி நிதானமாகச் சிந்தனை செய்யக்கூடியதாக இருந்தது.

சிறு வயதில் தன் தோளிலும் மார்பிலும் தவழ்ந்து விளையாடிய தனலட்சுமி இன்று ஏழ்மையிலும் வறுமையிலும் உழல்கிறாள். இந்த நிலையில் அவளைத் தனியாக விட்டுச் செல்வது, இப்போது மட்டுமல்ல இனி என்றுமே மனத்தை ரம்பமாக அறுத்துக் கொண்டுதான் இருக்கப் போகிறது. அந்தச் சித்திரவதையிலிருந்து விடு படுவதற்காகவாவது அவளைப் போய்ப் பார்க்கத்தான் வேண்டும்.

தவறு என்னவோ நடந்துவிட்டது. அதற்காக அவள் இவ்வளவு காலமும் அனுபவித்ததே போதுமான தண்டனை.

பார்க்கப் போனால் அதைத் தவறு என்றுகூடச் சொல்லமுடியாது. எவ்வளவுதான் பணத்தைக் கொட்டினாலும், ஒரு பெண்ணுக்கு, மனதுக்கேற்ற கணவனுடன் வாழ்க்கை நடத்துவதற்கு ஈடான இன்பம் கிடைக்க முடியுமா? மனத்தில் ஒருவரை வரித்துவிட்ட பின் ஒரு டாக்டரோ, அல்லது எஞ்சினியரோ, அல்லது தொழிலதிபரோ எப்படி அவள் மனத்தை நிறைக்க முடியும்? வற்புறுத்தலுக்குப் பயந்து அப்படி அவள் வாழ்க்கைப்பட்டாலும், அது ஒரு போலி வாழ்க்கையாக இருக்குமேயன்றி, உளம் நிறைந்த உண்மை வாழ்க்கையாக இருக்க முடியாது. அந்தஸ்து என்ற கோணத்திலிருந்து பார்க்கும்போது அவள் செய்கை தவறாகத் தெரிகிறது. அதை நீக்கிவிட்டுப்பார்த்தால் நமது செய்கையே தவறாகத் தெரியும். போலி அந்தஸ்து என்ற போர்வையை நீக்கிவிட்டுச் சிந்தனை செய்திருந்தால் அவள் மனதுக்குப் பிடித்த கணவனையே அவளுக்குத் திருமணம் செய்வித்து, அவளை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தியிருக்கலாம். இப்போது அவள் துன்ப வெள்ளத்தில் நீந்துகிறாள், என்றால் நாமே அதற்குக் காரணமாகவும் இருக்கலாம் ....."

சோமலிங்கம் சட்டென்று கடிகாரத்தைப் பார்த்தான் மணி இரண்டரை.

இந்த நேரத்தில் அருளம்பலம் வீட்டிலிருக்க மாட்டான். அவன் இல்லாத நேரத்தில்தான் தங்கையுடன் மனம் விட்டுப் பேசமுடியும். தங்கையின் உள்ளக் குமுறல்களையும் அறியமுடியும். ஏதும் உதவி செய்வதென்றாலும் அவனுக்குத் தெரியாமலே செய்துவிடலாம்.

உடனே சட்டையை மாட்டிக் கொண்டு புறப்பட்டான் சோமலிங்கம்.

அன்று இரண்டாவது தடவையாக சோமலிங்கம் தங்கையின் வீட்டில் காலடி எடுத்து வைத்தபோது மீண்டும் அதே தயக்கம் அவனை அலைக்கழித்தது.

தயங்கித் தயங்கி அவன் உள்ளே நடந்த போது வீட்டுக்குள்ளிருந்து மெதுவான பேச்சுக் குரல் கேட்டது.

''இதுக்குத்தானா இவ்வளவு அவசரமாக வீட்டுக்கு ஓடி வந்தீர்கள்?''

''என்மனம் கேட்கவில்லை, தனம். காலையில் நான் உன்னிடம் கடுமையாகப் பேசிய வார்த்தைகள் என் மனதைக் குடைந்து கொண்டேயிருந்தது கந்தோரில் ஒரு வேலையுமே செய்ய முடியவில்லை. ஓடிவந்து உன்னைப் பார்த்தால்தான் மனம் நிம்மதியடையும் போலிருந்தது. அதனால் அரைநாள் லீவு போட்டுவிட்டு வந்தேன்.

''தெரிந்த விஷயம்தானே. ஆத்திரப்பட்டு எதையாவது பேசுவது, பிறகு அதையே நினைத்து நினைத்து வருத்தப்படுவது. கோபம் வரும்போது அதை நினைத்துப் பார்த்தால், இந்தச் சண்டை சச்சரவு எதுவுமே ஏற்படாதே:''

''என்ன செய்வது தனம். அந்த நேரத்தில் மண்டையில் அது படுவதேயில்லையே! அது சரி காலையில் என்மேல் கோபந்தானே உனக்கு? உண்மையைச் சொல்!''

''கோபமா? ஹூம்! இப்படி ஏதாவது இடி இடித்தால் அதைத் தொடர்ந்து அன்பு மழை பொழியும் என்பது எனக்குத் தெரியாதா என்ன? நெஞ்சில் அடைத்திருக்கும் பாசத்தை அடிக்கடி வெளிப்படுத்தும் ஊற்றுக்கள் இந்தச் சண்டைதானே!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அடி கள்ளி! இந்த ரகசியத்தை நன்ருகத் தெரிந்து வைத்துக்கொடிருக்கிருய் நீ என்ன?''

"இது கூடத் தெரியாவிட்டால் நம் வாழ்க்கை இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கமுடியுமா? இந்த அன்புமழை ஒன்றுதானே வறுமை வரட்சியிலும் நமது வாழ்வை இவ்வளவு பசுமையாகத் தழைக்க வைத்திருக்கிறது."

''உண்மைதான் தனம். என்ஞல் உனக்கு ஒரு சுகமுமில்லே. நான் உன் வாழ்க்கையில் குறுக்கிட்டிருக்காவிட்டால் உன் வாழ்க்கை எவ்வளவோ சிறப்பாக அமைந்திருக்கும்."

''சீச்சீ! இதெல்லாம் என்ன பேச்சு? என் மனம் உங்களுக்குத் தெரியாதா? பனிச் சிதறிலில் இன்பம் காணும் மலர் பருவமழையை எதிர்பார்ப்பதில்லேயே. உண்மையில் மனம் நிறைந்த வாழ்க்கையை நான் இப்போது அனுபவிக்கிறேன். இனி எத்தனே ஜன்மம் எடுத்தாலும் இப்படியான வாழ்க்கையே எனக்குக் கிடைக்க வேண்டுமென்று என் மனம் விரும்புகிறது.''

''அடி, என் செல்லக்குட்டி! என் அன்புக் குட்டி! என் தங்கக்குட்டி! ப்ச்!......ப்ச்!......ப்ச்!......ப்ச்!......''

சோமலிங்கம் மிகவும் தர்மசங்கடத்துடன் குறுகிஞன்.

ஒரு ஐந்து நிமிட நேரம் பொறுத்து, இனி உள்ளே போகலாம் என்ற எண்ணத்துடன், மெல்ல ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான், சோமலிங்கம். அவன் முகத்தில் அசடு வழிந்தது.

உள்ளே, தனலெட்சுமியை மார்போடு சேர்த்து இறுக்கி அணேத்த வண்ணம், அவள் உச்சியில் பதித்த இதழ்களே இன்னமும் எடுக்காமல் மூடிய கண்களுடன் அப்படியே நின்றிருந்தான் அருளம்பலம்.

சோமலிங்கம் கற்பனேயில்கூட உருவாக்க முடியாத ஒரு காட்சி அது.

இத்தனே ஏழ்மையின் மத்தியிலும் இப்படி ஒரு வாழ்க்கையா? 'சொர்க்கம் என்று ஒன்று இருந்தால் அது இதுவாகத்தான் இருக்க வேண்டும்' என்று எண்ணியது அவன் மனம்.

தனலட்சுமி வாழ்க்கையில் தோல்வியடையவில்லே. உண்மையில் தோல்வியடைந்தது நாம் தான். வாழ்க்கை என்ருல் என்ன என்பதைச் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிருள் தனலட்சுமி. இறைவன் அவளேக் காப்பாற்றி விட்டான்.

தெய்வத்தின் சந்நிதியிலே, உண்மை உணர்ந்த, ஒரு நாஸ்திகன் நிற்பதுபோல் கூனிக்குறுகி நின்ருன் சோமலிங்கம். கத்தை கத்தையாகப் பணம் நிரப்பிய அழகிய லெதர் கேஸ் அவன் கைகளிலிருந்து நழுவி அவன் காலடியில் விழுந்தது.

(யாவும் கற்பனே)

ஈழத்தின் முன்னணிக் கவிஞர்
" தீமிலேத்துமிலன் "
– எழுதும் –
முத்தமிழ் ஓவியம்




விரைவில் உங்கள்
" மலர் "
சஞ்சிகையில் ஆரம்பமாகிறது.
★
இப்பொழுதே உங்கள் '' மலர் ''
- பிரதிகளே -
நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடல்

—⁂—

தேடாதே! என்னை; தெரியாது செல்லுமிடம்
பாடாதே! ஒப்பாரிப் பாட்டெதையும்; என் செவிக்குக்
கேளாது! நெஞ்சைக் கிளறிப் பழம் நினைவுள்
ஆழாதே! இப்போ ததனாற் பயனில்லை.
ஆடி முடிக்க அணிந்தவுடற் சட்டையினை
ஓடித் தழுவி உருகாதே! ஊத்தையது!
தொட்டுச் சலவை செய்து தூய்மைப் படுத்தவெனக்
கட்டிச் சுமந்து களைக்காதே! காலமெல்லாம்
குப்பை உலகிற் குவிந்த அழுக்குகளை
உப்பிக் கனக்க உறுவாயில் ஐந்தால்
நிரப்பிக் களைத்திந் நிலையை அடைந்த
சரக்கை எடுத்துச் சலவை செயவல்லோர்
ஆருங் கிடையார் அதனால், அதை எடுத்துக்
கோர நெருப்பிற் கொளுத்தி விடு! இல்லையேல்,
மண்ணுட் புதைத்து மறைத்துவிடு! யாம் பயணம்
பண்ணும் வழியிற் பழகிப் பிரிவதை
என்றன் இழப்பதனால் ஏங்கித் துடிக்குமெனின்
உன்றன் உளத்துக் குணர்த்தி இளைப்பாற்று!
செல்லும் வழியிற் சிறப்பை எதிர்பார்க்கும்
பொல்லா மனதைப் புறக்கணித்துப் போவதனால்
ஏது வரினும் இடராகா! ஓரிரண்டு
போது மனக்குறளி போக்கை இடக்கியதால்
நேர்ந்த இனிய நிகழ்ச்சித் துணிகளைத்
தேர்ந்து மதித்த திருப்தியுடன் செல்கின்றேன்!
நீண்ட பயண நிகழ்வு முடிவடைய
மீண்டும் உனைக்காணும் மெய்ப்பாடு தோன்றினதுள்
உன்கூடும் என்கூடும் ஒன்றத் தழுவுவதன்
முன்கூடும் இன்பம் முதன்மை எனக்கணித்த
அந்த மயக்கம் அணுவளவும் வாழாது;
பந்த முணராத பக்குவத்துள் எல்லாமே
நீயாக நானாக நீயேதான் நானாகப்
போயாகி நிற்போம் பொலிந்து!

—எருவில் மூர்த்தி.




# சிறு கதை ஓர் அறிமுகம்

— எம். எச். சேஹு இஸ்ஸதீன்

[சிறுகதையின் தோற்றம், வளர்ச்சி, முதிர்ச்சி ஆதியனவற்றின் நிர்வாண இதிகாசங்களைக் கணிப்பீட்டு அட்டவணையின் ஆதாரமூலத்துடன் பரிசீலிப்பது இக்கட்டுரையின் நோக்கு அல்ல. ஆனால் அதனைத்தாண்டிய ஓர் உள்நிலைக்கு ஏறி பிரச்னைக்குரிய மனிதமன ரசங்களை அண்டி அங்கும் வெளியும் நிகழும் அந்தரங்கச் சிக்கு முடிச்சுகளை முடிந்தமட்டில் தொய்வித்து அவிழ்ப்பது என்ற சங்கல்பத்துடன் வரையப்பட்ட ஒரு படிப்பு வியாசம் இது எனக் கொள்ளல் மெத்த சிலாக்கியமானது.]

மனித மனம் அன்றாடம் அநுபவங்களைக் குறுக்கறுக்கிறது. சில அநுபவங்கள் — சாதாரணமானவை — மனத்திரையில் நிலைநிற்கத்தவறுவதும் சாதாரணமானதே. சில — ரசமானவை — சில்லறை வெளிப்பாட்டில் திருப்திபெற்று அடங்கிவிடுகின்றன. எஞ்சியவைதான் பிரச்னையின் பொருளாகி முடிவு வேண்டித் தொக்கி நிற்கின்றன; பீறிட்டு வெளிக்கிட்டுச் செலவாகிவிட பொருத்தமான வழிச் சமயத்தைக் காத்திருக்கின்றன. இந்த அநுபவங்கள் — மனித மனத்தை அகலமாய்ப் பரவசிக்கச் செய்திருந்தவையாயினும், ஆழமாய் வியாகுலிக்க வைத்தவையாயினும் - தனிப்பட்ட ஒவ்வொருவனுக்கும் பிறப்பில் இயல்பாகிவிட்ட கலைத்திறனின் — என்று கொள்வோம் — ஏதோ ஒரு வழியால் ஓடவே காத்திருப்பதாய்த் தங்கி விடுகின்றன. சைத்திரிகன் ஓவியத்தையும், புலவன் கவிதையையும், எழுத்தாளன் கதையையும் இப்படியே மற்றவர்கள் தமக்குக் கைவந்த கலையையும் தம் கருத்து வெளிப்பாட்டு ஊடகமாய் கொள்கின்றனர்.



எனவே அழுந்திய அநுபவங்கள் நுணுக்கமாய் உணர்வுகளை மீட்டிவிட அவை மனத்தைவிட்டு பீறிட்டுக் கிளம்புகையில் ஏற்படும் நெரிசலின் வழிச்சல்தான் 'கலை' எனவும் உணர்வுருபமான கலையின் சடப் பிரசன்னம்தான் 'சிருஷ்டிப்பு' எனவும் கொள்ளுவது ஒரு நிறைந்த சமாதானமே. சிறுகதையை, (கதையில் சிறுத்துவிட்டதற்காய் அதற்கு இப்பெயர் ஏற்பட்டது என்று அதனையும் நாவலையும் தோற்ற ஒப்பீட்டைக்கொண்டு அளவிடுதலிலும் பார்க்க, அது தன்னகத்தே சாராம்சித்திருக்கும் கனதியையும் அதன் நீளப் பரிமாணத்தையும் சிந்தைக்கெடுத்தலில் கொடுக்கப்பட்ட பெயராய்க் கொள்ளுதலே முறையானது.) எந்த ஒரு தார்மீகத்தோடும் சிருஷடிக்கும் கலைஞனின் மனப்பதட்டம், அவசத்தின் காரணமாக ஒழுங்கற்று சிதறிக் கிடப்பனவாய்த் தோன்றும் தாரகைகள் லட்சணத்தில், செல்லம் விளையாடும் குட்டி ஆட்டின் பாய்ச்சல் ஒழுங்கில் பூரணமற்ற ஆனால் முற்றுப்பெற்ற ஒரு படைப்பாகக் கற்பித்துக் கொள்ளுதலும் அதுபோன்றதே. இதுவே ஒரு சிறுகதையின் (சகல சாமுத்ரிகாலட்சணங்களோடும் கூடியதன்) பிறப்பு ரகசியம்.

உள்மனதின் சூலத்தில் சேமிக்கப்பட்டவையாய் உறங்கும் உறுத்தும் உணர்வுகள்மேல் மனத்தூடாய் கருநிலைதிரிந்து ஊடகத்துக்கு மேற்கொள்ளும் வழிப்பிரயாணத்தில் பெறும் எலும்பும் சதையும் சிறுகதையின் ஸ்திர மேம்பாட்டையும், விகிதாசார அழகையும் கற்பித்துவிடுகின்றன. இதுவாறு கதை கறுப்பும் வெள்ளையுமாய் ஆகிவிடுகிறது.

இப்படி எழுதப்படும் கதைகள் ஏன் எழுதப்படுகின்றன என்ற கேள்வி அவசியமான ஒன்றே. எத்தனையோ எழுத்தாளர்களிடம் இந்த 'நீங்கள் ஏன் எழுதுகிறீர்கள்' என்ற சனாதனக் கேள்வி இன்னும் கேட்கப்பட்டு வருவதும், அவர்களும் அதற்கு முன்னுள்ள எழுத்தாளர்கள் சொல்லாத ஒன்றிரண்டு காரணங்களையாவது சொல்லிவிட வேண்டுமென்ற தனித்வ—எழுத்தாள—த் துடிப்பில் 'இதற்காகத்தான், இதற்காகவும்தான்' என்று சப்பைக்கட்டுக் கட்டிக்கொண்டு அசம்பாவிதமாக அசட்டுக் காரணங்களை பிலாக்கணித்து விடுவதும் பற்றி எதைக்குறிப்பிடுவது என்று குத்துமதிப்பாக அர்த்தமாகவில்லை. அந்தக் கேள்விக்கு விடையளிப்பவனுதலில் ஒருவன் எழுத்தாள ஸ்தானத்தை அடைந்துவிட்டதாய் தன்னை எண்ணிக்கொள்ள, தான் திருப்தியுற அநுமதிக்கலாம் போலத் தோன்றுகிறது.

மனிதனுக்கு, விசேடமாக எழுத்தாள ஜீவ அணுக்கள் மனத்துள் ஓடிக்கொண்டிருப்பவனுக்கு, தனக்கென்று ஒரு பெருமையை நிலைநாட்ட வேண்டுமென்ற, தன்னைச்சுற்றி பிறரின் கவனம் ஈர்க்

புதுமை- இலக்கிய நோக்குக் கொண்ட இளைஞர் மு. ஹ. சேஹு இஸ்ஸதீன் சம்பிரதாயத்தைப் பொருட்படுத்தாத துணிச்சல் காரர். ''வேதாந்தி'' என்ற புனைபெயரில் பல சிறு கதைகள், கட்டுரைகள் எழுதியுள்ளார். தான் எழுதுவது பிரசுரமாக வேண்டுமென்பதைவிட தன் மனத்தைத் திருப்தி செய்யவேண்டும் என்பதில் அக்கறை கொண்டவர் இவர்.

— ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப் பட்டிருக்கவேண்டுமென்ற ஸ்தாபிக்கப்பட்ட உண்மையிலுள்ள நாட்டம், அறியும்போதும் அறியாதபோதும் ஜீவனுக்கு சுவாசம் நடந்துகொண்டிருக்கிறது என்ற பச்சை உண்மையிலுள்ளதைப் போலுள்ள ஒன்று 'மதன உணர்வு'களுக்கு முதன்மையிடம் வழங்கிய 'சிக்மண்ட் பிராய்ட்' டின் மகத்துவமிக்க சித்தாந்தங்களைப் போலவே 'அட்லரி'ன் 'சிக்கல்' கொள்கைகளும் அடுத்த சாராரிடம் முதன்மைப் பீடத்தை ஈர்ந்துள்ளன. எழுத்தாளனை இலக்கியம் படைக்க உள்ளரங்கமாக நின்று இயக்குவது இந்தச் சிக்கலின் திருப்திகாணுச் சுயமே.

எழுதும் வித்துடையவனுக்கு மனக்கூர்மை மிக அதிகம்தான். (துரதிர்ஷ்டவசமாக — இலக்கிய உலகுக்கு—இன்று அதிர்ஷ்டத்தில் எழுத்தாளர்களாய் பெயர் பெற்றுவிட்டவர்கள் இந்த மனக் கூர்மை விஷயத்தில் விதிவிலக்கு எனக்கொள்க) அறிவதன் கூர்மை உணர்வுகளின் மேன்மையைச் சாடிக் கூட்டுவதில் முடிந்துவிடுகிறது. உணர்வுவாதியான சமர்த்து எழுத்தாளன் வாழ்வின் ஒரு அரும் மிதப்பையும், மூழ்கலையும் ஆழமாய், நாலு வழியிலும் புரிந்து கொள்கிறான். அவன் அவற்றைத் தன் திருப்தி என்னும் நாலுபேர் பொருளாக — உயர்வாகவோ, எதிராகவோ — தன்னைப் பேசச் செய்வதற்குப் படைக்கும் முயற்சியாக்கி விடுகிறான்.

சிறுகதைகள் எழுதப்படுதற்கு இந்தச் 'சிக்கல்' தான் முழு முதற்காரணி என்பது என் துணிபு. இனி எழுதத் தூண்டுவதற்கு ஊக்கிகளாகத் தொழிற்படும் நிலைகள் பல. எழுத்தாளனும் யாரினது, எதனதோ நீண்டகாலத் தயாரிப்பு: படைப்பு. மனித இயல்பு காரணமாகிவிட அவன் தன் கர்த்தாவின் தொழிலைத் தானும் பிரதிபலிக்கிறான். தன்னகத்தே உள்ள விடிவு தேடும் அருபக் கருக்களை இலட்சிய உருவில் பார்க்க வேண்டுமென்ற தணியாத ஆவல் வேக்காடு அவனுக்குப் பின்னின்று உந்த தனக்கு இஷ்டப்படி, தான் விரும்பிய திட்டத்தில், தனக்குப் பிடித்த தார்மீக வாழ்வை அளிக்கும் தன் கர்த்தாவைப் பின்பற்றுகிறான். (ஒரு வேதம், உருவங்கள் வரைவதை இதே காரணத்திற்காகத் தடைசெய்வதாக பலர் சொல்ல நான் கேள்வி.) எதையெல்லாமோ செய்தும் கிடைக்காத அவாச்சியத் திருப்தி இதில் கிடைப்பதாய் தோன்றும் பிரமைக்காக, அந்தப் பிரமை 'நீ எழுதப்பிறந்த ஒன்றே' என்று கடற்திரையாய் சத்திப்பதாய் தோன்றும் ஒரு பலமான விருப்ப நம்பிக்கைக்காக, தனக்குள் நிறைந்துவிடும் இருதுருவ உணர்வுகளை வெளிப்படுத்தி நிரந்தரிக்க வைக்கும் விழைவுக்காக, இதன்மூலம் கிடைக்கும் அற்பப் புகழ்ச்சம்பாத்தியமே அளவிலாது என்பதற்காக, தனக்குரிய ஒதுக்கிடம், அணிகல, ஆயுதம் அனைத்தும் அதுதான் என்பதில் விழுந்துவிடும் நம்பிக்கைக்காக எழுதுகிறான். சிலசமயம் தன்பிடிப்பு,, வெறுப்புகளையும், கொள்கை, கருத்துக்களையும் சரிபார்த்துக்கொள்ளும் சாதனம் இதுவென்பதற்காயும் எழுதுகிறான்.

சிறுகதை தமிழுக்கு இறக்குமதிக்கப்பட்ட சரக்கு என்று மீண்டு உறுதிப்படுத்திக்கொள்வதில் நமக்கு எந்த லாபமுமில்லை. சிறுகதையின் கர்ப்பக்கிருகத்தில் நின்றே நம் ஆராய்ச்சிகளைத் தொடங்குவதாயிருப்பினும் நமக்கு எழும் கேள்விகள் அநேகம். இன்றுள்ள சிறுகதை விமர்சகர்கள் பிரலாபித்துக்கொள்ளும் வரைவிலக்கணம் என்ற ஒன்று சிறுகதைக்கு எப்போது ஏற்பட்டது; யார் அதனை இயற்றும் அதிகாரத்தைப் பெற்றுர்கள்; அல்லது அதுவும் சிறுகதையைப்போலவே இறக்குமதிக்கப்பட்டதா? என்பதெல்லாம் ஆணித்தரக் கேள்விகள்தான். இவைகளுக்கு விடைபகர்வதில் இன்று எந்த உபயோகமும் கிடையாது. ஏனெனில் அநுமதிக்கு வந்து தோன்றி வளர்ந்துவிட்டவையாய் அவைகளில் அதிகமான சட்டவரம்புகள் சரிகாணப்பட்டவையாய் ஏற்றுக்கொள்ளப் பட்டுவிட்டன. ஆயினும்,சரிகாணப்பட்டவற்றிலும் நமக்கு அதிருப்தியளிப்பன அநேகம். அவை சொல்லப்படுவதும் கடனுகி விடுகின்றது.

மொழிகளுக்குப் பின்னர் அவற்றிற்கான இலக்கணம் வரையறுக்கப்பட்டு நிலைத்துவிடுவதைப் போல சிறுகதை இலக்கியத்துக்கும் அதற்குப் பின்னரே இலக்கணங்களும் எல்லைகளும் ஸ்தாபிக்கப்பட்டன. பிரச்னை என்னவென்றால், மொழியின் காவலர்களென்று தம்பட்டமடித்துக்கொண்டு மொழியின் வளர்ச்சியை பீத்தல் பெருமைகட்காய் தடுத்துக்கொண்டிருக்கும் 'இலக்கணுதிகளைப் போல சிலர் அபாக்கியமாக சிறுகதைக்கும் ஏற்பட்டுவிட்டதே. இந்த 'விமர்சன இலக்கணுதிகள்' சிறுகதையின் தரத்தை உயர்த்த முயற்சி எடுத்துக்கொண்டால் தேவலை. சந்தர்ப்பாசந்தர்ப்பங்களில், சிறுகதைக்கென்று இதுவரை அகாரமாய் இல்லாத புதுமையைக் கருவிலும், உத்தியிலும், உருவிலும், நடையிலும், மொழியிலும் புகுத்த முன்வரும்போது அதை எள்ளி நகையாடி ஆசார அனுஷ்டானங்களை, அதீத மத சித்தாந்தங்களை மரபு என்னும் அடைமொழிக்குள் அளவுகோல்களாக்கி நிஷ்டூரித்து விடுகின்றனர். புதுமையைப் புகுத்த நினைக்கும் பிரபல்ய எழுத்தாளன் ஒருவாறு அநுமதிக்கப்பட்டோ, அவமதிக்கப்படாதோ தன் ஏற்கெனவேயுள்ள ஊடாட்டத்தில் தஞ்சம் தேடிக் கொள்கிறான். புதுமையோடு எழுத்துலகில் பிரவேசிக்கும் புது எழுத்தாளன் நிலை பரிதாபகரமாய்ப் போய்விடுகிறது, அனுக்குக் கிடைக்கும் நிருற்சாகம் தான் மாட்டிக்கொண்ட சகதியை ஏக்கத்தோடு நினைக்கவைத்து அவனை 'எழுத்துப் பிரஷ்டமே' செய்து விடுகிறது. இதனல் வீழ்படிவாவதெல்லாம் ஒன்றுதான். மனிதனுக்குள்ள நாலு குணங்களைப்பற்றியும் ஏற்கெனவேயுள்ள நாலு வகையாகவும் ஏற்கெனவேயுள்ள வரைவிலக்கணத்துக்குள்ளடங்க திருப்பித் திருப்பி ரசம் கெட்டு சிறுகதை இலக்கியமாக இல்லாது 'போர்' ஆக ஆகுமட்டும், அதனுல் சிறுகதை இலக்கியம் அழிந்தே போகுமட்டும் எழுதிக்கொண்டிருக்க வேண்டியதுதான். புதுமையை ஏற்றுச் சேர்த்துக் கொள்ளும் மனப்பக்குவமும், சீரணவிரைவும் வராவிட்டால் பொதுவாக இலக்கியத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிவே இல்லை. சகலதையும் ரசிக்க மனிதர்கள் இருக்கிறார்கள் என்பது ஏனோ அத்தியாவசியமான அநேக நேரங்களில் நம்மால் புரிந்துகொள்ள முடியாமல் போய்விடுகிறது. இதனை பத்திரிகை ஆசிரியர்களும் சிறுகதைப் பரிசிலனைக்குழுவும், போட்டிக்குழுவும் மனதில் கொள்ளவேண்டுமென்பது ஒரு திவ்ய வேண்டுகோள்.

'எது சிறுகதைக்குக் கருவாகக் கொள்ளப்படவேண்டும்'? இந்தப் பாரிய கேள்விக்கு அமரர் புதுமைப்பித்தன் "சிலர் இலக்கியத்தில் இன்னது தான் சொல்லப்பட வேண்டும் என்று ஒரு கட்சி இருப்பதாக நினைக்கிறார்கள்' என்ற பொருள்பட்ட கூற்றைத்தான் ஞாபகப் படுத்த வேண்டியிருக்கிறது. எந்த ஒரு உணர்வையும் ஆழமாய் தட்டிவிடும் அனுபவத்தையும் சொல்லலாம் என்றே படுகிறது. மனித வாழ்வை நிரப்பமாக்குகிற அந்த எதுவும் சிறுகதையில் சொல்லப்படலாம். வாழ்வின் பொது அரங்கிலிருந்து + வுக்கு — வுக்கும் மிகத் தூரமாய்த் தவறும் எதுவும் '0' இன் புதுக் கோலங்களும் சொல்லப்படலாம். ஒருவன் அநுபவம் அடுத்தவனதுபோல் இல்லை. எனவே ஒருவன் தனது அநுபவத்தை கலையாக வடிப்பதற்கு யாரின் இடைஞ்சலுக்கும் கலங்கவேண்டாம். பிரசுரத்திற்கென்று தன் கலையின் சீற்றத்தைத் தணித்துக் கொள்ளவும் வேண்டாம். அவன், தன் கதையை, தன் கலையோடு தாராளமாகச் சொல்லட்டும்.

கலைத்தன்மை குறைவற்று இருக்கும்வரை எந்த ஒரு கருவைச் சுற்றி வரையப்பட்ட சிறுகதையும் சிறந்த இலக்கியமே. 'இது ஏற்றுக் கொள்ளப் படுமா' என்ற ஐயம் விட்டு எழுதுபவர்கள் தம்படைப்பைச் சிருஷ்டிக்கவேண்டும்.

✻

---

## "மலர்"

**ஏப்ரல் — மே இதழ்கள் வெளிவரவில்லை.**

தவிர்க்க முடியாத காரணங்களால் "மலர்" ஏப்ரல், மே இதழ்கள் வெளி வரவில்லை. இதனால் ஏற்கனவே சந்தாதரராகியுள்ள "மலர்" வாசகர்களின் சந்தாக்காலம் மேலும் இரண்டு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

— ஆசிரியர்

---

(48ம் பக்கத் தொடர்ச்சி)

(Minute hand) காணவில்லை. என்று வீதி வெளிச்சத்தில் பார்த்தபடி மெலிந்தகுரலில் சொன்னார், நண்பர் லீயோ.

விடுதியில் உள்ள எங்கள் நண்பர்களுக்கு எங்கள் கோலத்தைக்காட்ட விரும்பவில்லை நாங்கள். அவர்கள் எங்களை பரிகசிப்பது மட்டுமல்லாது ஏளனமும் செய்வார்கள். ஆகவே முன்பக்கத்தில் இருந்த சேவயர் நடராஜா அவர்களின் திறந்த வளவில் நின்றுகொண்டு எங்கள் விடுதியைப்பார்த்தபடி நின்றோம். மணி எட்டு அடிப்பது கேட்டது. இது பக்கத்து வீட்டுக்கடிகாரத்தில். முன்விறாந்தையில் இருந்த மாஸ்டர் அறைக்குள்ளே போய் விட்டார். எஞ்சி இருந்தவர் நண்பர் தருமலிங்கம் தான். புதினப் பத்திரிகையைப் பார்த்தபடி இருந்தார் அவர்.

யாரும் பார்க்குமுன் போகவேண்டும் என்று விரும்பிய எங்களை இன்னும் சோதிப்பதாகவே இருந்தது அவர்நிலை. நான் ஒரு யோசனை சொன்னேன். வேகமாய்ப்போய் மெயின்சுவிச்சை அமுக்கி விடுவேன். இருள் மயமாகும். அந்த நேரத்தில் லீயோ ஓடிவந்து விடவேண்டும்.

அப்படியே நான் செய்தேன்.

நண்பர் லீயோ ஓடிவந்து, ஒரு கதிரையில் மோதி, எப்படியோ அறைக்குள் புகுந்து விட்டார்,

நண்பர் தருமலிங்கமும், அறையில் இருந்த மாஸ்டரும் குசினியில் இருந்த ராமனும் 'யாரது யாரது?' என்று அதட்டிக்குரல் கொடுத்துக்கொண்டிருந்த வேளையில் நான் மீண்டும் மெயின் சுவிச்சைப்போட்டுவிட்டேன். எங்கும் வெளிச்சம் வந்து விட்டது. "இது என்ன டொக்டர் வேடிக்கை? இருட்டில் லீயோவை விழுத்துவதற்கோ இந்த வேலை செய்தநீங்கள்?" என்று நண்பர் தருமலிங்கம் கேட்டார். நான் ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்தேன் நல்லவேளை, எங்கள் கோலம் அம்பலமாகவில்லை. அந்தமட்டும் அதிர்ஷ்டம்தான்,

ஒருவேளை இதுதான் பொன்னையா மாஸ்டர் குறிப்பிட்ட அதிர்ஷ்டமோ?

இல்லை, இல்லை குதிரைப்பந்தயத்துக்குப் புறப்படும் போது பொன்னையா மாஸ்டர் உருவத்தில் வந்து எனது நூறு ரூபாயைக் காப்பாற்றியதே அதுதான் அதிர்ஷ்டம் என்று நான் நினைக்கிறேன்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உண்மைச் சம்பவம்**

'உண்மை, கற்பனையை விட விநோதமானது என்பது ஒரு ஆங்கிலப் பழமொழி. உண்மைச் சம்பவங்களை அடிப்படையாக வைத்துப் பின்னப்பட்ட பல சுவாராஸ்யமான கதைகள் ஆங்கில இதழ்களில் அதிகம் வெளிவருகின்றன. ''மலர்'' தரும் உண்மைச் சம்பவக் கதை இது!

# அதிர்ஷ்டம் அழைக்கிறது!

எஸ். சிதம்பரப்பிள்ளை

''மீனாட்சிக்குவந்தது அதிஷ்டம்! 15,000 ரூபாய் எவ்வளவு பணம்! அதுவும் ஒரு சாதாரண தோட்டிக் கூலியாளுக்கு!" என்று சொல்லியபடியே பெருமூச்சுடன் அன்றைய தினசரிப்பத்திரிகையை நீட்டினார் என் நண்பர் லீயோ இம்மானுமேல்.

லீயோ இம்மானுவேலும் நானும் கொழும்பு பம்பலப்பிட்டியில் பெப்பின்லேனில் பொன்னையா மாஸ்டர் 'கிளப்பி'ல் இருந்த காலம்! 1950ம் ஆண்டு ஆவணி மாசம் முற்பகுதி என்று நினைக்கிறேன்.

நாங்கள் இருவரும் அரசாங்க சேவையில் லிகிதர்களாக இருந்தோம். ஒரே அறையில்தான் எங்கள் படுக்கை. லியோ வேலைசெய்யும் காரியாலயத்தில் எப்போதும் குதிரைப் பந்தயத்தைப் பற்றிய பேச்சாக இருக்கும் என்று என்னிடம் எப்போதும் சொல்லுவார். 50 சதம் அல்லது ஒருரூபாய்க்குமேல் தான் பந்தயம் பிடிப்பதில்லை என்றும், அது நல்ல பொழுதுபோக்கு என்றும் என்னோடு எப்போதும் சொல்லிக்கொண்டிருப்பார். அதுமட்டுமல்ல குதிரைப் பந்தயத்தைப் பற்றிய பத்திரங்களையும் அவர் கொண்டு வருவார். குதிரைகளின் பெயரைச் சொல்லுவார் என்னுடைய அபிப்பிராயத்தைக் கேட்பார். தொடுகுறி ாத்சதிரம் பார்ப்பது போல என்னைஏதாவது ஒரு குதிரையின் பெயரைச் சொல்லச் சொல்லுவார். நான் அப்படியே செய்வேன்.

தோல்விஏற்பட்டால் அவர் 'ஒரு ரூபாய்தானே' என்று கவலைப்படமாட்டார்.

அன்று ''ரூ 15,000'' என்று சொல்லி. இவர் விட்ட பெருமூச்சு என்னையும் சற்று சிந்திக்க வைத்தது. விபரம் கேட்டேன். குதிரைப் பந்தய மைதானத்தில் ஒரு ரிக்கட் சதம் 50 ஆக விற்கிறார்களாம். ஒவ்வொரு ஓட்டத்துக்கும் விற்பார்களாம். எத்தனை ரிக்கட் ஆனாலும் வாங்கலாமாம். குதிரை வென்றால் உடனே காசு கொடுப்பார்களாம். அப்படியாக மீனாட்சி என்ற தோட்டி வேலைசெய்யும் ஒருத்திக்கு 50 சதம் வாங்கிய ரிக்கட் ஒன்றுக்கு ரூபாய் 15,000 கிடைத்திருக்கிறதாம். பேப்பரில் அவளுடைய படத்துடன் இருக்கிறது என்று அங்கலாய்த்தார். என்னையும் வாசிக்கச் சொன்னார். குதிரைப் பந்தயத்துக்காக பணம் போடுவது ஒரு சூதாட்டம் என்று ஒரு நாளும் அவர் ஒப்புக்கொள்வதுஇல்லை.

ஒரு நாள் காலை ஒரு பத்திரத்தைக் கொண்டுவந்து ''எந்தக் குதிரை வெல்லும் டொக்டர்'' என்று என்னைக் கேட்டார் லியோ. 'டொக்டர்' என்பதுஎனக்கு வைத்த பட்டப்பெயர்.



உயர் அதிகாரிகள் இலக்கியத் துறையில் ஈடுபடுவது முறைவு மிக அபூர்வமாக, தமிழகத்திலும், ஈழத்திலும் சிலர் இதில் ஈடுபட்டுள்ளனர். எழுத்தார்வம் உள்ள பலர் ஓய்வு இல்லாமையால் இத் துறையை விட்டு ஒதுங்கியிருக்கின்றனர். அவர்களில் ஒருவர் கிழக்குப் பிராந்திய கல்விப் பணிமனையில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு. எஸ், சிதம்பரப்பிள்ளை அவர்கள் தமிழகத்திலிருந்தும், ஈழத்திலிருந்தும் வெளியாகும் முக்கிய சஞ்சிகைகள் அத்தனையையும் தொடர்ந்து வாசித்து வரும் இவர் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் மிகவும் அக்கரை கொண்டவர்.

— ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்வைத்தியருடைய மகன் ஆகையால் தடிமல் இருமல் போன்ற சிறுசிறு பிணிகளுக்கு டொக்டரை அழைக்குமுன் கைமருந்தைப் பாவியுங்கள் என்று நண்பர்களை வற்புறுத்துவேன். அதனால் எனக்கு ''டொக்டர்'' என்ற நாமத்தைச் சூட்டிவிட்டார்கள்.

லீயோ சொன்னபடி நான் ஒரு குதிரையின் பெயரைச் சொன்னேன். காசி ஒருரூபாய் கேட்டார். கொடுத்தேன். எனக்கு ரூ. 5/65 கொண்டு வந்து தந்தார். தானும் ஒருரூபாய் போட்டதாகவும் ரூ. 11/30 கிடைத்ததாகவும், எனக்கு பாதியைத் தருவதாகவும் சொன்னார். முதல் தரத்திலேயே அதிர்ஷ்ட தேவதை என்னை நாடிற்று. நாங்கள் இருவரும் அன்று முதல் இரண்டு ரூபாய்க்கு மேற்படாமல் கிழமை தோறும், சில சமயம் நாள்தோறும், குதிரைப்பந்தயத்துக்காகச் செலவு செய்தோம். அவரே எனக்காக சகலதும் செய்து வருவார். நடுச்சாமத்திலும்கூட குதிரைப் பந்தயக்கதையாகவே ஏற்பட்டுவிட்டது. அடுத்த குதிரைப்பந்தய ஓட்டத்தில் நாங்கள் இருவரும் குதிரைப் பந்தய மைதானத்துக்குப் போய் 50 சதரிக்கட்டுகள் ஒவ்வொரு ஓட்டத்திற்கும் வாங்க வேண்டும் என்று திட்டம் போட்டுக்கொண்டோம்.

''டொக்டர் கேட்டியளே! இன்றைக்கு சனிக்கிழமை தேசாதிபதியின் கிண்ணம் (Governers cup) வேளைக்கு வந்துவிடுங்கள்'' என்று கூறி நண்பர் லீயோ, வழக்கப்படி என்னை ஞாபகப்படுத்தினார்.

''இன்று சம்பளநாள். இரவுக் கோச்சியில் வீட்டுக்குப்போக வேண்டும் என்று லீவு எடுத்திருக்கிறியள் ஒரு மணிக்கேவந்துவிடுங்கோ றேஸ் கோசுக்கு (Race course) போகவேண்டும்'' என்று மீண்டும் சொன்னார். தோட்டி மீனாட்சியின் நினைவு எனது ஞாபகத்துக்கு வந்தது. "சரி 12-35 க்கே வந்துவிடுகிறேன்" என்று சொன்னேன்.

''கவர்ணஸ் கப்'' என்றால் கொழும்பு கலகலக்கும். பத்திரிகைப்புதினங்கள், விளம்பரங்கள் இத் தினத்தைப்பற்றியதாகவே இருக்கும். பணக்காரர்களுக்கு இது ஒரு பொழுதுபோக்கு வறியவர்களுக்கு இது ஒரு சூதாட்டம். திண்டாட்டமும் கூட.

லீயோவும் நானும் எங்கள் விடுதியில்இருந்து ஒன்றரை மணிக்கே வெளிக்கிட்டுவிட்டோம். நான் வேட்டியும், வாலாமணியும் அணிந்துகொண்டேன் லீயோ ஒரு வெண்ணிற சேட்டும் கால் சட்டையும் அணிந்துகொண்டார். புறப்படும்போதே ''காசு கொஞ்சம் கூடுதலாக எடுங்கள் டொக்டர்'' என்றார். அவர் சொன்னதன் பேரில், எனது வலப் பக்கத்து பக்கட்டில் இருந்த மணிபர்சை தொட்டுப் பார்த்துக்கொண்டேன். இடதுபக்கத்து பக்கட்டிலும் ஒரு பத்துரூபா நோட்டை வேறாக வைத்துக் கொண்டேன். அப்போது என் உள்ளுணர்வு பத்து ரூபாய்க்கு மேல் பந்தயம் பிடிக்கவேண்டாம் என்று வற்புறுத்திற்று. ஆகவேதான் அதை புறம்பாக வைத்துக்கொண்டேன். மீண்டும் ஏதோ என்னை இழுத்துத்தடுப்பதுபோல் இருந்தது. நான் கவலைப் படவில்லை.

வெளியே கேற்றினூடாக பொன்னையா மாஸ்டர் வந்துகொண்டிருந்தார். ''நல்ல முழு விசளம் டொக்டர்'' மாஸ்டர் என் அருகில்வந்து "ஒருபத்து ரூபாய் தாருங்கள், ராமனை விறகுவாங்க அனுப்பப்போறன்'' என்றார். லீயோ முன்னுக்குப் போய் விட்டார். எனக்கோ பக்கட்டில் இருந்த அதிர்ஷ்டம் தரும் பத்துரூபாய் நோட்டைக் கொடுக்க மனம் இல்லை. மணி பர்ஸ்சில் இருந்த ஒரே ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து அவரிடம் கொடுத்து, ''மாற்றி எடுத்துக் கொள்ளுங்கள். மறுபடிவந்து மிகுதியை எடுத்துக்கொள்ளுகிறேன்'' என்றேன். என் அவசரத்தைக் கண்ட அவர், 'சரி' என்று ஏற்றுக்கொண்டார். மிகுதியாக பர்ஸ்சில் இருந்தபணம் ஐந்துரூபாய் நோட்டும் சில்லறைகளும்தான். அப்பொழுது லீயோ சொன்னதை நினைத்துப்பார்த்தேன். ஆனாலும் கூடுதலான பணத்திற்கு பந்தயம் பிடிக்க என்மனம் இடம் கொடுக்கவில்லை.

புல்லர்ஸ் வீதிச் (Bullers Road) சந்திக்கு வேகமாக நடந்தோம். றேஸ்கோஸ் போக பஸ் கட்டணம் சதம் /-25. பஸ் நின்றது. நாங்கள் ஏறிக்கொண்டோம். நண்பர் இருவருக்கும் பணம் கொடுத்தார். பக்கத்தில் இருந்த இளம் பெண் என்னைச்சற்று கூச்சப்படுத்துவதுபோல் இருந்தது. ஒரு சிறு புன்முறுவல். பதிலுக்கு நானும் பல்லைக் காட்டினேன். இறங்கும் இடம் வந்தது. இறங்கிக் கொண்டோம். புன்முறுவல் பூத்த இளம் பெண் துள்ளிக்கொண்டு முன்னே போய்விட்டாள். எனக்கு ஒரு சிறு மயக்கம் வந்து தெளிந்தது. அவ்வளவுதான்.

குதிரைப்பந்தய மைதானத்தை வந்தடைந்து விட்டோம். உள்ளேபோக ஒரு ஆளுக்கு மிகக் குறைந்த கட்டணம் ஒரு ரூபாய். நானே இருவருக்கும் ரிக்கட் எடுக்க விரும்பினேன். பக்கட்டில் கையைவிட்டு 'மணிபர்ஸைத்' தடவினேன். என்ன ஏமாற்றம். மணிபர்ஸ் அங்கே இல்லை. புன்முறுவல் பூத்த மங்கை துள்ளி அடித்துக்கொண்டு போனது ஏன் என்று யூகிப்பதற்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. ''என்ன டொக்டர் பார்க்கிறையள்! அவள் தான் போய்விட்டாளே!'' என்று கிண்டல் செய்த நண்பர் லீயோ எனது தயக்கத்துக்கு காரணம் தெரியாது உள்ளே செல்லும் அவசரத்தில் தானே இரண்டு ரூபாயைக் கொடுத்து இருவருக்கும் ரிக்கட்டை எடுத்துவிட்டார். உள்ளே சென்று விட்டோம்.

''என்ன வெட்கக் கேடு லீயோ, என்னுடைய ''மணி பர்ஸை''க்காணவில்லையே! ஒன்றும் ஓடவில்லையே! திரும்புவோமா?'' என்றேன் மெதுவாக. அவரே சற்றுப் பதறிப் போனார். ஆனாலும் இழக்க நேரிட்டது. சொற்பம் தான் என்றும் ஒரு பத்து ரூபாய் நோட்டு அப்படியே இருக்கிறது என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்ததும் ''அதிர்ஷ்டம் உங்களுக்குத்தான். ஒரு ஐந்து ரூபாய்க்கு 50 சத ரிக்கட் வாங்குவம். மற்றதுக்கு "all on" பந்தயம் பிடிப்போம். நானும் அப்படியே செய்கிறேன்'' என்றுர். பத்துரூபா நோட்டை அவரிடம் கொடுத்துவிட்டேன்.

என்னுடைய ஏமாற்றத்திலிருந்து நான் முற்ருக விடுபடவில்லை. மாஸ்டர் சொன்ன ''நல்ல முழிவிசளம்'' ஒரு அளவு பலித்துவிட்டது. நூறு ரூபாய் காப்பாற்றப்பட்டது. ஆனுலும், அன்று புகையிரதத்தில் போவதற்கும் திரும்புவதற்கும் எடுத்த புகையிரதச் சீட்டுப் பத்திரங்கள் இரண்டும் 'பர்ஸ்' ஸுடன் போய்விட்டன என்பதை நினைக்க பெரும் கவலையாக இருந்தது. ''துக்கம் சந்தோஷத்தையும் கொண்டுவரும். பந்தயத்தில் பெரும் பணம்வரப்போகிறது. கவலைப்படாதே!'' என்று என் மனமே என்னைத் தேற்ற ஆரம்பித்துவிட்டது.

அந்த நாட்களில் கொழும்பில் 'கியு' வரிசையில் எவரும் நிற்பதில்லை. என்ன வாங்குவதானுலும் எல்லோரும் ஒரே தடவையில் "நான் முந்தி நீ முந்தி" என்று ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு முன் செல்வார்கள். இதனுல் அனேகர் மிதிபட்டு, நசுக்குப்பட்டு துன்பப்படுவார்கள். 50 சத ரிக்கட் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். லீயோ போனுர். அனேகம்பேர் பின்னுல் இடித்துக்கொண்டு போனுர்கள். நண்பரைக்காணவில்லை. சற்று நேரத்துக்குப்பின் அவர் இருவர் தோள்களின்மேல் நிற்கக்கண்டேன். நான் சிரித்தே விட்டேன்.

எப்படி மேலே தூக்கப்பட்டார் என்றே தெரியாது. ஒரு கணப்பொழுதில் மீண்டும் ஆளைக்காணவில்லை. கைகள் பல தெரிந்தன. எப்படியோ தள்ளுப்பட்டு ரிக்கட் கொடுக்கும் இடத்துக்குப் போய் விட்டார். எட்ட நின்ற என்னை ஒருதரம் பார்த்து வெற்றிப்புன்னகை புரிந்தார். பின் நண்பரை 5 நிமிஷம் வரை காணவில்லை. அனேகர் மேலும் மேலும் ரிக்கட் வாங்க குவிந்துகொண்டிருந்தார்கள். நான் சமீபமாய் போனேன். பின்னுல் இருந்து பலர் வந்த வேகத்தில் தள்ளப்பட்டு விழுந்து விட்டேன். ஒருவர் என் கையில் தன் காலால் மிதித்துவிட்டார். வலி பொறுக்கமுடியவில்லை. எழுந்தேன். மீண்டும் தள்ளப்பட்டேன். வேட்டி உரிந்து விட்டது. கோடிவேட்டியானதால் கிழியவில்லை. ஒருவாறு எழுந்து அப்பால் நகர்ந்து அபாயத்திலிருந்து விலகிவிட்டேன். அப்போதுதான் என்னுடைய செருப்பு ஒன்று அறுந்துவிட்டது. பாவிக்க முடியாது என்பதை உணர்ந்தேன்.

இச்சமயம் எனது நண்பர் ''பிடியுங்கள்! பிடியுங்கள்! ரிக்கட்டுளைப் பிடியுங்கள்'' என்று குரல் கொடுத்தார். பார்த்தேன். என்ன பாவம். தனது இரண்டு கைகளையும் உயர்த்திக்கொண்டு, ஒவ்வொரு கையிலும் சிவப்புநிற ரிக்கட்டுகள் ஏந்தியபடி, வியர்வை உடல் முழுதும் வழிய, சேட்டின் ''கொலர்'' மட்டும் கழுத்தில் தொங்க, வெறும் மேலுடன் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கின படி, பரிதாபமான கோலத்துடன் காட்சியளித்தார் நண்பர் லியோ!

பலர் தன்னுடைய கைகளில் இருந்த ரிக்கட்டுகளைப் பறிக்கமுயன்ருர்களாம். ''நானு பறிகொடுப்பவன். அப்படியே கொண்டுவந்து சேர்த்து விட்டேன்'' என்று பெருமைப்பட்டார், என் நண்பர் லியோ. அவர் கொண்டுவந்தது வியர்வையால் கசங்குப்பட்டு சில பகுதிகள் கிழித்தெடுக்கப்பட்ட ரிக்கட்டுகள். நல்லவேளை. இலக்கங்கள் கிழிபடவில்லை.

எனது நண்பருடைய கோலத்தைப் பார்க்க அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. சேட் முன்பக்கம் பின்பக்கம் எல்லாம் கிழிந்து ஒரு துண்டு மட்டுமே கழுத்தில் தொங்கிக்கொண்டிருந்தது. கால் சட்டை கிழியவில்லை. ஆனுல் அழுக்குத்தழும்புகள் நிறைந்து இருந்தது. அது மற்றவர்களுடைய கால்களால் ஏற்பட்ட குறிகளாய் இருக்கலாம். அவருடைய சப்பாத்து ஒன்றுதான் இருந்தது. மற்றதைக் காணவில்லை. எனக்கு ஏற்பட்ட மனச்சோர்வு அவரைக்கண்டதும் பறந்து போயிற்று. எனது செருப்பு ஒன்று அறுந்தாலும் என்னுடனேயே இருந்தது. ஆனுல் அவரோ சேட்டையும் கிழித்து ஒரு சப்பாத்தையும் இழந்து விட்டார். குதிரைப் பந்தயத்துக்குப் போகிறவர்கள் இப்படித்தான் இன்னல் படுவார்களோ. என்னுடைய முதல் அனுபவம் இது.

அரை மணித்தியாலத்துக்குள் சகல ரிக்கட்டுகளும் விற்பனையாகிவிட்டன. ஒலிபெருக்கிமூலம் வென்றவர்களுடைய எண்களை வாசித்தார்கள். அதிஷ்ட தேவதை மறைந்து விட்டாள். எங்களுடைய எண்கள் வாசிக்கப்படவில்லை. ஆனுல் நாங்கள் ஏற்கனவே திட்டம் இட்டபடி மிகுதியாய் கையில் இருந்த முழுப்பணத்தையும் தேசாதிபதியின் கிண்ணத்திற்காக (Governers Cup) ஓட்டத்தில் பணயம் வைத்தோம். நாங்கள் தேர்ந்தெடுத்த குதிரை பின்வாங்கிவிட்டது.

கடைசி ஓட்டம்வரை காத்திருந்தோம். ஏமாற்றம்தான் மிஞ்சியது. முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு வெளியேறினேம். பம்பலப்பிட்டிக்கு நடையிலேயே சென்ருேம். வழியில் "கடலை கடலை" என்று பையன் கூறினுன். வாங்கிச் சாப்பிட இருவருக்கும் ஆசைதான். ஒரு செம்புக் காசும் கையில் இல்லையே. முனிசிபல் பைப்பில் நீர் ஆகாரம் அருந்தினேம். இருட்டும் சமயம் ஆகிவிட்டது. அதற்குத்தான் காத்திருந்தோம். என்னுடைய வீட்டுக்குப் போகும் பயணம் தானுகவே நின்றுவிட்டது.

பெப்பின்லேனை அடைந்தோம். நன்ருக இருட்டி விட்டது. மின்வெளிச்சம் மின்னிக்கொண்டிருந்தது ''மணி என்ன'' என்று நண்பனைக் கேட்டேன். கையில்இருந்த கடிகாரத்தைப்பார்த்து ''கண்ணுடி உடைந்துவிட்டது, டொக்டர் நிமிடமுள்ளையும்

(45ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைவரும் படிக்கவேண்டிய ஈழத்து இலக்கிய நூல்கள்
## யாழ் இலக்கிய வட்ட வெளியீடுகள்.

1. யாழ்ப்பாணக் கதைகள் — கே. வி. நடராஜன்.
   (சிறுகதைத் தொகுதி)
2. ஈருட்டுக் கைத்தொழில் — க. குணராஜா.
3. ?ங்கரங்கள் — ஐவர் பாடியது.
   (காவியம்)
4. ஈழத்துத்தமிழ் நூல் வழிகாட்டி — இரசிகமணி கனக. செந்திநாதன்.
5. அமைதியின் இறகுகள் — செம்பியன் செல்வன்.
   (சிறுகதைத் தொகுதி)
6. இ?ப் பரிசு — ஏ. ரி. பொன்னுத்துரை.
   (நாடகம்)
7. ஏன் இந்தப் பெருமூச்சு — வி. கந்தவனம்.
   (கவிதை)
8. வெண் சங்கு — இரசிகமணி கனக. செந்திநாதன்.
   (சிறு கதைகள்)
9. கிறீனின் அடிச்சுவடு — அம்பி.
   (கட்டுரை)
10. தேனாறு — காரை செ. சுந்தரம்பிள்ளை.
    (கவிதை)
11. நந்திக்கடல் — செங்கை ஆழியான்.
    (நாவல்)
12. ஆச்சி பயணம் போகின்றாள் — செங்கை ஆழியான்.
    (நாவல்)
13. நாடகம் — ஏ. ரி. பொன்னுத்துரை.
    (நாடகம்)
14. கிரிமலையினிலே — வி. கந்தவனம்.
    (கவிதை
15. அமரத்துவம் — யாழ்வாணன்.
    (சிறுகதைத் தொகுதி)

ஏக விற்பனையாளர்:

# தனலக்குமி புத்தகசாலை
## சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



-6 JUL 1970

மாதவிப் பொன்மயிலாள்
தோகைவிரித்தாள் — வண்ண
மையிட்ட கண்மலர்ந்து
தாதுவிடுத்தாள்.

**கலைக்கெனத் தன் வாழ்வை
அர்ப்பணித்த ஒரு கன்னியின்
இனிய சோகவரலாறு**

ஈழத்துப் பிரபல நாவலாசிரியர்

## "நவம்"

எழுதும்

சுவைமிக்க தொடர்கதை

# கலாபமயில்

**விரைவில் உங்கள் "மலர்" சஞ்சிகையில்
ஆரம்பமாகிறது.**

**இன்றே சந்தாதாரராகச்
சேர்ந்து விடுங்கள்.**

R. Pathmanabhan -6 JUL 1970

அச்சிட்டவர்:- வண. சகோ. ஜோசப் பீ. மதே S. S J.
சந்தோவிக்க அச்சகம், இல. 18, மத்திய வீதி,
மட்டக்களப்பு.
வெளியீடு:- 'மலர்' இலக்கியக்குழு, 21, மத்திய வீதி,
மட்டக்களப்பு.
கௌரவ ஆசிரியர்:- இரா. நாகலிங்கம், 21, மத்திய வீதி,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org